# கல்கி

KALKI 25.4.2004 ரூ.6.00





திர் சயீத்!


லி,
பா.ஜ.க,
அயோத்தி!

-பங்காரு அடிகளார்

உள்ளே...

ண்ணியம் தேடுங்க!

மினி கல்கி




22 - 4 - 2004
வியாழக்கிழமை
அக்ஷயத் திரிதியை
தள்ளுபடி
விற்பனை
ICICI
Credit Card holders can take on-the-spot loan by EMI fa
- NO MAKING CHARGES ON MOST ITE
- WASTAGE 16% ONLY (916 - KDM)
- ORDINARY STONES (NELLORE JEWELLERY) FREE
- 10% OFF ON RUBY, EMERALD, SAF
STONES' COST
- RS. 2000/- OFF PER CARAT IN DIA
COST
- 20% OFF ON 1Gm GOLD JEWELLER
- NO MAKING CHARGES ON SILVERV
- 50% OFF ON MAKING CHARGES OF
EMERALD, DIAMOND JEWELLERY
- SPECIAL GIFTS FOR EVERY PURCH
SWARNAL
S
Jewellery
Diamond, Ruby, Emerald and Bl
Jewellery Collections..
5, Venkatnarayana Road, T.Nagar, Chennai - 17 PH : 52125353, 521

சிலம்புச் சவால்கள் 8

மத்திய சென்னை
மானப் பிரச்னை 20

புதிர் சயீத்! 36

கனவு
மெய்ப்பட
வேண்டும் விமர்சனம் 80

தங்கம் போல்
தண்ணீர்! 81

ம.தி.மு.கவுக்கு
சின்னம்மா ஆதரவு! 88



கல்கி
25.4.2004

# குழந்தைகள் அமைச்ச

குதிரை மீது சிலையாக அமர்ந்திருந்த மன்றோவுக்குக் கேட்டதோ இல்லையோ, அண்ணாசாலை வழியே பேருந்துகளிலும், வாகனங்களிலும் விரைந்த பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தது, நூற்றறுபது சிறார்களின் சீற்றமான குரல்கள்.

"வெல்லட்டும் வெல்லட்டும், குழந்தை உரிமை வெல்லட்டும்!"

"பார்வையாளர் அல்ல நாங்கள், தேசத்தின் பங்குதாரர்."

"எதிரொலிப்பீர் எதிரொலிப்பீர்
எங்கள் குரலை எதிரொலிப்பீர்."

பதினெட்டு மாவட்டங்களிலிருந்து வந்திருந்த இந்தச் சிறுவர் சிறுமியரில் உடல் ஊனமுற்ற குழந்தைகள் மட்டுமல்ல, ஆதிவாசிகளின் குழந்தைகள், சாலையோரச் சிறார்கள், பாலியல் தொழிலாளர்களின் குழந்தைகள், எச்.ஐ.வி பெற்றோரின் குழந்தைகள், என பல தரப்பினரும் இருந்தனர். ஒரு கையில் குடை பிடித்து, மறுகையை மனிதச் சங்கிலியாக்கி, ஒரு மணி நேரம் இடைவிடாது குரல் கொடுத்த இவர்கள், பதினான்காவது நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, தங்களது குரலாகக், 'குழந்தைகள் தேர்தல் கோரிக்கைகளை' வெளியிடக் குழுமியிருந்தனர். குழந்தை உரிமை கூட்டமைப்புகளின் கூட்டணி, இந்த மாறுபட்ட மனிதச் சங்கிலிக்கு ஏற்பாடு செய்திருந்தது. குழந்தைகளின் தேர்தல் கோரிக்கை வெளியீட்டிற்கான அவசியம் குறித்துச் சொன்னார், நிகழ்ச்சியின் அமைப்பாளர் என். ராதா!



• என்.ராதா

"இந்தியாவில் பதினான்கு வயதிற்குட்பட்ட முப்பது கோடி குழந்தைகள் இருக்கிறார்கள். மக்கள் தொகையில் இது மூன்றில் ஒரு பங்கு. இந்தக் குழந்தைகளில் எட்டு கோடியே ஐம்பது லட்சம் பேர், உழைக்கும் சிறார்கள். பதினான்கு வயதிற்குட்பட்ட ஐந்து லட்சம் பெண் குழந்தைகள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப் படுகிறார்கள். பதினொரு கோடி குழந்தைகள் ஏழைகளாகவும், நலிந்த பிரிவினராகவும், சத்துணவு கிடைக்காதவர்களாகவும் இருக்கிறார்கள். இந்திய அரசாங்கமானது, மொத்த தேசிய உற்பத்தியில் 3.9 சதவிகிதத்தை கல்விக்காகச் செலவிடுகிறது. இந்தக் குழந்தைகளில் ஐம்பத்திரண்டு சதவிகித குழந்தைகள், ஐந்தாம் வகுப்பைக்





• கோரிக்கை வெளியீட்டில் மைதிலி சிவராமன்

கூட தாண்டுவதில்லை. முப்பத்தேழு சதவிகிதத்தினர், எட்டாம் வகுப்பை எட்டுவதோடு சரி.

இந்தியாவில் ஒவ்வொரு மாவட்டத்திலும், ஐந்து முதல் பதினெட்டு வயது வரையிலான ஆதரவற்ற சாலைவாழ் சிறார்கள் இருக்கிறார்கள். சென்னையில் மட்டும் இவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து ஐம்பதாயிரம். கிராமம், சிறு நகரம், மாநகரம் என, பாரபட்சம் இல்லாமல் 'ஆண்டுக்கு ஐம்பது லட்சம் பெண் சிசுக் கொலைகள்' என்ற அதிர்ச்சிகரமான எண்ணிக்கையைத் தருகிறது இந்திய மருத்துவக் கழகம்!

"இப்படி சமூக, பொருளாதாரக் காரணங்களால் குழந்தைகள் தங்கள் வாழ்வுரிமையையும், வளர்ச்சிக்கான உரிமையையும், பாதுகாப்பிற்கான உரிமையையும் இழந்து வருகிறார்கள். எனவே குழந்தைகளின் உரிமைகளை மீட்கவும், பாதுகாக்கவும், அவசர அவசியமாய் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் குழந்தைகள் நலன்களுக்காகப் பணிபுரியும் பல்வேறு அமைப்புக்களின் கூட்டமைப்புகள் இணைந்து, குழந்தைகள் உரிமை கூட்டமைப்புகளின் கூட்டணி என்ற அமைப்பை உருவாக்கினோம். இந்த அமைப்பு தேர்தலுக்கு முன்னரும், பின்னரும் செயல்படும். முதல்கட்டமாகத்தான் இந்தக் குழந்தைகள் தேர்தல் கோரிக்கைகள் வெளியீடு" என்று விளக்கினார்.

## கூட்டணி!

இந்தக் குழந்தைகளைக் கொண்டு சென்னையில் இரண்டுநாள் பட்டறை நடத்தி, அதில் குழந்தைகளின் மனங்களில் இருக்கிற ஆசைகளையும், கனவுகளையும் வெளிப்படுத்தி வைத்து கோரிக்கைகளை உருவாக்கியிருக்கிறார்கள். குழந்தைகளின் தேர்தல் கோரிக்கைகளை வெளியிட்டு, "குழந்தைகளின் தேவைகளை நாளைவரை ஒத்திப் போட முடியாது" என்று பேசிய ஜனநாயக மாதர் சங்கப் பிரதிநிதி மைதிலி சிவராமன், "எத்தனை அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளில் குழந்தைகள் நலன் பற்றி குறிப்பிட்டிருக்கிறது?" என்று சாடினார்.

குழந்தைகள் எழுப்பிய கோரிக்கைகளில் "கள்ளச் சாராயத்தை ஒழிக்க வேண்டும்" என்பதும் ஒன்று. மாறாக அவர்கள் பிடித்திருந்த குடைகளை ஸ்பான்சர் செய்திருந்தது, ஒரு வெளிநாட்டு மதுபான நிறுவனம். குடைகளில் அந்த மதுபானத்திற்கு விளம்பரம் வேறு!

கட்டுரை, படங்கள் : ஜெய்


# கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் : சீதா ரவி

ஆசிரியர் குழு : செ. ஏக்நாத் ராஜ், அனுராதா சேகர், ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு : எஸ். ஸ்டீஃபன், பி.ஆர். ராஜன்

தொலைபேசி : 22345622, 23, 24

தொலைநகல் : 044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு : kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு : subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு : info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

**மேல்மருவத்தூர்! செவ்வாடை பக்தர்கள் சங்கமிக்கும் கடல். விசேஷ நாட்களை விட்டுத் தள்ளுங்கள்! சாதாரண நாட்களில்கூட ஆயிரக்கணக்கானவர்கள் மருவத்தூருக்கு வந்து, 'அம்மா' அடிகளாரின் ஆசி பெற்றுச் செல்கிறார்கள்.**

"எதை விதைக்கிறோமோ, அதுதான் முளைக்கும்; விஞ்ஞானம் என்னதான் முன்னேறினாலும் மெய்ஞானம்தான் பெரிது. முடிந்த மட்டும் தர்மம் செய்யுங்க! அதைக் கர்மமா செய்யுங்க; மர்மமா செய்யுங்க! ஒரு மனிதன் மற்றவனுக்கு ஏணியாகவும், தோணியாகவும், ஆணியாகவும் இருக்கணும்!" - நம்மிடம் அடிகளார் சொன்னவை இவை. நாட்டைக் காக்கும் விஷயங்களில் அடிகளாரின் கருத்துகளை அறிய முயன்றோம். "லட்சக்கணக்கான பக்தர்களுக்குத் தெளிவு படுத்தி வழி காட்ட வேண்டிய ஆன்மிகப் பெரியவர் நீங்கள். அந்த வகையில் சில கேள்விகளை உங்கள் முன் வைக்கிறோம்" என்றோம்.



***"ஆன்மிகம் என்றால் என்ன? ஒரு மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய ஆன்மிகப் பாதை எது?"***

"ஒரு மனிதன் வணங்க வேண்டிய வரிசை மாதா, பிதா, குரு, தெய்வம். இந்த வரிசையில் வணங்கினாலே சராசரி மனிதன் ஆன்மிகப் பாதையில் செல்வதாகத்தான் பொருள். அடுத்து நாம் வணங்க வேண்டியது இயற்கை. இதைத்தான் பஞ்ச பூதங்கள் என்கிறோம்."

• • •

# கடல் நீரை சாம்பாரில் ஊற்றிவிட முடியுமா?

• • •

**"ஆன்மிகத்தோடு அரசியலைக் கலக்கும் ஆபத்தான போக்கு நிலவுகிறதே!"**

"நுங்கும் நுரையுமாகப் பொங்கி ஓடும் நதியில், ஆங்காங்கே அசுத்த நீர் வந்து கலக்கக் கூடும். ஆனால் அவை ஒட்டு மொத்த நதியையும் மாசு படுத்த முடியாது. அந்த நீரோட்டத்தில் அழுக்குகள் ஆழப் புதைந்துவிடும். இதன் விளைவாக, போகப் போக நதி சுத்தமாகி விடும்."

**"மதம் மனிதனின் வாழ்வில் எந்த அளவுக்கு முக்கியத்துவம் பெற வேண்டும்?"**

"ஒரே தாய்; ஒரே குலம் - இதுதான் துவக்கத்திலிருந்து மருவத்தூரின் தாரக மந்திரம். மனிதனுக்கு மனதில் மதம் பிடிக்காமல் இருந்தால் போதும். அன்பு, பண்பு, பாசம், இரக்க குணம் ஆகியவைதான் மனிதனுக்குத் தேவை. இன்று மனிதனின் வயிற்றுப் பாடு முக்கியம். எல்லாம் வயித்துக்காகத்தானே! 'மருவத்தூர்ல குறி சொல்றாங்க' என்றார்கள். இல்லை இல்லை... இங்கு 'பரிமாறுவதும் (அன்னதானம்) உண்டு' என்று காண்பித்தோம். மதக் கோட்பாடுகள் மூலம் மனிதனைப் பக்குவப்படுத்த வேண்டுமே தவிர, வன்மத்தையும், விரோதத்தையும் வளர்க்கக் கூடாது."

**"மத ரீதியில் மக்களைப் பிளவு படுத்தி வோட்டுப் பறிப்பது அரசியலாகி வருகிறதே!"**

"நாட்டில் நடக்கும் பல விஷயங்கள், ஒரு எல்லைக்குப் போய் கொண்டிருக்கின்றன. அந்த எல்லையில் முட்டி, மோதி, திரும்பும் நேரம் வந்து கொண்டிருக்கிறது. அப்படித் திரும்பும்போது, மக்களுக்குத் தெளிவு பிறக்கும்; ஞானம்



# பலி, பா.ஜ.க, அயோத்தி!

## -பங்காரு அடிகளார்

பிறக்கும்.''

**''கோயில்களில் பிராணிகளைப் பலி கொடுப்பதற்குத் தடை போட்டுச் சட்டம் கொண்டு வரப்பட்டது. பின்பு அதை நீக்கி விட்டார்கள். இந்த நிலையில் உயிர்வதை கூடாது என்று நீங்கள் பிரசாரம் செய்யலாமே?''**

''மருவத்தூர் பல ஆன்மிகப் புரட்சிகளுக்கு வித்திட்ட இடம். வழிபாட்டு முறைகளில் பெண்களுக்கு இருந்த சில தடைகளை நீக்கி, ஆண்களுடன் சரிசம நிலைக்குக் கொண்டு வந்த இடம். மனிதர்கள் எப்படி இருந்தாலும், அவர்களின் உடம்பில் ஓடும் ரத்தம் சிவப்புதான். அந்த அடிப்படையில் 'எல்லோரும் ஓரினம்' என்ற கோட்பாட்டைச் சொல்லும் வகையில், பக்தர்கள் செவ்வாடை அணிகிறார்கள். முப்பது வருடங்களுக்கு மேலாக, இங்குள்ள வழிபாட்டு முறை என்பது எலுமிச்சை, தேங்காய் மற்றும் பூசணிக்காய் வெட்டுதல்தான். வெட்டப்பட்ட பகுதியில் குங்குமத்தைத் தடவி சிவப்பாக்கிக் கொள்ளுகிறோம். இந்த வழிபாட்டு முறையே வழிகாட்டல்தான்.''

**''பொது சிவில் சட்டம் வேண்டும் என்ற கோஷம் இப்போது மிக அதிகமாகக் கேட்கிறதே?''**

''நமக்கு உடனடியாக மிக முக்கியத் தேவை இயற்கைச் சட்டம். இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் சட்டம். இது தெய்வ சட்டத்துக்கு ஒப்பாகும்.''

**''அயோத்தி பிரச்னைக்கு உங்களிடம் ஏதேனும் தீர்வு இருக்கிறதா? பா.ஜ.க தேர்தல் அறிக்கையில் அயோத்தி பற்றி குறிப்பிட்டிருக்கிறார்களே?''**

''சாம்பார் ருசியாக இருக்கணும்னா உப்பு போடணும். உப்பு கடல் நீரிலிருந்துதான் கிடைக்கிறது. அதற்காக கடல் நீரை நேரடியாக சாம்பாரில் ஊற்றி விட முடியுமா? அதே போலத்தான் சில விஷயங்களும். மனிதர்களின் மனம் பக்குவமாவதற்கும் அவகாசம் வேண்டும். காலம் வரும்வரை பொறுத்திருப்போம்.

''மீடியாவும் பரபரப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. பத்திரிகைகள் நல்ல விஷயங்களைச் சொல்லி மனிதத் தத்துவத்தை வளர்க்கணும். உண்மையைச் சொல்லணும். இப்போது தொலைக்காட்சிச் செய்திகளில் கூட ஒரே விஷயத்தை மூன்று கோணங்களில் பார்க்கிறோம்'' என்று கூறிச் சிரிக்கிறார் அடிகளார்.

- ப்ரியன்

அட்டை, படங்கள்: மீடியா ராமு

"கங்கிராட்ஸ்! மகத்தான வெற்றி! மாபெரும் வெற்றி! இமாலய வெற்றி!" என்று கோஷமிட்டபடி ராகுலின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் குலுக்கினேன். "அடேங்கப்பா! மூணு டெஸ்ட்டில் ரெண்டு இன்னிங்ஸ் வெற்றி! போதாக்குறைக்கு ஒரு நாள் தொடரிலும் வெற்றி!"

"எனக்கென்னவோ ஹீரோ ஹோண்டா விளம்பரம்தான் பிடிச்சிருக்கு... நாற்பது நாட்களுக்கு எதிரிகள்; வாழ்நாள் முழுதும் நண்பர்கள்.. எப்படி?"

"உரக்கச் சொல்லுங்க, பால் தாக்கரே காதுல விழற மாதிரி..!"

"அரசியலை இழுக்காதேப்பா; அப்புறம் பிரசாரத்துக்கு என்னை மேடை ஏத்திப் புடுவாங்க..!"

"அதானே, உங்களைவிட பாபுலர் ஆளு இன்னிக்கு யாரு? கவாஸ்கரின் நான்கு டபுள் செஞ்சுரி ரிகார்டை பீட் பண்ணி, ஐந்து டபுள் செஞ்சுரி அடிச்ச ஒரே இந்திய வீரராயிருக்கீங்களே! சீக்கிரமே முந்நூறு கிளப்பில் சேர்ந்து... அப்புறம் லாராவின் நாநூறையும் தோற்கடித்து...!"

"ராவல்பிண்டி வெயில் ஏற்கெனவே தாங்க முடியலை; நீ என்னதான் ஐஸ் வைச்சாலும் பிரயோஜனப்படாது..!"

"அப்ப மழை வந்து கூல் ஆகுமா பார்க்கறேன்" என்று கூறிவிட்டு புது தில்லி வந்து சேர்ந்தேன்.

★ ★ ★

இந்திய வானிலை இலாகாவில் ஏ.ஸி. அறையில் சௌக்கியமாய் உட்கார்ந்திருந்த அதிகாரியிடம், "அப்பப்பா! இன்னும் எத்தனை நாளைக்கு இந்த வெயில்?" என்று கேட்டேன்.

"ஜூன் முதல் வாரம் வழக்கம் போல் தென்மேற்குப் பருவ மழை ஆரம்பிச்சுடும்; நார்மல் ரெய்ன் ஃபால்" என்றார்.

"போச்சு! போச்சு! நீங்க திருவாய் மலர்ந்து இப்படிப் பேசலாமா? வழக்கம் போல உங்களோட அறிக்கைக்கு நேர் விரோதமாக இயற்கை செயல்பட்டால், இந்தியாவின் கதி என்ன ஆகிறது?" என்றேன்.

"பருவ மழை தொடங்கியதும் முதல் இடி உன் தலையில் விழ" என்று மனம் நிறைந்து ஆசீர்வாதம் செய்தார் அந்த அதிகாரி.

"அதுக்கு முன்னாடியே லால்ஜி டாண்டன் தலையில் இடி இறங்கிடுச்சு" என்று கூறிவிட்டு, அவசரம் அவசரமாகப் பிரதமரைப் பார்க்கப் பறந்தேன்.

★ ★ ★

ஆமதாபாத்தில் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த பிரதமர், வரவேற்புரை முடிய காத்திருந்த நேரத்தில் பேச்சுக் கொடுத்தேன்.

"சத்திஸ்கரில் பேசும்போது உங்களுக்கு ஏகப்பட்ட வாய்க்குழறல் இருந்திருக்கே? ஜன்ஜ்கிர் என்பதற்குப் பதிலா ஜகாங்கிர்ன்னு சரித்திர காலத்துக்குப் போயிட்டீங்க; மருமாளுக்கு கல்யாணம் நடந்து,



# செய்திகள் திரிப்பது செம்பியன்

அவர் இப்ப கருணா சுக்லா என்பதை மறந்து, கருணா வாஜ்பாயின்னு குறிப்பிட்டீங்க... அதுதான் போகட்டுமென்னால், அவரை ராஜ்ய சபாவுக்கு தேர்ந்தெடுக்குமாறு வாக்காளரைக் கேட்டுக்கிட்டீங்க..!"

"ஆமாம்பா, ஆமாம்; லக்னோவுல நடந்தலை ஆளைக் கொஞ்சம் உலுக்கிடுச்சு...."

"இலவச சேலை; இருபத்திரண்டு பெண்கள் மரணம் விவகாரம்தானே... தப்பு நடந்தது நடந்து போச்சு, பெரிய்ய தப்பு. அதை நீங்க கௌரவமா ஒப்புக் கொண்டு, டாண்டனைக் கழற்றி விட்டிருந்தால் சரியாப் போயிருக்கும். ஆனா, உங்க நண்பரை விட்டுக் கொடுக்காமப் பேசிட்டீங்க... இப்பப் பாருங்க, பி.ஜே.பி. கட்சிக்கு எலெக்‌ஷன் கமிஷன் நோட்டீஸ் அனுப்பிச்சதோட நில்லாம, லால்ஜியை அரெஸ்ட் பண்ணி, கேஸ் பதிவு செய்து, அடுத்த நடவடிக்கை எடுனு உத்தரவு போடுது. கேவலமில்லியா?"

வாஜ்பாயி தலை தாழ, "இந்த சேட் மலானி வேற..." என்றார்.


"அவர் பேரு ஜெத்மலானிங்க... அதான் வாபஸ் வாங்கிட்டாரே..."

"தோர்தல்ல என்னை எதிர்க்காம வாபஸ் வாங்கிட்டார். மகனுக்கு உடம்பு சரியில்லைன்னு லண்டன் போயிருக்கார். ஆனா, 'கடைசி நேர தேர்தல் பிரசாரத்தின்போது திரும்பி வருவேன்'னு பயமுறுத்தியிருக்காரே..."

"கேள்விகள் வைச்சிருக்காராம்; ரகசியங்களை உடைப்பாராம்..."







"அவர் கேள்விகள் எல்லாம் ஏ.கே.47 ரகம்ப்பா!"

"ஏ.கே.47 ஊழல் பற்றியே கேள்விகள் வைச்சிருக்காரோ, என்னவோ..."

"இத்தனை நாளா என் நல்ல நண்பரா இருந்துட்டு..."

"தப்புங்க, உங்கள் தவறுகளை எடுத்துக்காட்டி திருத்தறவன்தான் உங்கள் நிஜமான நண்பன். உங்கள் தவறுகளுக்கு துணை போய், உங்களைச் சிக்கலில் மாட்டி விடுறவன் இல்லை. லால்ஜியை விட, ஜெத்மலானிதான் உண்மை நண்பன். எங்க திருவள்ளுவர் என்ன சொல்லியிருக்கார்ன்னா..."

"தெரியும்பா... தெரியும்.. நான் ஆங்கில மொழி பெயர்ப்பில் படிச்சிருக்கேன்... ஆளை விடு....!"

★ ★ ★

அவரை மேலும் நோகடிக்க விரும்பாமல் சென்னைக்கு வந்தால் ஏர்போர்ட்டில், அட, ரஜினி!

"எங்க கிளம்பிட்டீங்க...?"

"வேற எங்கே? மனசு கெட்டா ஹிமாசலம்தான்; குருநாதர் சந்நிதிதான்!"

"கொஞ்சம் குழப்பம் இருக்கத்தான் செய்யுது. வன்முறையை எதிர்க்கறீங்க, சரி; பா.ம.க. வேட்பாளர்களுக்கு தோல்விதானாம்... அதுவும் ஏற்கலாம்; 'நல்லா யோசிச்சு வோட்டுப் போடுங்க..' ஓ.கே.; அதுக்கும்மேல போய் 'என் வோட்டு பி.ஜே.பி. அணிக்கே... ஏன்னா, பி.ஜே.பி. தான் நதி நீர் இணைப்பு பற்றி தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கு..."

"அது தப்புத்தான்; இப்பத்தான் ஒப்புக்கிட்டேன்; கலைஞர் ரொம்ப நாளாவே சொல்லியிருக்கார்; தேர்தல் அறிக்கையிலும் சேர்த்திருக்கார்."

"அவருக்கும் முன்னாடி உதயமூர்த்தி, என். மகாலிங்கம், கே.எல்.ராவ்..."

"எப்படியோ காரியம் நடந்தா சரி; காவிரியில் கங்கை பாய்ந்தால் சரி..."

"உங்களோட ஒரு கோடிக்கு இப்போதைக்குத் தேவை ஏற்படாது. பாங்கில் பத்திரமா ரொம்பக் காலம் குட்டி போட்டுக்கிட்டு இருக்கும்... போய் வாங்க..!" என்று விமானத்துக்குள் வழியனுப்பி வைத்தேன் ரஜினியை.



**க்**ளீவ்லேண்ட் கல்சுரல் அல்லயன்ஸுக்காக, 'சிலப்பதிகாரம்', கவிதை - நாடகமாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. பல நாட்டிய நாடகங்களை அமெரிக்காவில் மேடை ஏற்றிய உமா கணேசன்தான், இதையும் தயாரித்திருக்கிறார். இதன் தயாரிப்பில் முக்கியப் பங்கு கொண்ட கலைஞர்களிடம், 'உங்களுக்குச் சவாலாக அமைந்த பகுதி எது?' என்று கேட்டோம்.


**மேடைப் பொருள்களை உருவாக்கிய தீபிகா நாகராஜ் :**

எல்லாவற்றையுமே கனம் இல்லாத லைட்வெயிட் பொருள்களாகச் செய்ய வேண்டியிருந்தது. விதான வளைவுகள், பல்லக்கு, குடை, மிருதங்கம், சிம்மாசனம் என்று எதையுமே கையடக்கமாக மாற்றி பெட்டிக்குள் வைப்பது மாதிரியான அமைப்பில் வடிவமைக்க வேண்டியிருந்தது.

**கவிதை வரியில் வசனம் எழுதிய கனிமொழி :**

முதலில் இலக்கியம் ஒன்றை, எல்லோருக்கும் புரிகிற அளவில் எளிமைப்படுத்துவது என்பதே சவால்தான். நான் பெரிய சவாலாகக் கருதியது, 'கானல்வரி' பகுதியில்தான். கோவலன் ஏன் கோபப்படுகிறான் என்று சிலப்பதிகாரத்தில் வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை. அவன் சந்தேகத்தைப் புரிந்து கொள்ளச் செய்ய வேண்டும் என்பது கடினமாகத்தான் இருந்தது.





# சிலம்புச் சவால்கள்!



**இசையமைத்த பாம்பே ஜெய்ஸ்ரீ :**

தொண்ணூறு சதவிகிதம் கர்நாடக இசையை அடிப்படையாக வைத்தே இசையமைக்க முடிந்தது. கவிதை வாசகங்களையும், வரிகளையும் அந்த இசை வடிவத்துக்குள் கொண்டு வருவதும் சவால்தான்.

**நடனக் கலைஞர் மகாலட்சுமி நரேந்திரா:**

'சிலப்பதிகாரத்தில் எல்லாமே அவசரப்பட்டு எடுக்கப்படும் முடிவுகள் நிறைந்த நிகழ்ச்சிகள்தாம். தீப்பிடிக்கிற நிகழ்ச்சி, சந்தை எல்லாவற்றையுமே, நரேந்திரா யோசித்து யோசித்து அமைத்தார். கண்ணகி ஒரு விதத்தில் உயர்ந்தவள் என்றால், மாதவியும் உயர்ந்தவள்தான் என்று உருவாக்கினோம்.

**ஆடை, அணிகலன்கள் உருவாக்கிய லட்சுமி ஸ்ரீநாத்:**

இதிகாசத்தில் எப்படி இருந்திருக்கும் என்று மிகச் சரியாக யோசித்து, ஆடைகள் எல்லாம் தயாரிக்க வேண்டியிருந்தது. அதற்காக நிறையப் புத்தகங்கள் படிக்க வேண்டியிருந்தது.

**ஆர்ட் டைரக்டர் ஏ.வி. இளங்கோ:**

பிரம்மாண்டமான சீன் மதுரை. 24 அடிக்கு 16 அடி. மதுரை தீப்பற்றி எரியும் போது ஒவ்வொரு துணியாக இழுத்துப் போடும்படி அமைக்க வேண்டியிருந்தது.

**- சாருகேசி**

படங்கள் : **ச.பி. சத்யஜித்**

"அ.தி.மு.க.காரர்களிடம் பண உதவி கேட்கவில்லை. சுவரில் பிரசாரம் செய்யும் போது வாஜ்பாய் பெயரையும் படத்தையும் போடுங்கள் என்றுதான் சொல்லுகிறோம். அதற்கே பிரச்னையாயிருக்கிறது" என்கிறார் அரக்கோணம் நகர பா.ஜ.க. தலைவர் "பாபா" பாபு.

இவர் இப்படிச் சொல்ல காரணமிருக்கிறது. அ.தி.மு.க. பிரமுகர்கள் பா.ஜ.க. பிரமுகர்களைக் கலந்தாலோசிக்காமலேயே தேர்தல் பணி செய்கிறார்களாம். மேலும், சமீபத்தில் அரக்கோணத்தில் பேசிய எஸ்.எஸ்.சந்திரன், "பி.ஜே.பி. என்றால் யாருக்குத் தெரியும்? வி.ஜி.பி. என்றால்கூட தமிழ்நாட்டில் எல்லோருக்கும் தெரியும்

சென்ற முறை இங்கு தி.மு.க. கூட்டணியின் சார்பாக நின்று வெற்றி பெற்றவர் ஜெகத்ரட்சகன். இந்த முறை தொகுதி பா.ம.க.வுக்கு ஒதுக்கப்பட, டாக்டர் ராமதாஸ் அரசியலுக்குப் புதுமுகமான ஐ.ஏ.எஸ். அதிகாரி வேலுவை நிறுத்தியிருக்கிறார். வேலுவுக்குச் சவால்விட்டு களத்தில் நிற்பவர், அ.தி.மு.க.வின் அடிமட்டத் தொண்டர் என். சண்முகம். விவசாயம், நெசவு, இரண்டும் தான் முக்கியத் தொழில்கள் இங்கு.

தொகுதியில் பிரச்னைகளுக்குப் பஞ்சமே இல்லை. கிராமப் புறங்களில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம், மழையில்லாததால் படுத்துப் போன விவசாயம், ராணிப்பேட்டை தொழில் வளாகத்தில் மூடியிருக்கும் தொழிற்சாலைகள், விசைத்தறி தொழிலுக்குப் போடப்பட்டுள்ள சென்வாட் வரி, தோல் தொழிற்சாலைகளின் கழிவுநீரால் மாசுபடும் சுற்றுச் சூழல். தொகுதியெங்கும் அ.தி.மு.க. மீது பரவலான அதிருப்தி இருக்கிறது.

"தி.மு.க. ஆட்சியில் கொடுக்கப்பட்டு வந்த பல்வேறு உதவித் தொகைகளை - குறிப்பாக திருமண உதவித் திட்டம் - நிறுத்திவிட்டார்கள். எங்க

• வேலு



# ரஜினி செல்வாக்கு

பி.ஜே.பி. என்பது அரசியல் கட்சி என்று அறிமுகம் செய்து வைத்தவர் புரட்சித் தலைவர்தான்" என முழங்கினாராம்!

"இந்த அணிக்கு வோட்டு வாங்கித் தரப் போகிறவர் வாஜ்பாய்தான். ஆனால் அவரை முன்னிறுத்தாமல் அ.தி.மு.க. பிரசாரம் செய்கிறது" என்று வருத்தப்பட்டார் பாபு.

அரக்கோணம் தொகுதியில் கிட்டத்தட்ட பன்னிரண்டு லட்சம் வாக்காளர்கள். வன்னியர்களும், முதலியார்களும் பெரும்பான்மையாக இருக்கிறார்கள்.


வோட்டு மாம்பழத்துக்குத்தாங்க" என்கிறார் பல்லூர் காலனியைச் சேர்ந்த சுப்பராயலு.

"நான் இந்தத் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டால், ஒட்டு மொத்த முன்னேற்றத்திற்காக பல திட்டங்கள் வைத்திருக்கிறேன்" என்கிறார் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியான வேலு. "நான் மாவட்ட ஆட்சியராக இருந்து தேர்தல்களை நடத்தியிருக்கிறேன். மக்களைச் சந்திப்பது எனக்குப் புதிது அல்ல, ஆனால்

# ஜீரோவா?

வோட்டுக் கேட்பது புதிய அனுபவம் தான்" என்கிறார் வேலு.

இந்தத் தொகுதியின் தேர்தல் பொறுப்பாளர், தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராணிப்பேட்டை காந்தி.



* பிரசாரத்தில் வேலு

பெயர்தான் காந்தியே தவிர, எதிர் அணியினர் செய்யக்கூடிய எந்த வம்புக்கும் ஈடு கொடுக்கவல்ல தகுதியான நபர் இவர்தான், என்று தொகுதியில் அபிப்ராயம் இருக்கிறது. "எங்க அணி வேட்பாளர் அற்புதமான வேட்பாளர். இந்தத் தொகுதியில் பெண்கள் எங்களுக்கு முழு ஆதரவு கொடுப்பார்கள். அந்த அளவுக்கு ஆளும் கட்சிமீது அதிருப்தி இருக்கிறது. இதைத் தவிர, சோனியா பிரதமராவதை அவர்கள் விரும்புகிறார்கள்" என்கிறார் காந்தி.


"ரஜினி பா.ம.க.வை தோற்கடிக்கச் சொல்லியிருக்கிறாரே?" என்றபோது, "இந்தத் தொகுதியில் ரஜினி செல்வாக்கு ஜீரோ" என்றார் காந்தி!

அ.தி.மு.க. வேட்பாளர் என். சண்முகம், தொகுதியின் காவிரிப்பாக்கம் பகுதியைச் சேர்ந்தவர். ஏழ்மையான குடும்பம். 1984ல் ஒருமுறை சோளிங்கர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இவரது வெற்றிக்குத் தோள் கொடுக்கும் பொறுப்பேற்றிருப்பவர்கள், அமைச்சர் பாண்டுரங்கன் மற்றும் ராஜ்யசபா உறுப்பினர் ஜோதி.

கொளப்பாக்கம் நேர்க்காணலுக்குப் பிறகு கட்சிக்காரர்களிடையே உரசல். இதனால் ஒருவர் காலை, ஒருவர் வாரிவிட முயற்சி நடக்கிறது.

''பிரச்னைகள் இருக்கு. ஆனால் எனக்காக எல்லோரும் ஒருங்கிணைந்து வேலை செய்யறாங்க'' என்கிறார் சண்முகம்.

"புரட்சித் தலைவியை மட்டுமே நம்பி நிற்கிறேன். நான் வணங்கும் யோக நரஸிம்மரும், ஆஞ்சநேயரும் வெற்றிக்குத் துணையிருப்பார்கள். நான் நூறு சதவிகிதம் கை சுத்தமானவன். தொகுதியில் எங்கு வேண்டுமானாலும் விசாரித்துப் பாருங்கள். உங்கள் பத்திரிகை எப்படி நேர்மையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறதோ, அது போலத்தான் நானும்'' என்று சொல்லி, நெகிழ வைக்கிறார், நீண்ட நாளைய கல்கி வாசகரான சண்முகம்.



* சுப்பராயலு




* சண்முகம்

புதிய நீதிக்கட்சி சார்பில் குழந்தை வேலு என்பவர் நிற்கிறார். இவரும் அ.தி.மு.க. வேட்பாளரும், முதலியார் வோட்டுகளை பகிர்ந்து கொள்ளக் கூடும். தொகுதியின் ஆறு சட்டமன்றத் தொகுதிகளுள், ஐந்தில் ஆளும் கட்சி வென்றிருக்கிறது. ஆனால் பாராளுமன்றத் தொகுதியைப் பறிக்க, அ.தி.மு.க. கடுமையாகப் போராடவேண்டியிருக்கிறது.

- ப்ரியன்

படம் : மீடியா ராமு


FREE!
A BLOW-UP POSTER
WITH THIS ISSUE!
A
HOLIDAY
BONANZA!
CRICKET
SPECIAL
GOKULAM
The magazine for children
MAY 2004 Rs.8/-
BOOK
YOUR COPY
TODAY
For Subscriptions mail to : Gokulam, Kalki Buildings,
47 NP Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai-600 097
E-mail:subscription@kalkiweekly.com




## மோடி வளர்க்கும் முரட்டு அரசியல்!

குஜராத் பெஸ்ட் பேக்கரி வழக்கை மஹாராஷ்டிரத்துக்கு மாற்ற வேண்டும் என்று உத்தரவிட்டுள்ள உச்சநீதிமன்றம், குஜராத் அரசையும் வன்மையாகக் கண்டித்திருக்கிறது. நீதி பரிபாலனத்தில் அவ்வரசு தலையிட்டதற்காக, கண்டனம் செய்திருக்கிறது. அநீதிக்குத் துணை போன குஜராத் உயர்நீதி மன்றத்தையும், சாட்டையடிக்கு நிகரான சொற்களால் உச்சநீதிமன்றம் கண்டித்திருக்கிறது.

இந்தக் கண்டனமும் ஆணையும் மோடியின் இமேஜை மட்டுமின்றி, பா.ஜ.க.வின் இமேஜையும் ஆட்டம் காணச் செய்கின்றன.

"கோத்ரா துர்ச்சம்பவம் மட்டும் நிகழ்ந்திராவிட்டால் குஜராத் கலவரங்களே நிகழ்ந்திருக்காது" என்று சில தினங்களுக்கு முன்தான் நமது பிரதமர் பொதுக்கூட்டத்தில் பேசினார். குஜராத் கலவரங்களுக்கு மூல காரணம், கோத்ரா பயங்கரம்தான் என்பதை மறுக்க முடியாது. அந்த நிகழ்வு, வன்மையான கண்டனத்துக்குரியது ; ரயில் பெட்டிகளைக் கொளுத்தியவர்கள் மிகக் கடுமையான தண்டனைக்குரியவர்கள். ஆனால், கோத்ரா சம்பவம் போன்ற ஒரு நிகழ்வைத் தொடர்ந்து, குஜராத் போன்ற ஒரு மாநிலத்தில் மதக் கலவரங்கள் நிச்சயமாக எழும் என்பதை, குஜராத் அரசும் காவல் துறையும் எதிர்பார்த்து, தடுப்பு நடவடிக்கைகளையும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்திருக்க வேண்டும்.

ஆனால் குஜராத் அரசு, அந்தக் கடமையில் தவறியதோடல்லாமல், கலவரங்களை மறைமுகமாகத் தூண்டியிருக்கிறது. குஜராத் காவல்துறை, கோர சம்பவங்களைக் கைகட்டி வேடிக்கை பார்த்திருக்கிறது. இந்தக்




கல்கி



2004 ஏப்ரல் 25
தாரண சித்திரை 13
மலர் : 62
இதழ் : 39

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




குற்றச் சாட்டுகள் உரிய ஆதாரத்துடன் நீதிமன்றத்தில் பதிவாகின.

வெகு விரைவிலேயே சாட்சிகள் பல்டி அடித்ததும், குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமில்லை என்று ஆகிப்போனதும் அனைவரும் அறிந்த கதை.

இப்போது வழக்கு மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.


ரொட்டி தயாரிக்கும் பேக்கரியில் குழந்தைகள், பெண்கள் உள்பட, பதினாலு பேர் உயிரோடு எரிக்கப்பட்ட வழக்கு! கோத்ராவைத் தொடர்ந்து குஜராத்தில் நடந்த கோர கிருத்யங்களில் ஒரே ஒரு சம்பவம்தான் இந்த பெஸ்ட் பேக்கரி வழக்கு. இதைத் தவிர, வேறு எத்தனையோ அக்கிரமங்கள் நடந்துள்ளன. நாரோடா பாட்டியாவில் இருநூறு பேர் கொல்லப்பட்டனர் ; பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்குட்படுத்தப்பட்டனர். ஒது கிராமத்தில் இருபத்தொன்பது பேர் உயிருடன் எரிக்கப்பட்டனர். ஃபதேபுராவில் பெண்கள் பாலியல் பலாத்காரம் இழைக்கப்பட்டு, நிர்வாணமாகக் காவல் நிலையத்துக்கு நடத்திச் செல்லப்பட்டனர். சர்தார்புரா கிராமத்தில், ஒரே வீட்டில் 29 பேர் கொல்லப்பட்டனர். - இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

'நீதி பரிபாலனம் துஷ்பிரயோகமாகியிருக்கிறது, நீதியே இழிவுபடுத்தப்பட்டிருக்கிறது' என்று உச்சநீதி மன்றம் கூறியிருப்பதைக் கேட்டு, நியாயத்துக்கு நரேந்திர மோடி பொதுவாழ்வை விட்டே அகல வேண்டும் ; குறைந்தபட்சம் பதவியையாவது ராஜினாமா செய்ய வேண்டும்.

ஆனால், நடப்பது என்ன...? மோடி தமது வழக்கமான பாணியில் தேர்தல் பணிகளைத் தொடர்கிறார். பிரதமரோ, பிற பா.ஜ.க. தலைவர்களோ, உச்சநீதிமன்ற ஆணையை கிள்ளு கீரைக்கும் குறைவாய்த்தான் மதிக்கிறார்கள்.

போதும் போதாதற்கு, 'அன்ஹாத்' என்ற **(ANHAD - Act Now for Harmony and Democracy)** தன்னார்வ அமைப்பின் தொண்டர்களை, அண்மையில் பா.ஜ.க., வி.எச்.பி. தொண்டர்கள், போட்டு அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். பரோடாவில் நடந்த இச்சம்பவம், பா.ஜ.க., வி.எச்.பி.யின் முரட்டு அரசியலுக்கும், மாற்றுக் கருத்துகளைச் சகியாத போக்குக்கும் சாட்சியாக அமைந்திருக்கிறது. அன்ஹாத் அமைப்பைச் சேர்ந்த பெண்களிடம், எழுதவே கூசும் அளவுக்கு, மிக அநாகரிகமாக நடந்து கொண்டிருக்கிறார்கள், பா.ஜ.க., வி.எச்.பி. தொண்டர்கள்.

ஒரு பொதுவிடத்தில் இத்தனைக் கேவலமாக நடந்து கொள்ள, அவர்களுக்குத் துணிவைத்




தருவது எது...? குஜராத் கலவரங்களின்போது வெறியாட்டம் போட்டவர்களுக்கு எது துணிவு தந்ததோ, அதேதான் அன்ஹாத் அமைப்பினரைத் தாக்கியவர்களையும் தூண்டியிருக்கிறது. அரசாங்க அமைப்பின் மௌனமான ஆதரவு தங்கள் வெறியாட்டத்துக்கு உண்டு, என்கிற தைரியம்தான் அவர்களை இயக்கியிருக்கிறது.

"அன்ஹாத் அமைப்பு, ஹிந்து உணர்வுகளைப் புண்படுத்தும் விதமாகப் பேசுகிறது; சங் பரிவார் பற்றிக் கேவலமாக அறிக்கை வெளியிட்டது - அதனால்தான் இந்த ரகளை" என்று வி.எச்.பி. தரப்பில் வாதாடுகிறார்கள். அப்படி ஒரு தவறு நடந்திருந்தாலும், அதற்காக அதைவிடக் கொடிய தவறு இழைப்பதை ஒருக்காலும் நியாயப்படுத்த முடியாது. அநாகரிகமான முறையில் பெண்களை விமர்சிப்பதும், தாக்குவதும், அவர்களுடைய ஆடைகளைக் கிழிப்பதும், மன்னிக்க முடியாத கொடுமை.

இந்தச் சம்பவத்தை பா.ஜ.க. தலைவர்கள் கண்டிக்கவில்லை என்பது, கவனத்துக்கும் கவலைக்கும் உரியது.

வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளின் அடிப்படைவாதமும், பிறமதச் சகியாமையும் பா.ஜ.க.வுக்குள் மேலும் மேலும் வலுவாக ஊடுருவி வேரூன்றிக் கொண்டிருக்கின்றன.

பா.ஜ.க. ஆட்சியில் அமர்த்தப்பட்டால், சிறுபான்மையினரை அரவணைத்துச் செல்லும் நிர்ப்பந்தம் அதற்கு ஏற்படும்; இந்தியா முன்னேறும் என்ற நம்பிக்கை, ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது. அந்த நம்பிக்கை தற்போது தவிடுபொடியாகிவிட்டது.

'சிறுபான்மையினர் நலனைக் கருதி அரவணைக்காது போனால் என்ன... பெரும்பான்மையினர் நலன்தான் இந்தியாவின் நலன்' என்று ஹிந்து அடிப்படைவாதிகள் வெளிப்படையாகவே பேசுகிறார்கள். இதைக் காட்டிலும் கஷ்டகாலம் இந்தியாவுக்கு வேறு இருக்க முடியாது. பொருளாதாரத்தில் முன்னேறிவிட்டுச் சகிப்புத்தன்மையைப் பறிகொடுப்பது, தங்க ஊசியால் கண்ணைக் குத்திக் கொள்கிற மாதிரிதான்.

வரவிருக்கும் தேர்தலில் வாக்காளர்கள் இதை மறந்துவிடக்கூடாது. சிறுபான்மையினருக்கு இன்று இழைக்கப்படும் புறக்கணிப்பும் கொடுமையும், நாளை சமுதாயத்தில் எப்பிரிவினருக்கும் நிகழலாம்.

# ஸ்ரீ டிராவல்ஸ்

194 - A. முதல் மாடி, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை - 6.
Ph:28516799, 28513109, 28411522, 55870482
E-Mail:sritrave@satyam.net.in Web:www.sreetravels.com

**பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளுக்குப்பின் நிம்மதியாக உங்கள் கோடை விடுமுறையை குடும்பத்துடன் குதூகலமாக கழித்து மகிழுங்கள்.**

கீழ்க்கண்ட எமது இரண்டு சுற்றுலாக்களிலும் எல்லா நாட்களிலும் எமது சுற்றுலா நிர்வாகிகளும், சமையல் குழுக்களும் அனைத்து இடங்களிலும் இருப்பதால், 15 அல்லது அதற்கு மேற்பட்ட குழுவினராக வருபவர்கள், தங்கள் தேவைகளுக்கேற்ப உங்கள் தேதிகளை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

**சிம்லா - குலு - மணாலி சுற்றுலா**

சென்னை - டில்லி - சண்டிகார் - சிம்லா - குலு - மணாலி - டில்லி - சென்னை.
பயணத் தொகை: ரூ. 4,900/- + ரயில் டிக்கெட்.
பயண நாட்கள்: 10, புறப்படும் தேதிகள் : மே 2,9, 12, 16, 20, 23, 26, 30, ஜூன் - 4.
டில்லியில் A/c ஹோட்டல் மற்றும் A/c பஸ் வசதிகளுடன். (WITH GOVT.TOURISM DELUXE BUSES)

**டார்ஜிலிங் - கேங்க்டாக் சுற்றுலா**

சென்னை - கொல்கத்தா - டார்ஜிலிங் - கேங்க்டாக் - சென்னை.
பயணத் தொகை: ரூ. 5,500/- + ரயில் டிக்கெட்.
பயண நாட்கள்: 10, புறப்படும் தேதிகள் : ஏப்ரல் 30, மே - 7, 11, 14, 18, 21,24, 28.
கொல்கத்தாவில் A/c ஹோட்டல் மற்றும் A/c பஸ் வசதிகளுடன்

**20 ஆண்டுகளுக்குப் பின் அமைதி தவழும் காஷ்மீர் பள்ளத்தாக்கினை கண்டு களியுங்கள்.**

சென்னை - ஜம்மு - ஸ்ரீ நகர் - பகல்காம் - குல்மார்க் - டில்லி - சென்னை. பயணத் தொகை: ரூ.6,900/- பயண நாட்கள்: 10, புறப்படும் தேதிகள் : மே 16, 21.(WITH GOVT.TOURISM DELUXE BUSES).
பிரத்யேக சுற்றுலா : ஜம்மு - வைஷ்ணவி - அமிர்தசரஸ் தனிக் கட்டணம் நபருக்கு ரூ.800/-

**கைலாஷ் - மானசரோவர் யாத்திரை**

சென்னை - டில்லி - காத்மாண்டு - கைலாஷ் - மானசரோவர் - காத்மாண்டு - டில்லி - சென்னை
பயணத் தொகை: ரூ. 58,000/-. (டில்லி - காத்மாண்டு - டில்லி விமானப் பயணம்).
பயண நாட்கள் : 19. புறப்படும் தேதி : ஜூன் 13, ஜூலை 23.
(யாத்திரை முழுவதும் வீடியோ எடுத்து அனைவருக்கும் சி.டி. தரப்படும்)


**அமர்நாத் யாத்திரை: ஜூலை 15. பயணத்தொகை: 6000/-**



**Good Morning Miss!**
**Drawing Miss!**

இது போன்ற
# வணக்கத்துக்குரியவர்
**நீங்களாகவும் இருக்கலாம்**

## நீங்களும்
## ஓவிய ஆசிரியர்
## ஆக முடியும்



வரும் நவம்பரில் தமிழ்நாடு அரசுத் தொழில் நுட்பத்தேர்வு (Free hand Outline and Model Drawing - Higher Grade) எழுதி நீங்களும் ஓவிய ஆசிரியர் ஆகலாம். அரசு மற்றும் தனியார், உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றலாம். அடிப்படைச் சம்பளம் ரூ. 4500/- இதர படிகள் சேர்த்து ரூ.7000/- வரை மாதச் சம்பளம். கல்வித் தகுதி SSLC, +2 தேறிய, தவறிய ஆண், பெண் இருபாலரும். தேர்முகப் பயிற்சியும் உண்டு.

உங்கள் முகவரியை ஒரு தபால்கார்டில் எழுதி அனுப்புங்கள் அல்லது தொலைபேசியில் தெரிவியுங்கள்.

இலவச விவரப்புத்தகம் உங்கள் வீடு தேடி வரும்.

**AJANTHA SCHOOL OF ARTS**
**No. 6, Muthu Nagar, (Near Sundar Thirumana Mandapam) Poonamallee, Chennai - 600 056.** ***Ph : 044 - 26490363***



• நதியா

# தர்மமில்லை சாமி!

அம்மா வேடமேற்கப் போகும் நதியா இன்னும் இளமையைத் தொலைக்கவில்லை. சன் டி.வி. பேட்டியில் ஓரிடத்தில் 'ஜிம்முக்குப் போகும் பழக்கம் உண்டு' என்று கூறியிருந்தாலும், "நீங்கள் தொடர்ந்து பருமனாகாததற்குக் காரணம் என்ன?" என்ற கேள்விக்கு "மரபணுக்கள்தான்" என்றார் நேர்மையாக. திருமண வாழ்வு உற்சாகமாக இருக்க, அவர் கூறிய மூன்று ஆலோசனைகள் ஒத்துக் கொள்ளக் கூடியவை - விட்டுக் கொடுத்தல், நேர்மை, நகைச்சுவை உணர்வு.

ஜெயா டி.வி. விவாதத்தில் "மத்திய அமைச்சராக சாதனை படைத்தவரின் மகன் என்பதாலும், அப்பா இறந்ததால் ஏற்பட்ட அனுதாபம் காரணமாகவும், தயாநிதி மாறனுக்கு வோட்டுகள் குவியுமா?" என்று சுதாங்கன் கேட்க, 'அட' என்று ஏற்பட்ட வியப்பு, வெற்றி வேல் கூறிய பதிலைக் கேட்டவுடன் நீங்கியது. "இந்தியா ஒளிர்கிறது என்பது தவறு என்கிறார் கருணாநிதி. அப்படியானால் அந்த அரசில் பங்கேற்ற மாறன் சாதனை எதுவும் செய்யவில்லை என்றாகிறது. அவர் இறப்பு அனுதாப வாக்குகளாக மாறிவிடாது. காரணம், அவர் மக்களோடு கலந்து பழகியதேயில்லை. "ஸ்டாலினை நானெங்கே அரசியலுக்குக் கொண்டு வந்தேன்? இந்திரா காந்தி அவனைச் சிறையில் போட்டார். அவன் அரசியலில் முழுவதுமாகக் குதித்தான்" என்றார் கருணாநிதி. ஆனால் இப்போது தயாநிதியை வாஜ்பாய் சிறையிலா போட்டுவிட்டார்? எனவே வாரிசு அரசியல் என்பது திட்டமிட்ட ஒன்று என்பது விளங்கிவிடவில்லையா? பின் எப்படி வாக்குகள் குவியும்?"

தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று சன் டி.வி.யில் வெளியான ஆங்கிலத் தலைப்புப் படமான 'பாய்ஸ்'ஸில், பல காட்சிகள் நீக்கப்பட்டிருந்தன. மிஞ்சிப் போன திரைப்படம் முடியவே பல மணி நேரங்கள் ஆயின. காரணம், விளம்பரங்களுக்கு நடுநடுவே கொஞ்சம் கொஞ்சமாக படத்தை ஒளி பரப்பினார்கள். முக்கியமாக இடைவெளிகளில் திரைப்பட ஸ்டில்லுடன் 'திரைப்படம் தொடர்கிறது' என்று அறிவித்துவிட்டு, அதற்குப் பிறகும் விளம்பரங்களை ஒளிபரப்புவது தர்மமில்லை.

- ஆதர்ஷ்

நடக்குமென்பார்; நடக்கும்!

# அக்னிசர்மா பக்கம்

**மேஷம்:** நினைச்ச காரியம் 'நச்'னு முடியும். கோர்ட்டு, கேஸ்னு அலைஞ்சுக்கிட்டிருந்திங்க... இல்லையா? இனிமே கவலை வேணாம். சுமுகமான தீர்ப்பு வரும். உத்தி யோகத்தில மட்டும் என்ன? அமைதி யான சூழ்நிலை, சக ஊழியர்கள் ஒத்துழைப்பு, பதவி உயர்வுனு ஆஹா பலன்கள்தான். மாணவர்களுக்கு, வெளிநாடு செல்லும் வாய்ப்பிருக்கு. சுய தொழிலில் எதிர்பாராத நேரத்தில், பண உதவி வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குப் பஞ்சமிருக்காது.

**ரிஷபம்:** உற்சாகமான மனநிலையோடு உல்லாசமா இருப்பீங்க. நீங்க புதுசா எது செஞ்சாலும், அதுலே நிச்சயம் ஆதாயம் கிடைக் கும். பிரபு தனவான்களோட ஆதரவும் கூடுறதனாலே, வெற்றிக் கனியை சுலபமா பறிச்சுடுவீங்க! கூட்டுத் தொழில் வியாபாரிகளுக்கு தன லாபம் அதிமாகும். புது சொத்து, வீடு, வாகனம்னு வாங்கிக் குவிப்பீங்க. அதுக்கு உடன்பிறந்தவங்களோட ஒத்துழைப்பு அமோகமா இருக்கும். பெண்களுக்கு சந்தோஷமான வாரம்.

**மிதுனம்:** கலைத் துறைக்காரங்களுக்குக் கொண்டாட்ட மான வாரமா இருக்கப் போகுது. குறிப்பா சினிமாத் துறையினருக்கு, புகழ் கூடும். ஆரோக்கிய மேன்மை, சரளமான பணவசதி, எதிர்பாராத சந்திப்பு ஆகியவை உண்டாகும். சுய தொழிலதிபர்கள், 'உஷ் - அப் பாடா!' என்று மூச்சு விடலாம். பழைய கடன்கள் நீங்கும். பொருளா தார நெருக்கடி தீரும். பெண்கள் தெய்வீக ஈடுபாடு கொண்டு மேன்மை அடைவார்கள். சனி கிரக ப்ரீதி செய்வது நல்லது.

**கடகம்:** குடும்பத்துல அமைதியான சூழ்நிலை ஏற்படும். மகிழ்ச்சிகரமான திருப்பங்கள் உண்டாகும். குரு பலம் நிறைந்து இருப்பதால் சுப மங்கள காரியங்கள் நிறைவேறும். திருமணம் ஆகாதவர்களுக்கு அதற்கான வாய்ப்புகள் உருவாகும். பெண்களுக்கு பொன், பொருள் சேர்க்கை ஏற்பட்டு உற்சாகம் தரும். மாணவர்கள் வெற்றி நடை போடுவார்கள். ஸ்ரீ சத்ய சாயி பாபாவை மனதாரத் துதிக்கவும். மலை போல வந்த பிரச்னைகளும் பனி போல நீங்கும்.

**சிம்மம்:** குடும்பத்துல ஜாலியான சூழ்நிலை நிலவும். பந்தலுக்கும் கெட்டிமேளத்துக்கும் ஏற்பாடு பண்ணுங்க. வீட்ல சுபமங்கள காரி யங்கள் நடக்கப் போகுது. சுபச் செலவுகள் வரப் போகுதுன்னதுமே, பேங்க் பாலன்ஸ் பற்றி யோசனை பண்ண ஆரம்பிச்சுட்டீங்களே... எதிர்பாராத இடத்துலேயிருந்து பண உதவி கிடைக்கும். கவலை வேண்டாம். ஏற்றுமதி - இறக்குமதி தொழில்கள் சிறக்கும். மகான்கள் தரிசனம் நலமே தரும்.

**கன்னி:** பெண்களின் நோக்கம் மிகச் சிறப்பாக நிறைவேறும். குறிப் பாக கன்னிப் பெண்கள் தொட்டதெல்லாம் பொன்னாகும். புதிய பொருள் சேர்க்கை, உடல் ஆரோக்கிய மேன்மை, தொழில் அபி விருத்தி என மேன்மையான பலன்களே ஏற்படும். புனித யாத் திரைக்குப் போகணும்னு ரொம்ப நாளா திட்டம் போட்டுக் கிட்டிருந்தீங்க இல்லையா? இதோ, அருமையான சந்தர்ப்பம் வாய்க்கப் போகுது. வெற்றிகரமா போயிட்டு வாங்க. பணம் தாராள மாகப் புரளும்.

**துலாம்:** சட்டம், இராணுவம், காவல் போன்ற துறைகளைச் சார்ந் தவர்கள் உயர்வு பெறுவார்கள். பெண்களின் மகிழ்ச்சிக்குக் குறை விருக்காது. மக்கள் நலன் சிறக்கும். தெய்வீக ஈடுபாடு, குலதெய்வப்

பிரார்த்தனை, புனிதப் பயணங்கள் என ஆன்மிக அலையடிக்கும். அரசாங்க ஆதரவு உண்டாகும். வெளிநாட்டுப் பயணம் வெல்லம் போல இனிக்கும். அலுவலகத்தில் திருப்திகரமான சூழ்நிலை நிலவும்.

**விருச்சிகம்:** நீங்கள் அரசுப் பணியாளரா? அடடா! அற்புதமான வாரம் உங்களுக்கு. அதே போல ஏற்றுமதி, இறக்குமதி தொழில் செய்பவர் களுக்கும் முன்னேற்றமான காலம்தான். அரசியல்வாதிகள் எதிர்பாராத திருப்பத்தைக் காண்பார்கள். இரசாயனம், தோல், எலக்ட்ரானிக்ஸ் போன்றவை ஆதாயம் தருபவை. மக்களால் மன மகிழ்ச்சி உண்டாகும். பூர்விக சொத்து விவகாரங்களில் புதிய திருப்பம் ஏற்படும். சிறு சிறு பிரச்னைகளில் மனம் கலங்கும்போது, ஸ்ரீவிஷ்ணு ஸகஸ்ரநாமம் பாராயணம் செய்யவும்.

**தனுசு:** குருபலம் பரிபூரணமாக இருப்பதால், புதிய சொத்து சேர்க்கை உண்டாகும். சிலருக்குப் புதிய வீடு, வாகன யோகம் ஏற்படும். பெண்களின் நோக்கம் நிறைவேறும். மனை, நிலம், ரியல் எஸ்டேட் போன்றவை எதிர்பாராத ஆதாயம் தரும். திட்டமிட்டபடி காரியங்கள் நிறைவேறும். பயணங்களினால் ஆதாயம் இருக்கும் என்றாலும் கவனம் தேவை. புதிய தொழில் முயற்சிகளுக்கு பெரியவர்களின் ஆசி கிடைக்கும்.

**மகரம்:** இயந்திரம், இண்டஸ்ட்ரீஸ், காண்ட் ராக்ட்ஸ், கமிஷன், உலோகம், எண்ணெய் போன்ற இனங்கள் லாபத்தை அள்ளிக் கொட்டும். கணவன் - மனைவி இடையே அன்பும் ஆதரவும் இழையோடும். குருபகவான் குடும்பஸ்தானத்தைப் பார்ப்பதால, சுப காரியங்கள் நிறைவேறும். மாணவர்களுக்கு உழைப் புக்குத் தகுந்த முன்னேற்றம் உண்டாகும். எதிர்பாராத பணவரவு கிடைத்து, மகிழ்ச்சி உண்டாகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும்.

**கும்பம்:** உணவு, ஹோட்டல்ஸ், லாட்ஜ், வாக னம், டிரா வல்ஸ் ஆகிய துறைக்காரர்களுக்கு விசேஷமான பலன்கள் ஏற்படும். பெண் களுக்கு ஏற்றமான வாரம். தொட்டதெல் லாம் துலங்கும். உத்தியோகஸ்தர்கள் கொஞ் சம் அடக்கி வாசிப்பது நல்லது. குறிப்பாக, தடித்த வார்த்தைகளைப் பிரயோகிக்கக் கூடாது. அரசியல்வாதிகளின் செல்வாக்கும் சொல்வாக்கும் உயரும். புதியவர்களின் அறிமுகம் நன்மை தரும்.

**மீனம்:** பிரிந்திருந்த உறவுகள் வந்து சேர்ந்து கலகலப்பூட்டுவார்கள். குடும்பத்தில் பழைய அமைதி திரும்பும். பேச்சில் கனிவும், செயல் களில் நிதானமும் தேவை. உத்தியோகத்தில் சுமுகமான சூழ்நிலையே உண்டாகும். துணிவும் தன்னம்பிக்கையும் கொண்டு காரியங்களைச் சாதிப்பீர்கள். ஒன்றிரண்டு எதிர்ப்புகள் குறுக்கிடத்தான் செய்யும். தெய்வ பலத்தால் சமாளித்து, வெற்றி நடை போடுவீர்கள் பண விஷயத்தில் கவனம் தேவை.

ஏப்ரல் 21 முதல் 27 வரை




# மத்திய சென்னை

**ம**த்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி, மானப் பிரச்னையாகியிருக்கிறது



* தயாநிதி பிரசாரத்தில்...



* பாலகங்கா, பொன்னையனுடன்

தி.மு.கவுக்கும், அ.தி.மு.க.வுக்கும்! தேர்தலில் வெற்றி தோல்வி சகஜமென்றாலும், தி.மு.கவுக்கு இது சமாதானம் சொல்ல முடியாத தொகுதி. தயாநிதியின் அரசியல் வாழ்வுக்கான பிள்ளையார் சுழி என்பதால், கலைஞரின் கண்ணெல்லாம் இந்தத் தொகுதியிலேயே இருக்கிறதாம்!

"கலைஞருக்கு மாறன் எப்படி மனசாட்சியோ, அதே போல தி.மு.கவின் மனசாட்சியாக தயாநிதியை நாங்கள் பார்க்கிறோம். ஆதலால் இந்தத் தொகுதியின் வெற்றி எங்களுக்கு முக்கியமானதுதான்" என்கிறார் அண்ணாநகர் தி.மு.க. பிரமுகர் ஒருவர்.

மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குள் அண்ணா நகர், ஆயிரம் விளக்கு, புரசைவாக்கம், பூங்கா நகர், எழும்பூர், சேப்பாக்கம் ஆகிய ஆறு தொகுதிகள் அடங்கியிருக்கின்றன. இதில் பூங்கா நகர் காங்கிரஸிடமும், மற்ற தொகுதிகள் தி.மு.க.விடமும் இருக்கின்றன. இவர்கள் வலுவான சட்டமன்ற உறுப்பினர்கள். அதாவது, அனைத்து அரசியல் வித்தைகளும் தெரிந்தவர்கள்

## சுகமாகக் கரை சேர்வார்!

### பரிதி இளம்வழுதி (தி.மு.க.)

**எ**ங்களின் பெரிய ப்ளஸ் பாயிண்ட் வேட்பாளர் இளைஞர், அரசியலுக்குப் புதியவர். முரசொலி மாறன் தொகுதிக்குச் செய்த பணிகள், வெற்றிக்கு வித்திட்டு விட்டன. மாநிலத்தில் நடைபெறும் அநியாய, அராஜக அத்துமீறல் ஆட்சிக்கு எதிராக மக்கள் திரண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் தி.மு.க. அணியை வெற்றி பெறச் செய்வதன் மூலம் ஜெயலலிதாவின் அரசுக்கு முற்றுப்புள்ளி வைக்க அவர்கள் விரும்புகிறார்கள். ஆளும் கட்சிக்கு எதிராக அடிக்கும் அதிருப்தி அலையில் சுகமாகக் கரை சேர்வார் தயாநிதி. ஆளும் கட்சி வன்முறையைத் தூண்டிவிட்டு, கள்ள வோட்டுப் போட இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அப்படிச் செய்ய முயல்பவர்களை நாங்கள் ஒன்றும் செய்ய மாட்டோம், மக்களே 'பார்த்துக்' கொள்வார்கள்!



\- கௌசி

# மானப் பிரச்னை!

என்பதால் நம்பிக்கையோடு நடைபோடு கிறது தி.மு.க.!

இந்த நம்பிக்கைக்கு மத்திய சென்னையின் முழுப் பொறுப்பையும் ஏற்றிருக்கும் ஸ்டாலினும் காரணம் என்கிறார்கள்.

"எங்கள் வெற்றி குறித்துச் சந்தேகமில்லை. 1984ல் எம்.ஜி.ஆர். உடல் நலமில்லாமல் இருந்த போதே, நாடெல்லாம் அடித்த அலையில் மத்திய சென்னையில் மட்டும் தி.மு.க. வேட்பாளர் கலாநிதி ஜெயித்தது ஞாபகமிருக்கும் என்று நினைக்கிறேன். பொதுவாகவே தி.மு.க. மீது அபிமானம் கொண்ட அதிகமான மக்கள் இந்தத் தொகுதியில் இருக்கிறார்கள். அதிக வோட்டு வித்தியாசத்தில் ஜெயிக்க வேண்டுமென்பதே எங்கள் நோக்கம்" என்கிறார், புரசைவாக்கம் எம்.எல்.ஏவான பா. ரங்கநாதன்.

இவர் சமீபத்தில்தான் தி.மு.கவுக்கு வந்திருப்பதால், புரசைவாக்கம் தொகுதியில் ஒரு கோஷ்டி அதிருப்தியோடு அலைகிறது. அண்ணாநகர், பூங்காநகர் பகுதிகளில் தி.மு.கவுக்குள் கோஷ்டிப் பூசல் தலையெடுத்தாலும், கலைஞரின் பேரன் என்பதால் சுறுசுறுப்பாக வேலை நடக்கிறது.

ஒவ்வொரு நாடாளுமன்றத் தேர்தலி



• தயாநிதி மாறன்




• அ.தி.மு.க. பிரசாரத்தில்...

## என்ன காரணம் சொல்லப் போகிறார்?

### வெற்றிவேல் (அ.தி.மு.க.) :

முரசொலி மாறன், தொகுதிக்கு எதுவும் செய்யவில்லை என்பது ஒன்றே எங்களுக்குச் சாதகம். அது மட்டுமில்லாமல் ஸ்டாலினை மிசா கைதி என்று வாரிசு அரசியலைத் துவக்கிய அதன் தலைவர், தயாநிதிக்கு என்ன காரணம் சொல்லப் போகிறார் என்று மக்கள் கேட்கிறார்கள். இது எங்களுக்கு பலம். தி.மு.க.வில் சமீபத்தில் சேர்ந்திருக்கிற பா. ரங்கநாதனால் கோஷ்டிப் பூசல் ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பூசல் அ.தி.மு.க.வுக்கு வோட்டு வங்கியாக மாறும். தண்ணீர்ப் பிரச்னையைத் தீர்க்க புதிய வீராணம் திட்டம் மூலம் தண்ணீர் வர இருப்பது, 'அம்மா' மேலான மதிப்பை வாக்காளர்களிடம் அதிகப்படுத்தியிருக்கிறது. இது பாலகங்காவுக்கு வோட்டாக மாறும். தி.மு.க. கள்ளவோட்டுகளுக்கு முயன்று வருகிறது. அப்படி யாராவது கள்ளவோட்டுப் போட வந்தால், கையை வெட்டுவோம்!





* அந்தக் கடிதம்

லும் முரசொலி மாறனுக்காக மட்டும், கலைஞர் வேண்டுகோள் விடுத்து கைப்பட எழுதிய கடிதத்தை பிரிண்ட் செய்து விநியோகிப்பார்கள். இந்த முறை தயாநிதிக்காக எழுதியிருக்கிறார் கலைஞர்.

"அன்று என் மடியில் விளையாடிய மான் குட்டி, அறிஞர் அண்ணா அன்புடன் தட்டிக் கொடுத்த புலிக்குட்டி - அறிவு, ஆற்றல், அயராத உழைப்பு, இவற்றில் எப்போதும் படுசுட்டி"

- இப்படிச் செல்லும் அந்தக் கடிதத்தின் 'டச்'சிங்கான வரிகள், தொண்டர்களை உசுப்பேற்றி விடுகின்றன.

தயாநிதியின் பிரசாரமும் தூள் பறக்கிறது. அவரைப் பின் தொடர்ந்து பெரும் பட்டாளமே செல்கிறது. சமீபத்தில் ஹிட்டான சில துள்ளலிசை திரைப் பாடல்களை அப்படியே உல்டா வாக்கி வெளியிடப்பட்டிருக்கிற பிரசாரப் பாடல்கள் ஒலிக்க, தொண்டர்கள் ஆட்டமும் பாட்டமுமாக வாக்கு சேகரிக்கிறார்கள். இவர்களோடு தயாநிதியின் குடும்பத்தினரும் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிக்கிறார்களாம்!

"அப்பா செய்த பணியைத் தொடர எனக்கு வாய்ப்புக் கொடுங்கள்'' என்பதுதான் தயாநிதியின் பிரசாரக் குரல்! இந்தக் குரல் படித்தவர்களிடையே பலன் கொடுக்கும் என்பது தி.மு.கவின் நம்பிக்கை!

அ.தி.மு.க. போட்டு வைத்திருக்கும் கணக்கோ வேறு!

தயாநிதி மாறனைத் தோற்கடித்தால், ஒட்டுமொத்த தி.மு.கவையே தோற்கடித்ததற்குச் சமம் என்ற உணர்வோடு, பரபரப்பாக இறங்கியிருக்கிறார்கள் அ.தி.மு.கவினர்.

"கடந்த சட்டமன்றத் தேர்தலில் மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆறு தொகுதிகளில், ஐந்தில் தி.மு.க. பெற்ற வெற்றி, மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில்தான்! இந்த முறை அ.தி.மு.க.வுக்கான ஆதரவு அதிகரித்திருக்கிறது. இந்த ஆதரவு என்னை நிச்சயம் ஜெயிக்க வைக்கும்" என்கிறார் பாலகங்கா!

மேயர் தேர்தலில் போட்டியிட்டவர், சொந்தத் தொகுதிக்காரர் என்பதால் கூடுதல் பலம். இதுமட்டுமில்லாமல், தொகுதியில் முஸ்லிம்களுக்கு அடுத்து, கணிசமான வாக்குகள் மலையாளிகளிடம் இருக்கிறது. பாலகங்கா மலையாளி என்பதால், அந்த வாக்குகள் அவருக்கு வரும் என்பது நம்பிக்கை. குடிசை மாற்று வாரியத் தலைவராக இவர் இருந்தபோது வீடுகள் ஒதுக்கப்பட்டதில், குடிசைப் பகுதி மக்களிடையே கொஞ்சம் செல்வாக்கு இருக்கிறது இவருக்கு.

இவர் தொண்டர்களின் பலத்தோடு இருக்கும் வேட்பாளர் என்பதை, எதிர்க்கட்சிக்காரர்களே ஒப்புக் கொள்கிறார்கள்.

ஒவ்வொரு பகுதியின் சந்து பொந்துகளிலும் சென்று வாக்குச் சேகரிக்கும் பாலகங்காவுக்கு, தொகுதிவாசிகள் தொப்பி, கண்ணாடி (வெயிலுக்கு) போன்றவற்றைப் பரிசளிக்க, குளிர்ந்து போகிறார் இவர். "நள்ளிரவு ஒரு மணிக்கு அழைத்தாலும் ஓடோடி வருபவர்.

''மாறன் ஒரு சேனலை ஒன்பது சேனலாக்கினார். அவரது மகன் ஒன்பதை பதினெட்டாக்கிவிடுவார், யோசித்து வாக்களியுங்கள்'' என்பது போன்ற அதிமுகவின் பிரசார பஞ்ச் டயலாக்குகளை, மக்கள் ரசிக்கிறார்கள்.

மத்திய சென்னை அ.தி.மு.க. தேர்தல் பொறுப்பாளர்களாக, அமைச்சர் பொன்னையனும், ஜெயக்



* பா.ரங்கநாதன்

## மாண்புமிகு டாப் டென் - 10 முடிவுகள்

### ராகுல் பெற்ற மார்க் 60/100

பாரம்பரியம், படிப்பு, அறிவு, வழிகாட்டத் தயாராக அனுபவசாலிகள்னு ஆரவாரமா அரசியல்ல நுழைஞ்சிருக்கார் ராகுல். இளைஞர்களைத் தட்டிக் கொடுத்து வரவேற்கணும்னு, கொஞ்சம் தாராளமா மார்க் போட்டார் மூத்த எழுத்தாளர் சுப்ர. பாலன். அதே மார்க்கைப் போட்டு இந்த வாரப் பரிசைத் தட்டிச் சென்றவர் :

இரா. சக்கரபாணி,
12, இ.எம்.ஜி. நகர் 2வது தெரு, (3வது குறுக்குத் தெரு), கோ.புதூர், மதுரை-7.

குடும்பத்தோட சினிமா பார்க்க இவருக்கு ரூ.250/- அனுப்பி வைக்கப்படுகிறது.


• சுப்ர. பாலன்

**சுப்ர. பாலன் போட்ட மார்க்**

| | தகுதி | மொத்த மதிப்பெண் | ராகுல் பெற்றது |
|---|---|---|---|
| 1. | தலைமைப் பண்பு (லீடர்ஷிப் குவாலிடி, வசீகரம்) | 10 | 5 |
| 2. | முடிவெடுக்கும் திறன் | 10 | 7 |
| 3. | கறைபடாத கரங்கள் | 10 | 5 |
| 4. | அரசியல் சாணக்கியம் | 10 | 5 |
| 5. | மனித நேயம் | 10 | 8 |
| 6. | தொண்டர்களோடு தோழமை | 10 | 5 |
| 7. | மேடைப் பேச்சு | 10 | 8 |
| 8. | மாற்றுக் கட்சியினரை மதிக்கும் போக்கு | 10 | 6 |
| 9. | தனிமனித ஒழுக்கம் | 10 | 6 |
| 10. | நிர்வாகத் திறமை | 10 | 5 |
| | மொத்தம் | 100 | 60 |

குமாரும் நியமிக்கப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு எம்.எல்.ஏ தொகுதிக்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் பொறுப்பாளர்கள் பம்பரமாகியிருக்கிறார்கள்.

புரசைவாக்கத்தில் வெற்றிவேலும், ஆயிரம் விளக்குத் தொகுதியில் ஸ்டாலினுக்குச் சரியான போட்டியைக் கொடுக்க கராத்தே தியாகராஜனும், பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

புரசைவாக்கத்தில் கடந்த சட்டசபை தேர்தலில் ரங்கநாதனை எதிர்த்து, தோல்வியடைந்தவர் வெற்றிவேல். அதற்குப் பழிவாங்கும் விதமாக, தம் தொகுதியில் அதிக வாக்குகளைப் பெற்றுத் தருவதற்காக சுறுசுறுப்பாக இறங்கியிருக்கிறார்.

**த**மிழகத்தில் பதற்றம் நிறைந்தவை என்று அடையாளம் காணப்பட்டுள்ள இருபத்தைந்து தொகுதிகளில் ஒன்று மத்திய சென்னை! "ஆளும் கட்சிக்குப் போலீஸ் ஆதரவு இருப்பதாலும், கள்ள வோட்டுப் பிரச்னையினாலும், கலவரம் நடக்க அதிகம் வாய்ப்பிருக்கிறது. இதற்கு கடந்த சட்டமன்ற தேர்தலையே உதாரணமாகக் கூற முடியும்'' என்கிறார் எழும்பூரைச் சேர்ந்த டீக்கடைக்காரர் ஒருவர்.

முதல்வரின் பிரசாரம், வாஜ்பாய் இமேஜ் போன்றவை அ.தி.மு.கவுக்குக் கைகொடுத்தாலும், குடிநீர்ப் பிரச்னை, ரேஷன்கார்டு 'ஹெச்' முத்திரை பிரச்னை போன்றவை, அ.தி.மு.கவுக்குப் பின்னடைவைத் தரும் என்கிறார்கள்.

தயாநிதி ஜெயித்தால், கலைஞர் பேரனுக்காக எடுத்திருக்கும் முடிவு சரியென்றும், பாலகங்கா ஜெயித்தால், தி.மு.க. கோட்டையைத் தகர்த்த வரலாறு என்பதாலும், போட்டிக்கும் பரபரப்புக்கும் கொஞ்சமும் பஞ்சமில்லாமல் அனலாய்க் கொதிக்கிறது மத்திய சென்னை!

- ஏக்நாத்


படங்கள் : ஸ்ரீஹரி

என் அக்காவை உங்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும்...'சாயாதேவி' என்ற பெயரில்... ஆமாம்! எழுத்தாளர் சாயாதேவியேதான். இலக்கிய வெகுஜன பாலம் என்று சமீபத்தில்கூட 'மானுடம்' வார இதழின் கேள்வி - பதிலில் பாராட்டியிருந்தார்களே... இலக்கியக்கூடம் விருது, நெல்லை தமிழ் வளர்ச்சி அறக்கட்டளை பரிசு, புதுமை வாசகர் வட்டத்தின் இளம் எழுத்தாளர் விருது - எல்லாம் வாங்கி...

இப்படி நான் நினைவூட்ட முயன்றால் நீங்கள் கோபித்துக் கொள்வீர்கள். 'சாயாதேவிக்கு அறிமுகமா...! தாம் எழுதும் காதல் கதைகளால் எங்களை மகிழ்ச்சியிலும் துன்பத்திலும் தோய்த்தெடுத்துத் திணறடிப்பவராயிற்றே... அந்தப் பூக்கடைக்கு விளம்பரமா?' என்று கேட்பீர்கள். 'இன்பத்தேன்' நாவலின் கதாநாயகன் மூர்த்தியையும், கதாநாயகி லலிதாவையும் நாங்கள் மறக்க முடியுமா? 'தாரகை' குறுநாவலின் காதல் காட்சி உரையாடல்கள், எங்களுக்கு மனப்பாடமாயிற்றே!'' என்று ஒப்பித்துக் காட்டுவீர்கள்.

சாயாக்காவும் வேறு பல எழுத்தாளர்களைப் போல, கதவைச் சாத்திக் கொண்டு அக்ஞாத வாசம் பண்ணினால்தான் எழுத வரும் என்று பிகு பண்ணிக் கொள்ளும் ரகம் இல்லை. தொலைக்காட்சி அலறல்கள், தொலைபேசி அழைப்புகளிடையே, சிரித்த முகத்துடன் சிறுகதை வடித்து வருகிறாள். இப்படிப்பட்ட சாயாதேவி, ஒருநாள் அழுது சிவந்த கண்களுடன் பேனாவும் கையுமாக இருக்கக் கண்டேன் என்றால் நம்புவீர்களா...?

''என்னக்கா... ஆச்சு...?'' என்று பதறியபோது





# சாயாதேவி எழுதாத



## சீதா ரவி

அவள் சொன்ன பதில், என்னை இன்னும் பதற்றப்படுத்தியது:

"முடியாது... எனக்கு எழுத வரலை... நான் எழுதவே போற தில்லே.." என்று பேனாவை மேஜை மேல் போட்டு விட்டுப் புடைவைத் தலைப் பால் கண்களை அழுத்திக் கொண்டாள்.

''அக்கா... அப்படி யெல்லாம் சொல்லக் கூடாது. உனக்குன்னு எழுத்துலகத்துல இடம் வந்தாச்சு... என்ன பிரச் னைன்னாலும் நாங்க உதவ மாட்டோமா... எழுத மாட் டேன்னு ஒரு எண்ணம் எட்டிப் பார்க்க, நீ விட லாமா.?''

''அசடே!'' என்று, கண்களிலிருந்து புடை வைத் தலைப்பை விலக்கி, என்னை வாஞ்சையுடன் வைதாள் சாயாக்கா.

''எழுதறதையே நிறுத்தப் போறேன்ற அர்த்தத்துல நான் பேசலை... இந்தக் கதையை எழுத முடியாது; மாட்டேன்னுதான் சொல்றேன்..''

# காதல் கதை!

இப்படி அக்கா சொன்னதும், அது என்ன கதை என்று தெரிந்து கொள்ளும் ஆவல் என்னை எவ்

வளவு ஆக்கிரமித்திருக்கும்...! ஆனால் அக்கா அந்தக் கதையை உடனே சொல்ல மறுத்துவிட்டாள். "இப்போ என்னால அதைச் சொல்ல முடியாது. உள்ளே இருக்கிறதெல்லாம் கொஞ்சம் அமைதிப் பட்டுச் சமநிலைக்கு வரணும். மூணு நாள் கழிச்சு வா..." என்று என்னை அனுப்பி விட்டாள். மூன்று நாட்கள் சென்று அவளை நான் மீண்டும் கெஞ்சிக் கேட்ட போது, சாயாக்கா சொன்ன கதை இதுதான் :

ஞானராஜ் மேஸ்திரியிடம் பொறுப்பை ஒப்படைப்பது என்று முடிவாகிவிட்டது. பட்ஜெட், வரைபடம், செயல்திட்டம் எல்லாம் தயார்... கார்ப்பரேஷன் அப்ரூவல் வாங்க வில்லையா என்று கேட்காதே! வீட்டுக் கொல்லைப் பக்கத்தில் தண்ணீர்த் தொட்டி - அதாவது 'ஸம்ப்' கட்டுவதற் குத்தான் இத்தனை முன்னேற்பாடு. இரண்டு பெரியாட்கள், ஒரு சித்தாள். மேற்பார்வை ஞானராஜ் மேஸ்திரியே தான்.

களிமண் பூமியை அகழ்ந்து, பத்தடி ஆழத்துக்குப் பள்ளம் எடுக்கவே ஒரு வாரம் ஆயிற்று. முதலில் சிறு பள்ளமாகப் போட்டார்கள். மெள்ள அகலப்படுத்தி, ஓர் ஓரத்தில் களிமண்ணிலேயே கரடு முரடாய்ச் செதுக்கி நாலு படிகள். பெரியாள் இரண்டு பேர் கடப்பாரை கொண்டு பெயர்த்து எடுத்த மண்ணை, சிற்றாள் பெண் எடுத்து அப்புறப்படுத் தினாள். இறுகிக் கிடந்த மண்ணைப் பெயர்ப்பது பெரிய வேலைதான். ஆனால் அதைக் கனத்த இரும்பு பாண்டு களில் வாரிப் போட்டு தலைச்சுமை யாக்கி, குறுகலான களிமண் படிகளில் ஏறிச் செல்லும் வித்தை ஒன்றும் சிறிய வேலை கிடையாது.

அதிலும் திலகாவின் அழகான நீண்ட பாதங்கள், படிக்கட்டுகளில் பதியாமல் வெளியே துருத்தி நீளும். நுனிக்காலையும் நடுப்பாதத்தையும் அழுத்தி அழுத்தி, அவள் ஒவ்வொரு முறையும் படியேறுகை யில் தலைபாரத்தில் அழுந்திய முதுகுத் தண்டு செங்குத்தாய் நிமிர்ந்திருக்கும். தடுக்கித் தடுமாறாமல் ஏற வேண்டுமே என்று நாம் கலவரப்படும்போதே, ஏறி முடித்து விடுவாள். தரை மட்டத்துக்கு ஏறி, அந்த பாரத்தை அவள் வீசி இறக் கும்போது பார்ப்பவர் கழுத்திலே சொடக்கு விழும்!

பள்ளம் எடுத்த ஒரு வாரமும் நான் திலகாவின் பாதங்களையே பார்த்துப் பார்த்து வியந்தேன்.

'அன்னை ஜானகி வந்தாளே!' என்று அருணாசலக் கவிராயர் வர்ணித்த சீதா தேவியின் நடையழகு வரிகள், மனத்தில் ஓட ஓட திலகாவை ரசித்தேன்.

சுந்தர பாதம் வைக்கவே
ரத்ன சிலம்பின் ஜோதி நிலத்தில்
மொய்க்கவே
பூமியாகிய தன் தாய்
மகளுக்கெனவே
விரித்ததே மாந்தளிர்போல் எங்கும்
மின்னவே...

காரியத்தின் லாகவத்தாலும், உழைப்பின் வேகத்தாலும் கலைந்து மறையாதவொரு நளினம், அந்தப் பாதங்களிலிருந்து புறப்பட்டு திலகாவின் மேனியெங்கும் தழுவி நின்றது. தலைச் சுமையை வீசிக் கொட்டிய கைகளின் கருமை, மினு மினுத்தது. பக்கவாட்டில் திரும்பாது, நேர்ப்பார்வையில் நிலைத்த கண்கள், சுமையை மீறிச் சிரித்த வண்ணமே யிருக்கும். சற்றுக் கூடுதல் வேகத்துடன் பள்ளத்தில் இறங்க பாதம் பதிக்கையில், உள்ளங்காலின் தாமரைச் சிவப்பு களி மண்ணை அழுத்தி மிதிக்கும். திலகாவின் சுந்தரப் பாதங்களுக்கு ரத்தினச் சிலம்பு இல்லாவிட்டாலும் இந்தக் கணமே அழகான வெள்ளிக் கொலுசுகளை வாங்கி மாட்டினால் என்ன என்று தோன்றும்.

இந்த எண்ணத்தைச் செயலாக்க நான் துணியும் முன் நடந்துவிட்டது அந்த விபத்து!

மண்ணுக்கும் திலகாவுக்குமிடையே

---

"டாக்டர் வீட்டு மாடியிலே இருந்து விட்ட பட்டம் அறுந்து, தலைவர் வீட்டு மேலே விழுந்திடுச்சு!"

"அப்புறம்?"

"தனக்கு டாக்டர் பட்டம் கொடுத் துட்டதா தலைவர் அறிக்கை விட்டுட்டார்!"

- நெல்லையப்பபுரம் செல்வன்

யான சூட்சும உறவின் ஒரு நூலிழையைத் துண்டித்துவிட்டு விதி வேடிக்கை பார்த்தது என்றுதான் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் எப்போதும்போல் படி யேற அடியெடுத்து வைத்தவள், பாதம் பிசகித் தலைச்சுமையோடு கீழே சரிவானேன்!

சமையலறை ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்த எனக்கு, ஒருகணம் வயிறு குலுங்கி எழுந்து நெஞ்சை முட்டியது. சுதாரித்துக் கொண்டு வெளியே ஓடினேன். பள்ளத்துக்குள் என்னால் இறங்க இயலாது. திலகாவை எப்படித் தூக்கி வெளியேற்றுவேன்... படபடத்தபடி நான் பள்ளத்தின் விளிம்பை அடைவதற்குள், ஞானராஜ் மேஸ்திரி கீழே இறங்கிவிட்டிருந்தான்.

தலைச்சுமை ஒரு பக்கம் சரிந்து கிடக்க, திலகா படியருகே கசங்கி விழுந்திருந்தாள். ஞானராஜ் நீட்டிய கையைப் பற்றாமல் தானே எழுந்திருக்க முயன்று, வலியில் துவண்டு மடங்கினாள். சேலை விலகிய வலது கணுக்கால் அதற்குள்ளாக வீங்க ஆரம்பித்திருந்தது. மேலே நான் நிற்பதை உணர்ந்து ஏறிட்டவளின் கண்கள், வேதனையில் கலங்கியிருந்தன.

ஞானராஜ் மேஸ்திரி குனிந்தான். திலகாவின் இடுப்படியில் ஒரு கையும் கால்களின் கீழே ஒன்றும் கோத்து, ஒரு பூக்கூடை போல் அவளைத் தூக்கிக் கொண்டான். பள்ளத்தின் ஓரத்தில் பரிகசித்து நின்ற படிக்கட்டுகளை, ஒரு தீர்மானத்துடன் அழுத்தி மிதித்து மேலே ஏறினான்.



அந்த நான்கு படிகளைக் கடக்க அவன் எடுத்துக் கொண்ட பதினான்கு நொடித் துளிகள், எனக்கு ஒரு நெடு நாளின் கொடிய பகலாக நீண்டன. தரை மட்டத்தில் அவன் இரு கால்களையும் பதித்து நின்று மெள்ள மூச்சை வெளியேற்றினான். மிகுந்த ஆதுரத்துடன் திலகாவைத் தூக்கிச் சென்று, மாமரத்தின் நிழலில் அமர்த்தினான்.

"ரொம்ப வலிக்கிறதா...?" குனிந்து அவள் வலது காலைக் கூர்ந்து பார்த்தான். அவள் சேலையிலும் ரவிக்கையிலும் ஒட்டியிருந்த களிமண், அவன் சட்டையெல்லாம் படிந்து கிடந்தது.

"மேலெல்லாம் மண்ணு... தட்டி விடு" என்றாள் திலகா.

"நான் வேணா டாக்டருக்கு ஃபோன் போட்டு வரச் சொல்லட்டுமா..?" அருகில் போய்க் கேட்டேன்.

"வேணாம்மா. ஆட்டோ பிடிச்சுட்டு வந்து நானே அழைச்சுட்டுப் போயிடறேன்.."

பேண்ட் பாக்கெட்டிலிருந்த பர்ஸை எடுத்து ரூபாய் நோட்டுகளைச் சரி பார்த்துக் கொண்டு, வீதி நோக்கி நடந்தான் ஞானராஜ் மேஸ்திரி.

**தி**லகா வராததால் வேலையே தாமதப்பட்டுப் போனதாக எனக்குத் தோன்றியது. அவளிடத்தில் இன்னொரு பெண் வந்து வேலை செய்தாள்; மூன்று நாட்களுக்கு. நான்காம் நாள் திலகாவே திரும்பி வந்ததைக் கண்டு அதிசயப்பட்டேன். கணுக்காலில் வீக்கம் வடிந்திருந்தது. முன்னிலும் கூடுதலான மிடுக்கோடு அள்ளுவதும், சுமப்பதும், ஏறுவதும், இறங்குவதுமாக அவள் அன்றைய பகலை அலங்கரித்தாள்.

"என்ன திலகா? கால் சரியாயிடுத்தா?" என்ற என் கேள்விக்குப் பதிலாக,

"பார்த்தா எப்படித் தெரியுதாம்!" என்று ஒரு நொடிப்பு.

"பார்த்தா அழகாய்த்தான் இருக்கு. ரொம்பத்தான் அழகு" என்றேன்.

வெள்ளையாக திலகா சிரித்தபோது அந்த அழகு மேலும் பூரித்து நின்றது. 'அப்பா! இன்றைய பொழுது விடிந்ததன் பலன் கிடைத்துவிட்டது' என்று என்னை எண்ணவைத்தது அந்தச் சிரிப்பு.



* 'இளங்கோ' - சங்கீதா, விக்னேஷ்

## அறிவியல் எதிர்ப்பு!

சூரி படத்திற்காக எழுபது முறை மொட்டையடித்துக் கொண்ட விக்னேஷுக்கு, இப்போது தலைமுடி வளர்ந்துவிட்டது. பிதாமகன் படத்தில் கஞ்சா விற்கும் முதிர்கன்னியாக நடித்த சங்கீதா, எடையைக் குறைத்து இளமையாகியிருக்கிறார். இதுவரை 'க்ளிக்' ஆகாத திறமையான நட்சத்திரங்கள் பட்டியலில் இடம் பிடித்துள்ள இவர்கள் இருவரும், 'இளங்கோ' படத்தில் ஜோடி சேர்ந்திருக்கிறார்கள். இவர்களது காதலுக்கு எதிர்ப்பு 'அறிவியல்' உருவத்தில் வருகிறதாம்! என்ன இயக்குனரே, 'லவ் மெஷின்' ஆங்கிலப் படத்தின் பாதிப்பா?

- ஸ்ரீ

இதையெல்லாம் தூக்கிச் சாப்பிடுகிற அழகுச் சித்திரம் ஒன்றை, அன்றைய பொழுது சாயும் முன் காண்பேன் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

மொட்டை மாடியில் காய்ந்து கொண்டிருந்த துணிகளை எடுத்துக் கொண்டு இறங்கும்போது, மோட்டார் சைக்கிளின் ஓசை கேட்டது. ஞானராஜ் மேஸ்திரி. வந்திறங்கிய வேகத்தில் ஆண் பிள்ளை ஆட்களை ஏவி விட்டார். அவர்கள், அவருடைய வண்டியில் ஏறிப் போனார்கள். விறுவிறுவென்று கொல்லைப்புறத்துக்குப் போனார் மேஸ்திரி. அங்கே மாமரத்தடியில் சும்மாடை இறக்கிவைத்துவிட்டு திலகா, ஸ்டீல் தூக்கைத் திறந்து, சோற்றை அளைந்து கையில் எடுத்தவள், மேஸ்திரியைக் கண்டதும் கையை உதறி, தூக்கை மூடினாள். அவள் எழுந்து நின்ற வேகத்திலேயே ஞானராஜ் மேஸ்திரி அவள் காலடியில், புழுதி மண்ணில் உட்கார்ந்தார். சட்டைப் பையிலிருந்து ரோஸ் நிறக் காகிதத்தை எடுத்துப் பிரித்தார். மினு மினுவென்று ஒரு ஜோடி வெள்ளிக் கொலுசு!

திலகா அவசரமாகப் பின்னால் நகர, மேஸ்திரி சட்டென்று அவள் காலைப் பிடித்துக் கொண்டார்.

சோற்றுக் கையால் அவரை விலக்கவும் விரும்பாமல், இடது கையால் தள்ளவும் முயலாமல், திலகா சில கணங்கள் பரிதவித்தாள். பின்னர் அப்படியே சமைந்து சிலையாய் அவள் நிற்க, ஞானராஜ் மேஸ்திரி, வெள்ளிக் கொலுசுகளை அந்த சுந்தரப் பாதங்களில் பூட்டினார்.

மொட்டை மாடியில் நின்று பார்த்த எனக்கு, அவர்களின் முகங்கள் தெளிவாய்த் தெரியவில்லை. ஆனால் மேஸ்திரியுடைய குனிந்த தலையின் உணர்வுச் சுமையும், அவர் விரல்கள் திலகாவின் பாதத்தைச் சுற்றி, கொலுசை வளைத்த ஆதுரமும் அலை அலையாக எழுந்து, வீட்டின் உயரத்தைக் கடந்து பகல் வெளியில் பரவக் கண்டேன். அந்த அன்பை ஏற்ற திலகாவின் நிறையுணர்வு, அவளைச் சுற்றி ஒளி வட்டமாகச் சுழன்றது. ஞானராஜ் மேஸ்திரி மேலும் குனிந்து, வீக்கம் வடிந்த திலகாவின் வலதுகாலில் அழுந்த முத்தமிட்டார். ஒருகணம் சிலிர்த்து நின்றேன். பிறகு சட்டென்று பார்வையை விலக்கிக் கொண்டு கீழே இறங்கிப் போனேன்.

இந்தத் தண்ணீர்த் தொட்டி வேலை தொடங்கிய நாள் முதலாக, ஞானராஜ் மேஸ்திரி வருவதும் போவதுமாக இருந்திருக்கிறார். எனினும் ஒருமுறைகூட திலகாவுடன் அவர் பேசி நான் பார்க்கவில்லை. அவள் பக்கம் கவனம் திரும்பியதுகூட இல்லை. ஆனால், இன்று நான் கண்ட காட்சியில், கனிந்த காதலில் அடங்கிய அழகு மிளிர்ந்தது. வியப்பும் யோசனையும் என்னுள் சுழன்று வந்தன.

விரைவில் வேலை ஆரம்பித்துவிட்டது. ஞானராஜ் மேஸ்திரி மோட்டார் சைக்கிளில் ஏறிப் போய்விட்டார். சேலைத் தலைப்பைத் தூக்கிச் செருகியபடி திலகா நடந்தபோது, அவள் கால்

களில் அந்தக் காதல் பரிசைக் காண வில்லை.

கட்டுமான வேலைகள் முடிந்த தினத்தில், திலகாவுக்கு விடை கொடுக் கும்போது தனியே அழைத்து துணிந்து கேட்டுவிட்டேன்: "கொலுசு எங்கே?"

அவள் முகத்தில் வியப்பும் நாணமும் ஒரு சேரப் படர்ந்து அழகூட்டின. 'உனக் கெப்படித் தெரியும்?' என்பது போல் ஒரு பார்வை பார்த்தாள். பிறகு கண்களை ஒரு சுழற்றுச் சுழற்றி, "யார்ட்டயும் சொல்ல மாட்டியே...?" என்றாள்.

"உஹூம்... சொல்ல மாட்டேன்."

சேலைத் தலைப்பின் உள்ளே ரவிக்கைக்குள் கைவிட்டு கொலுசை எடுத்துக் காட்டினாள். குழிந்த அவள் உள்ளங் கைக்குக்கூட அந்த ஆபரணம் அழகு செய்தது. எடுத்த வேகத்தில் அதை மீண்டும் பத்திரப்படுத் திச் சொன்னாள்,

"எங்கப்பனுக்குத் தெரிஞ்சா, எங்க இரண்டு பேரையும் பொலி போட்டுரும். இந்த ஜன்மத்துல எங்க இரண்டு பேருக்கும் கல்யாணம்ன்றது கிடையாது... எங்கப்பனோட வீம்பு, அவங்க ஆத்தாளோட ஆங்காரம், இரண்டுமா சேர்ந்து எங்களை இப்படியே வச்சிருக்கு... அரிவாளைத் தூக்கிட்டா வெட்டிட்டுத்தான் வைப்பாரு அப்பன். அவருக்கு ஏதாவது ஆச்சுன்னா, நான் பொறுக்க முடியுமா... சொல்லு."

"அவர் மட்டும் என்ன திலகா? உனக் குக் கால் சுளுக்கினப்போ பதறினதைப் பார்த்தனே... அந்த காலுக்குத்தானே இந்தக் கொலுசு... "

"ப்சு! ஒரு கஞ்சி வச்சு குடுக்க வக்கிலா தவ மேல, இத்தினி ஆசை பாரு... அந்த ஆசை நினைப்புலேதான் நான் சும்மாடு கட்டுறேன், சுமை தூக்கறேன், சோறும் திங்கறேன்..."

குரலுடைந்து போய்விட்டது திலகா வுக்கு. உணர்ச்சிப் பெருக்கில் உதடுகள் துடித்தன. "இந்தக் கொலுசைக் கூட நான்






# அடுத்த மினி கல்கி

## ஆள் பாதி; ஆடை மீதி!


போட்டுக்கிட்டு, ஓசைப்படுத்த முடியாதுன்னுதான, சலங்கையில்லாத பட்டைக் கொலுசா பூட்டியிருக்காரு. அப்பனோட கொள்ளிக் கண்ணுல பட்டா, ஆயிரம் கேள்வி கேக்கும். அதான் நெஞ்சோட பூட்டிக்கிட்டேன்..."

சேலைத் தலைப்பில் கண்களைத் துடைத்துக் கொண்டு அவள் போயவிட்டாள். இறக்கிவைக்கவியலாத சுமையொன்று, என் இதயத்தில் ஏறிக் கொண்டது.

**சா**யாக்கா இவ்வாறு கதையை முடித்தபோது, அந்தச் சுமை என்னையும் அழுத்தியது. ஆனால் ஒன்று மட்டும் புரியவில்லை. இந்தக் கதையை எழுதுவதில் என்ன தடை அவளுக்கு...? திலகாவின் அப்பா கதை படிக்கும் ரகமாகத் தோன்றவில்லை. பிறகென்ன...?

"அசடே! அசடே! அது அல்ல காரணம்... இத்தனை நாளாக எழுதின கதைகள்ல கொஞ்சம் கற்பனையும் நிறைய நிஜமும் கலந்திருக்கும். இல்லாது போனால், கொள்ளை கொள்ளையாய் கற்பனையும் கொஞ்சமாக உண்மையும் சேர்ந்திருக்கும். திலகாவோட கதையை என்னால கற்பனை கலந்து மாத்த முடியலை. வள்ளியோட பாதத்தை முருகன் தணியாத மோகத்தோட பற்றின மாதிரி ஒரு காட்சி... ஞானராஜ் மேஸ்திரி திலகாவுக்குப் பூட்டின கொலுசு, காதல் பரிசுன்னா, அந்த முத்தம் அவளோட உழைப்புக்கும், கம்பீரத்துக்கும் அவர் செய்த மரியாதை. அந்த மண் படிஞ்ச பாதம், அப்படியே என் கண்ணுக்குள்ளே இன்னும் இருக்கு... அந்தக் காட்சியை அப்படியே எழுதினா, அதனோட புனிதமான அந்தரங்கத்துக்கு நான் அவமரியாதை செய்யறதா ஆயிடும். அதை மாற்றி எழுதற உரிமையும் எனக்குக் கிடையாதுன்னு நினைக்கறேன்... அதனாலே இந்தக் கதை எழுதப்படாமலே இருக்கட்டும்" என்றாள் சாயாக்கா.

இவ்வளவு உறுதியாய் சாயாக்கா சொன்ன பிறகும், 'இந்தக் கதையை நான் உங்களிடம் எவ்வாறு சொல்லலாச்சு?' என்று கேட்பீர்களே...அடுத்த முறை ரேடியோவிலோ, டி.வியிலோ 'சின்ன வீடா வரட்டுமா' என்று சித்தான் பெண்டுகளைக் கொச்சைப் படுத்தும் பாடல் ஒலிக்கும்போது, சாயாக்கா எழுத மறுத்த இந்தக் கதையை நீங்கள் நிச்சயம் நினைத்துக் கொள்வீர்கள் அல்லவா? அதற்காகத்தான் இந்தக் கதையை உடைத்துச் சொன்னேன். ●

## கொத்துக் கொத்தாக முடி கொட்டுவதைத்

தவிர்க்க இயலுமா? நிச்சயமாக இயலும்! வழங்குகிறோம் புதிய மேம்படுத்தப்பட்ட

# ஹேர் ப்ளஸ் ஹேர் டானிக்




ஹேர் ப்ளஸ் ஹேர் டானிக் இந்தியாவின் பாரம்பரியமிக்க சித்த மருத்துவ முறையில் கிடைப்பதற்கரிய மூலிகைகளின் பசுமையான சாறு மற்றும் இயற்கை மூலப்பொருட்களின் Extracts கொண்டு மிக மிகப் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆற்றல் மிகுந்த இதன் ஃபார்முலா உங்கள் தலைமுடியின் வேர்க்கால்களில் ஊடுருவிப் பாய்ந்து தலைக்குக் குளிர்ச்சியளித்து, கொத்துக் கொத்தாக முடி கொட்டுதல், முடி உடைதல், இளநரை, செம்பட்டை, பொடுகு, தலையில் சொதில் சொதிலாக வெள்ளை நிறத்தில் தோன்றுதல், பிரசவத்திற்கு பின்னர் பெண்களுக்கு ஏற்படும் கேச இழப்பு, தீவிரமான நோய்த் தொற்றுதல் களுக்குப் பிறகு ஏற்படும் கேச இழப்பு முதலியவற்றைப் போக்கி அடர்த்தியான நீண்ட கருங்கூந்தல் செழித்து வளரச் செய்கின்றது. சித்த வைத்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்டது. எந்தவிதமான பக்கவிளைவுகளும் இல்லாதது. எத்தனையோ வகை வகையான கேசத்தைலங்களை உபயோகித்தும் திருப்தியான பலன் கிடைக்காதவர்கள் ஒரு முறை ஹேர்ப்ளஸ் ஹேர் டானிக் உபயோகித்துப் பாருங்கள் நிச்சயமாக நல்லதொரு மாற்றத்தைக் காண்பீர்கள்.

## கீழ்க்கண்ட இடங்களில் கிடைக்கும்

**சென்னை: வளசரவாக்கம்** மெட்ராஸ் மெடிக்கல்ஸ் **நங்கநல்லூர்:** துளசி மெடிக்கல்ஸ், போன்: 22343308 **பழவந்தாங்கல்:** அமுதா மெடிக்கல்ஸ் போன்: 22334520 **ஆதம்பாக்கம்:** RV மெடிக்கல்ஸ், போன்: 22444441 **ஜாபர்கான் பேட்:** ஸ்ரீராம் மெடிக்கல்ஸ் போன்: 24745792 **ராஜாராம் மேத்தா நகர்:** எவரெஸ்ட் மெடிக்கல்ஸ், போன்: 23743704 **வில்லிவாக்கம்:** ஸ்ரீ பால முருகன் மெடிக்கல், போன்: 26170560 **அயனாவரம்:** ஸ்ரீ லெட்சுமி மெடிக்கல், போன்: 98412 37679 **பாடி:** மீனா மெடிக்கல், போன்: 52017065 **ஆவடி:** K.J. மெடிக்கல், போன்: 26380245 **MGR நகர்:** வேலு பார்மஸி, போன்: 24854011 **திருவள்ளூர்:** லெட்சுமி மெடிக்கல்ஸ், போன்: 264580 **கோடம்பாக்கம்:** வில்லியம் பார்மஸி, போன்: 24727983 **வியாசர்பாடி:** அபிராமி மெடிக்கல் **பெரம்பூர்:** முருகன் மெடிக்கல், போன்: 25512691 **நுங்கம்பாக்கம்:** சாய் மெடிக்கல், போன்: 2821225 **பெசன்ட் நகர்:** ஷிபா மெடிக்கல், போன்: 24902975 **வேளச்சேரி:** மாருதி பார்மா, போன்: 22436243 **பல்லாவரம்:** முதுலை மெடிக்கல், போன்: 22410365 **போரூர்:** எஸ்.கே. பார்மஸி, போன்: 24768622 **ஆழ்வார் திருநகர்:** கிங்ஸ் மெடிக்கல்ஸ் **விருகம்பாக்கம்:** மாலா மெடிக்கல்ஸ், போன்: 24832238 **சாலிக்கிராமம்:** முத்து பார்மஸி, போன்: 23767377 **திருமுல்லை வாயல்:** தனா பார்மஸி, போன்: 26381129 **செந்தில் நகர்:** வைத்தியா மெடிக்கல், போன்: 26371298 **அண்ணாநகர்:** S.S. கெமிஸ்ட்ஸ், ரவுண்டானா, போன்: 26268010 **அமிஞ்சிகரை** : ராசி மெடிக்கல்ஸ், போன்: 26461762 **அரும்பாக்கம்:** முத்து மெடிக்கல்ஸ் போன்: 24750910 **தேனாம்பேட்டை:** ஸ்ரீ லெட்சுமி மெடிக்கல், போன்24331854 **மேற்கு மாம்பலம்:** சுபா மெடிக்கல்ஸ், போன்: 24843478 **அம்பத்தூர்:** பழனி மெடிக்கல்ஸ், போன்: 26581301 / கருப்பையா பார்மஸி **NSC போஸ் ரோடு:** ஸ்மித் ஸ்டாக்கிஸ் & கோ, போன்: 25383171 **அடையார்:** ஆன்ட்டி அங்கிள் மெடிக்கல், போன்: 24413758 **சைதாப்பேட்டை:** சாம் மெடிக்கல்ஸ், போன்: 24331845 **குரோம்பேட்டை:** வெங்கடேஸ்வரா மெடிக்கல், போன்: 2221719 **மேற்கு தாம்பரம்:** சரவணா மெடிக்கல்ஸ் போன் 22266813 **மைலாப்பூர்:** அடைக்கப்பா மெடிக்கல்ஸ், போன் 24933293 **RA புரம்:** சேதுராம் & கோ, போன்: 24334160 **K.K.நகர்:** வேலு பார்மஸி, போன்: 24747385 **வட பழனி:** ஸ்ரீ குமரன் மெடிக்கல், போன்: 24724794 **கோடம்பாக்கம்:** சரவணா மெடிக்கல், போன்: 5213415 **திருவான்மியூர்:** சூப்பர் மெடிக்கல்ஸ், போன்: 24451944 **செங்கல்பட்டு:** ஷிபா மெடிக்கல்ஸ், **மதுராந்தகம்:** சக்தி ஆனந்தா மெடிக்கல், போன்: 223800 **திண்டிவனம்:** செந்தில் மெடிக்கல்ஸ், போன்: 224704 **காஞ்சிபுரம்:** தமிழ்நாடு மெடிக்கல், போன்: 222285 **விழுப்புரம்:** ஸ்டார் மெடிக்கல் ஏஜென்ஸீஸ், போன்: 222758 **கடலூர்:** மஹாராஜா மெடிக்கல்ஸ், போன்: 223705 **நெய்வேலி:** ஜெயா மெடிக்கல் ஸ்டோர்ஸ், போன்: 252241 **வேலூர்:** ராஜன் மெடிக்கல்ஸ், ஆபீசர்ஸ் லைன் **திருப்பத்தூர் (NA):** மதுரா மெடிக்கல், போன்: 220699 **திருவண்ணாமலை:** மஹாராஜா மெடிக்கல்ஸ் போன்: 223707 **கள்ளக் குறிச்சி:** ரங்கா மெடிக்கல்ஸ் போன்: 223559 **திருச்சி:** வாசன் மெடிக்கல் ஹால் அனைத்துக் கிளைகள், போன்: 2704213/2412966/2700826 **தஞ்சாவூர்:** ஸ்டேட் மெடிக்கல் மார்ட் போன்: 274442/231949 வாசன் மெடிக்கல் சென்டர், போன்: 270096/278207 **கும்பகோணம்:** தி பாப்புலர் டிரக் ஹவுஸ், போன்: 2422028 மயிலாடுதுறை: **தரணி** டிபார்ட்மென்ட் ஸ்டோர், போன்: 222968 **திருவாரூர்:** சரோ மெடிக்கல்ஸ் போன்: 240525 **நாகப்பட்டினம்:** நாகை மெடிக்கல் ஸ்டோர்ஸ் / கமலாபார்மஸி **பட்டுக்கோட்டை:** ஹரீதியா மெடிக்கல்ஸ், போன்: 252504 **மன்னார்குடி:** மீனா மெடிக்கல்ஸ், போன்: 222665 **அறந்தாங்கி:** தமிழ்நாடு மெடிக்கல்ஸ், போன்: 222082 **புதுக்கோட்டை:** விநாயகா பார்மஸி, போன்: 221934 ஜாகிர் மெடிக்கல்ஸ், பழனியப்பா தியேட்டர் அருகில் **பொன்னமராவதி:** லலிதா பார்மஸி **கரூர்:** பாலா மெடிக்கல்ஸ் **திண்டுக்கல்:** KTT மெடிக்கல் ஸ்டோர்ஸ், போன்: 2433104 **பழனி:** ஜெயா மெடிக்கல் மார்ட் போன்: 242289 **தேனி:** ராஜாராம் மெடிக்கல்ஸ் போன்: 253401 **உசிலம்பட்டி:** ஸ்ரீ சரவணா மெடிக்கல்ஸ் / திருப்பூர் மெடிக்கல்ஸ் **ஸ்ரீவில்லிபுத்தூர்:** ஸ்ரீ லெட்சுமி மெடிக்கல்ஸ் **சாத்தூர்:** ஸ்ரீ பெரியாண்டவர் மெடிக்கல்ஸ் **அருப்புக்கோட்டை:** KM மெடிக்கல் ஸ்டோர்ஸ், போன்: 2220612 **விருதுநகர்:** சண்முகம் மெடிக்கல் ஹால், சிதம்பர நாடார் தெரு **ராஜபாளையம்:** குமரன் மெடிக்கல்ஸ், மதுரை ரோடு **சிவகங்கை:** ஸ்ரீ பாலாஜி மெடிக்கல்ஸ் **பரமக்குடி:** ஜனதா மெடிக்கல் மார்ட் **காரைக்குடி:** ரோஜா மெடிக்கல்ஸ் **தேவகோட்டை:** செல்வா மெடிக்கல்ஸ் **ராமநாதபுரம்:** நியூ பாம்பே மெடிக்கல்ஸ், தேவிபட்டணம் ரோடு **கோவில்பட்டி:** சாந்தி மெடிக்கல் ஸ்டோர்ஸ், TMB பேங்க் அருகில் **தூத்துக்குடி:** சரவணா மெடிக்கல்ஸ், டெலிகிராப் ஆபீஸ் ரோடு **திருநெல்வேலி:** செயின்ட் மேரீஸ் மெடிக்கல் ஸ்டோர்ஸ் **நாகர்கோவில்:** தேவ் மெடிக்கல்ஸ் **மதுரை:** தனலெட்சுமி ஏஜென்ஸீஸ், வடக்குச் சித்திரை வீதி / ஸ்ரீனிவாசா மெடிக்கல்ஸ், ஆரப்பாளையம் கிராஸ் / ராமகிருஷ்ணா மெடிக்கல்ஸ் / புதூர் மெடிக்கல்ஸ் / மீனாட்சி மெடிக்கல் K.K நகர் / அபிராமி மெடிக்கல், கோரிப்பாளையம் / தனலெட்சுமி ஆயுர்வேத மருந்தகம், கோரிப்பாளையம் **உடுமலைப்பேட்டை:** ஜும் ஜும் மெடிக்கல்ஸ் போன்: 224563 **பொள்ளாச்சி:** ராமனாதன் மெடிக்கல்ஸ், போன்: 2227161 **திருப்பூர்:** பாலா மெடிக்கல் மார்ட் போன்: 2240610 **கீதா** மெடிக்கல் ஸ்டோர்ஸ், போன்: 2241311 கீதா பார்மஸி, அவிநாசி ரோடு, போன்: 2205069 **ஈரோடு:** **ஸ்ரீ கண்ணன்** மெடிக்கல் ஏஜென்ஸி, போன் 222373 **கோயம்புத்தூர்:** **ஸ்ரீ கண்ணன்** டிபார்ட்மென்ட் ஸ்டோர், போன்: 22231596 காசிநாத் & கோ, டவுன் ஹால் புவனா மெடிக்கல், பங்கஜா மில் ரோடு / அழகு பார்மஸியின் அனைத்துக் கிளைகள் / சுந்தரம் பார்மஸி, சாய்பாபா காலனி / துளசி பார்மஸி **சேலம்:** சாம்ரோக பார்மஸி, போன்: 2264816 ரோக பார்மஸி, போன்: 2265380 **தர்மபுரி:** விஜய லெட்சுமி மெடிக்கல்ஸ், போன்: 260222 **ஓசூர்:** மூர்த்தி மெடிக்கல் ஸ்டோர்ஸ், போன்: 242201

**❊ அனைத்து மருந்துக் கடைகளிலும் கிடைக்கும். ❊**

# துடிக்கிறதா? நடிக்கிறதா?



* அழகிய தீயே - நவ்யாதாஸ், பிரசன்னா.




* செந்தாழம்பூவே - தேவயானி

'எனக்கு மாற்றாக ஒரு திரைக் கவிஞன் வந்துவிட்டால், எனது இடத்தை, நான் விட்டுக் கொடுக்கத் தயார்' என்று வைரமுத்து சவால்விட்டு, மூன்றாண்டுகள் ஓடியே விட்டன. ஏற்கெனவே நா. முத்துகுமார், தாமரை, போன்றவர்கள் அவரது சவாலுக்கு ஈடு கொடுக்கும் வண்ணம் எழுதி வருகிறார்கள். இப்போது மூன்றாவதாக கவிவர்மன் என்ற புதிய பாடலாசிரியர் வந்து சேர்ந்திருக்கிறார். பிரகாஷ் ராஜ் தயாரிப்பில், ரமேஷ் விநாயகம் இசையில் வெளிவரவிருக்கும் 'அழகிய தீயே' படத்தில், இவர் எழுதியிருக்கும் எல்லாப் பாடல்களும் பிரமாதம் என்று பாராட்டிக் கொண்டே குமைந்து போகிறார்கள் போட்டிப் பாடலாசிரியர்கள். அப்படி என்னதான் புதிதாக எழுதி இருக்கிறார் இந்த ஆசாமி? சாம்பிளுக்கு இரண்டு வரி. "இருதயமே துடிக்கிறதா? துடிப்பதுபோல் நடிக்கிறதா?"

**கோ**லங்கள் தொடர் ஹிட் ஆகி விட்ட பூரிப்பில், சினிமாவை மறந்து விட்டாரோ தேவயானி என்று நினைத்தால், சத்தியமாக இல்லையாம். "எத்தனை அறிமுகங்கள் வந்தாலும், எனக்கான வாய்ப்புகளை யாரும் தடுக்க முடியாது" என்று தன்னம்பிக்கை பேசும் தேவயானி, 'செந்தாழம்பூவே' படத்தில் கதாநாயகியாக நடித்துக் கொண்டிருக்கிறார். சென்னையில் உள்ள பிரபல கார்பரேட் மருத்துவமனை ஒன்றில், நோயாளிகள், டாக்டர்கள், செவிலியர்கள் என்று தொடர்ந்து கொலை செய்யப்படுகிறார்கள். போலீஸ் கொலைகாரனைக் கண்டுபிடிக்க முடியாமல் திணற, நர்சாகப் பணி புரியும் தேவயானி கண்டுபிடிப்பது தான் கதையாம்.

**ஆ**ட்டோகிராஃப் படத்தில் சேரனின் உயிர்த் தோழராக நடித்திருக்கும் வேல் முருகன், 'நேசம் புதுசு' படத்தின் இயக்குனர். டைரக்ஷன் தொழில் போரடித்துவிட்டால், இயக்குனர்கள் நடிக்க வருவது வழக்கம். இவரோ டைரக்ஷன் வாய்ப்புகளைத் தள்ளி வைத்துவிட்டுக் காமெடி ரோல்களில் கலக்கத் தொடங்கி இருக்கிறார். "கவுண்டமணி, செந்தில், வடிவேலு மூவருக்கும் தொடர்ந்து நகைச் சுவைப் பகுதிகள் எழுதியதில், மனதளவில் நானும் ஒரு காமெடியனாக மாறிவிட்டேன். இயக்குவதைவிட நடிக்கப் பிடிக்கிறது" என்கிறார் இந்தக் காமெடியன்!



* சேரனுடன் வேல் முருகன்

- ரவுண்ட்ஸ் பாய்






# உருளைக்கிழங்கு ஒளிர்கிறது!

**வே**லு பிரபாகரன் இயக்கி வரும் 'காதல் அரங்கம்' படத்தின் கதாநாயகி ப்ரீத்தி ரெங்கயானியிடம் 'இந்தியா ஒளிர்கிறதா?' என்று கேட்டு விட்டோம். அவ்வளவுதான்!'' இந்தக் கேள்விக்கு என்கிட்டே பதில் இருக்காதென்று நினைச்சீட்டீங்க தானே?'' என அவரது முகத்தில் எள் வெடித்தது. ''நான் இளங்கலைப் புள்ளியியல் மாணவி. கடந்த ஐந்து ஆண்டுகளில் இருபத்தையாயிரம் இந்திய விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்கிறார் டாக்டர் வந்தனா சிவா. ஒவ்வொரு ஆண்டும் விலை உயர்ந்தபடி இருக்கும் விவசாய இடுபொருள்கள், டீசல் விலை, இவற்றுக்கு ஈடாக விளை பொருள்களின் விலை உயரவில்லை. அவ்வளவு ஏன், விளை பொருள்களை வாங்கக் கூட ஆள் இல்லை. உதாரணத்திற்கு இந்திய உருளைக் கிழங்கை எடுத்துக் கொள்ளுங்கள். அதனை அறுவடை செய்யும் கூலி விலை கூட கிடைக்காததால், டன் கணக்கில் அதைச் சாலையில் கொட்டி, விவசாயிகள் போராடியுள்ளனர். ஆனால் உருளைக் கிழங்கு சிப்ஸை பாக்கெட்டில் அடைத்து விற்கும் பன்னாட்டுக் கம்பெனிகள் மட்டும் பன்மடங்கு லாபத்தைக் கொள்ளையடிக்கின்றன. இவையெல்லாம் ஒளிரும் இந்தியாவில்தான் நடக்கிறது'' என்று ஒரே போடாகப் போட்ட ப்ரீத்தி ரெங்கயானி, தனுஷுக்கு ஜோடியாக 'பருவமே' படத்திலும் பட்டையைக் கிளப்பப் போகிறாராம்!

- ஸ்ரீ

பேராசிரியர் ப.இராம்கோபால்



# தூக்கம் விரட்டிய டோனி பூஷான்!

நான் ஒரு கிராமப்புறக் கல்லூரியில் தற்போது ஆங்கிலப் பேராசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருக்கிறேன். பெரும்பாலும் விஞ்ஞானப் பாடப் பிரிவுகளில் இடம் கிடைக்காத மாணவர்கள், கலை மற்றும் தமிழ் இலக்கியப் பாடப் பிரிவுகளுக்குப் போய் நிலைமையைப் பார்த்துவிட்டு, ஒரு கடைசிப் போக்கிடமாக, ஆங்கில இலக்கிய பட்டப் படிப்பை நாடுவது, எங்கள் கல்லூரி வழக்கம்! போதாத குறைக்கு, மொழியியல் என்ற கடினமான பகுதி வேறு இவ் வகுப்புக்கு உண்டு!

மொழியியல் பாடத்தை நடத்தும் ஆசிரியருக்கு, ஒரு விஞ்ஞானியின் மதி நுட்பம் தேவைப்படுகிறது. ஆசிரியரே பெரும்பாலும் வேறு மடம் கிடைக்காமல், ஆங்கில இலக்கிய மடத்தில் ஒதுங்கியவராகத்தான் இருப்பார்! நானும் அப்படி ஒதுங்கியவன்தான்!

இந்த மொழியியல் பாடத்தை நடத்தும்போது, ஆசிரியர் வகுப்புகளில் கதைவிட முடியாது; மாணவர்களும் தேர்வில் கதை எழுத முடியாது! இப்படிப்பட்ட 'சாமுத்திரிகா இலட்சணம்' கொண்ட பாடத்தைக் கண்டு, ஆசிரியரும் மாணவரும் 'ஐயோ!' என்று அலறுவார்கள். 'எல்லாம் முன்வினைப் பயன்!' என்று நொந்து போவோரும் உண்டு. 1977ல் நான் கல்லூரிக்குப் 'புதிய வரவு', ஆதலால் இந்தப் பாடம் என் தலையில் கட்டப்பட்டது!

மொழியியல் பாட வகுப்புகள் எல்லாமே பிற்பகல் முதல் பாடவேளைக்கு (2 pm to 3 pm) ஒதுக்கப்பட்டன. மாணவர்களுக்கு மதிய உணவிற்குப் பிறகு ஜம்மென்று தூக்கம் வரும் நேரமிது. இந்தச் சமயத்தில் 'மொழியியல்' நடத்தினால், எப்படி இருக்கும்? இந்தச் சித்ரவதையிலிருந்து தப்பித்துக் கொள்ள, விடுதி மாணவர்கள் வகுப்பிற்கு வரவே மாட்டார்கள். இன்னும் சிலர் நூலகத்துக்குப் போய் விடுவார்கள். பாடத்தையும் கேட்டுக் கொண்டு, அப்படியே தூங்கும் அற்புதக் கலையைக் கற்ற, ஒரு சில மாணவர்கள் மட்டுமே வகுப்பில் அமர்ந்திருப்பார்கள். நானும் கையிலிருக்கும் குறிப்புகளை வைத்துக் கொண்டு, பாடம் நடத்திக் கொண்டு இருப்பேன்.



இந்த நிலையில், ஒரு திடீர்த் திருப்பம் ஏற்பட்டது. 1999-ம் ஆண்டு. கோடை விடுமுறையில், நண்பர், ஆடிட்டர் கே.பி.எஸ். மணியனுடன் பேசிக் கொண்டிருந்தேன், ஒரு மாலைப் பொழுதில். கே.பி.எஸ். மணியன் கணக்குகளைப் பார்ப்பதில் மட்டும் நிபுணர் அல்ல, மனிதர்களைச் சரி செய்வதிலும் நிபுணர். 'ஜேசீஸ்' அமைப்பில், ஒரு பிரபலமான மனிதவள மேம்பாட்டுப் பயிற்சி நிபுணர்.

மொழியியல் பாடத்தில் எனக்கும் மாணவர்களுக்கும் இருந்த சவாலை விவரித்தபோது, அவர் சொன்னார்:

"கவலையை விடுங்கள். டோனி பூஷான் என்பவர் இரண்டு அருமையான புத்தகங்களை, 'The Mind Map Book', 'Speed Reading' எழுதியிருக்கிறார். வாங்கிப் படியுங்கள். உங்களுக்குப் பேருதவியாக இருக்கும்!"

உடனே என் புத்தகத் தேடல் ஆரம்பித்தது. இலேசில் கிடைத்துவிடவில்லை இந்தப் புத்தகங்கள். 'எங்களிடம் இருக்கின்றன!' என்று விற்பனையாளரிடமிருந்து கடிதம் வந்தபோது, அவற்றின் விலைகள் அச்சமூட்டுபவையாக இருந்தன. (இரண்டு புத்தகங்களும் சேர்ந்து, ஏறத்தாழ ரூ. 1000/-) எதிர்பார்த்தது போல 'நிதித்துறையின் ஒப்புதல்' இலேசில் கிடைக்கவில்லை - மனைவி, 'இரண்டு பெண் குழந்தைகளைத் திருமணத்திற்கு வைத்துக் கொண்டு இதென்ன பைத்தியக்காரத்தனம்?' என்று போர்க்கொடி தூக்கினாள். எதிர்வரும் போரைப் பற்றிக் கவலைப்படாமல், புத்தகங்களை வாங்கினேன்.

புத்தகங்களைப் பிரித்துப் பார்த்தேன். மெய்மறந்து போனேன்... 'மைண்ட் மேப்' புத்தகத்தில் அவ்வளவு வண்ணப்படங்கள்! படங்களைப் பார்த்து முடிந்ததும், படித்து முடித்தேன், ஒரே மூச்சில். மீண்டும் மீண்டும் படித்தேன். 'அடடா! இந்தப் புத்தகத்தைப் பற்றி முன்பே தெரிந்து கொள்ளாமல் போனோமே' என்ற ஆதங்கமும், 'இப்பொழுதாவது தெரிந்து கொண்டோமே' என்ற ஆனந்தமும் இதயத்தை நிரப்ப, 'உடுக்கை இழந்தவன் கை போல்' உதவிய நண்பருக்கு, நன்றி சொன்னேன்!

இதுதான் நானும் டோனி பூஷானும் 'பிசிராந்தையாரும் கோப்பெருஞ்சோழனு'மாக மாறிய கதை.

'டோனி பூஷான் தொழில் நுட்பத்தைப்' பயன்படுத்தி பாடம் நடத்த ஆரம்பித்ததும், நினைத்திராத மாற்றம் நிகழ்ந்தது. இருபத்திரண்டு வருடங்களாக 'போர்' அடித்துக் கொண்டிருந்த பாடம், மிகச் சுவாரசியமானதாக மாறியது. மாணவர்களும் 1.50க்கே ஆஜர். டோனி பூஷான் டெக்னிக் என்பது என்ன...?

இதுதான் சித்திரக் குறிப்பெடுப்பு முறை!

(தொடரும்)

# "மாமியார் மருமகள்



பெரிய பரபரப்போ, ஆர்ப்பாட்டமோ இல்லாமல் அமைதியாக இருக்கிறது தென்சென்னை அ.தி.மு.க. வேட்பாளர், பதர் சயீத்தின் ஆழ்வார்ப்பேட்டை அலுவலகம்.

காலை ஏழிலிருந்து பதினொரு மணி வரை பிரசாரம். பிறகு ரெஸ்ட். (வெயில்?) மாலை நான்கு மணிக்கு மேல் மீண்டும் பிரசாரம்!

விடாமல் சிணுங்கும் செல்போன் அழைப்புகளிடையே பதர்சயீத்தை அவரது அலுவலகத்தில் சந்தித்தோம்.

"உங்களுக்கும் முதல்வருக்குமான நட்பு பற்றிச் சொல்லுங்களேன்னுதான் எல்லா செய்தியாளர்களும் கேட்கறாங்க. அதை விட்டா வேற எதுவுமே விஷயமில்லையா?" என்றவரிடம், அதே கேள்வியைக் கேட்டோம்.

"அட போங்கப்பா!" என்று செல்லமாய்க் கோபப்பட்டவர், ஆரம்பித்தார்.

"முதல்வரைத் துணிச்சலா முடிவெடுக்கறவங்க, திறமையானவங்க, அறிவாளின்னு இப்ப எல்லோரும் சொல்றாங்க. சர்ச் பார்க் கான்வென்ட்ல படிக்கும்போதே, அவங்களைப் பற்றி எங்களுக்குத் தெரியும். ரொம்ப அழகா இருப்பாங்க. நல்லாப் படிப்பாங்க. எல்லாத்திலேயும் அவங்கதான் முதல்ல வருவாங்க. வியப்பா இருக்கும். அவங்களோட படிச்சதே பெருமையான விஷயம். அந்த வாழ்க்கைக்குப் பிறகு, அரசியல்ல ஒவ்வொரு கட்டமா அவங்க போராடி ஜெயிச்ச பாங்குதான், அவங்களை என்னோட ரோல் மாடலா, ஏத்துக்க வைத்தது.

"நான் எஸ்.ஐ.ஈ.டி.யில படிச்சுட்டு, கல்யாணத்துக்குப் பிறகு அமெரிக்காவுக்குப் போயிட்டேன். பன்னிரண்டு வருஷ குடும்ப வாழ்க்கைக்குப் பிறகு சென்னைக்கு வந்து, சட்டம் படிச்சேன். எனக்கும் முதல்வருக்குமான நட்பு தொடர்ந்தது. இலவச சட்ட மையம் மூலமா ஏழைகளுக்காக வாதாடியிருக்கேன். கஷ்டப்படுறவங்களுக்காக சேவை பண்ணறதுல, எப்ப

வுமே மனசுல ஒரு திருப்தி இருக்கும். அந்தத் திருப்தி இப்ப அதிகரிச்சிருக்கு. எம்.பி.யாகி, தமிழ்நாட்டு மக்களுக்காக வும், தொகுதி மக்களுக்காகவும் சேவை பண்ணப் போறேனே!"

கண்கள் மின்ன, சிரிக்கிறார்!

"முதல்வருடனான நட்புதானே தென் சென்னையில் உங்களுக்கு சீட் கிடைக்கக் காரணம்?" என்றால் மறுக்கிறார்.

"ஏன், எங்கிட்ட திறமை இருக்குன்னு அவங்க நினைச்சிருக்கலாமே? என் திறமை மேல நம்பிக்கை வச்சு 'சீட்' கொடுத்திருக்கலாமே? நான் இப்படித்தான் பார்க்கிறேன். நட்பு மட்டுமே காரணம்னு சொல்ல முடியாது" என்றவரிடம் "அரசியலை எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள்?" என்று கேட்டால், "அது ஒரு பெரிய விஷயமே இல்லை" என்கிறார்.

"நான் அரசியலுக்குப் புதுசில்லை. பல்வேறு சேவைகள் மூலமா, மக்களிடம் பழகிட்டுத்தான் வந்திருக்கேன். எப்ப பப்ளிக் மத்தியில வந்தாச்சோ, அப்பவே அரசியலுக்கும் வந்தாச்சு. நீங்க கேட்கிற 'அரசியல்' எனக்குப் புரியுது. அதைச் சமாளிக்கிறது ஒண்ணும் பெரிய விஷயமில்லை. ஒரு வீட்ல மாமியார், மருமகள் இருந்தா, அங்கேயே அரசியல் ஆரம்பிச்சுடுது. அவங்க போடற சண்டையே அரசியல்தானே!

**ரொம்ப அழகா இருப்பாங்க. நல்லாப் படிப்பாங்க. எல்லாத்திலேயும் அவங்குதான் முதல்ல வருவாங்க. வியப்பா இருக்கும். அவங்களோட படிச்சதே பெருமையான விஷயம்.**

"அதனாலே, அரசியலை எல்லா நிலைகள்லேயும் எதிர்கொள்றவங்க பெண்கள்தான். எப்படிச் சமாளிக்கணும்னு எனக்கு நல்லாவே தெரியும்" என்ற பதர்சயீத், "நான் எம்.பி.யானால், தொகுதிக்கும் தமிழகத்துக்கும் நன்மை செய்ய, நிறைய ஐடியாக்கள் வைத்திருக்கிறேன்" என்கிறார்.

"முதல்ல தண்ணீர்ப் பிரச்னை. இன்னைக்கு நேற்றா இருக்கு? காவிரிப் பிரச்னை ஒவ்வொரு வருஷமும் பொங்குது. மத்திய அரசு கூட்டணியில இருந்தவங்க, இதுக்காக ஏதாவது பண்ணினாங்களான்னு மக்களுக்குத் தெரியும்! இந்த மாதிரி நிறையப் பிரச்னைகள் இருக்கு. பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான பல வழிகளை வச்சிருக்கேன். அதை இப்போ நான் சொல்றதுக்கில்லை" என்று 'புதிர் சயீத்' ஆகிறார் பதர் சயீத்!

# சண்டையே அரசியல்தான்!"



- ஏக்ஜி

படங்கள் : ஸ்ரீஹரி

புகைப் பழக்கத்தினால் ஐந்து நிமிடத்திற்கு ஒருவர் இறக்கின்றாராம் பிரிட்டனில்! அங்கே பொது இடங்களில் புகைப் பிடிப்போர் எண்ணிக்கை மிக அதிகமாம்! மக்களை, குறிப்பாக இளைஞர்களை, இப்பழக்கத்திலிருந்து விடுபட வைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது பிரிட்டிஷ் அரசு. அயர்லாந்தில் சென்ற மாதம் முதல், பொது இடங்களில் புகை பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் சில நகரங்களிலும் கொண்டு வரப்பட்டுள்ளது. இதேபோல் பிரிட்டனிலும் கொண்டுவந்தால் மூன்று லட்சம் மக்களைக் காப்பாற்றலாம், என லண்டன் டாக்டர்கள் வற்புறுத்தி வருவதாகக் கூறுகிறது www.freakingnews.com

இந்தியாவில் இந்தச் சட்டம் இருப்பது யாருக்காவது ஞாபகமிருக்கிறதா?

• மகளிடம் பொருள் வாங்கும் தாய் பிரதமர்...



# வேலைக்குப் போகும் கோடீஸ்வரி!

தாய்லாந்தின் பிரதமர் தக்ஷின் ஷினவத்ரா, தமது பதினெட்டு வயது மகள் பேதாங்தனை, பணத்தின் அருமை தெரிய வேண்டுமென்பதற்காக, மாக்டொனால்ட் நிறுவனத்தில் பணி புரிய அனுப்பியிருக்கிறார் என்கிறது www.kathala.com

பரீட்சை விடுமுறையில் உள்ள தன் மூன்றாவது மகளை, பல்கலைக் கழக அனுமதியுடன் பணிக்கு அனுப்பியுள்ள பிரதமர் - ஒரு தொலைத் தொடர்பு நிறுவனத்தின் சொந்தக்காரர் என்பது குறிப்பிடத்தக்கது!

கோடீஸ்வரிகளுக்குப் பணத்தின் அருமை ஏன் புரிய வேண்டும் என்கிறது இந்த டாட்காம்.

நம்ம ஊர் அரசியல்வாதிகள் வாரிசுகளைப் பிரசாரத்துக்குத்தான் அனுப்புவாங்க!

யார் யார் என்னென்ன தமிழ் நூல்கள் வெளியிட்டுள்ளார்கள், என்ன விலை, எப் பதிப்பகம், முகவரி, தொலைபேசி எல்லாம் கொட்டிக் கிடக்கும் தமிழ் இணைய தளம் intamm.com. பல எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கியவாதிகளின் நேர்காணல்கள், கட்டுரைகள் பரவிக் கிடக்கின்றன.

நிறைய சிற்றிதழ்கள் இத் தளத்திலிருந்து விரிகின்றன. இணைய தமிழ் நூலகம் என்று தன்னைக் கூறிக் கொள்ளும் இத் தளத்தில், முரண்பாடான கருத்துகள் கொண்ட எழுத்தாளர்கள், எல்லோரும் தென்படுகிறார்கள் ஒரே முகவரியில்!

சினிமாத் தகவல்களை இவர்களும் விட்டு வைக்கவில்லை.

**ஜோக்:**

மியூசியம் ஒன்றில் பெண்மணி ஒருத்தி நீண்ட நேரம் ஓர் ஓவியத்தை இரசித்துக் கொண்டிருந்தாள். பின் அங்குள்ள அலுவலரிடம் சென்று "அந்த ஓவியம் ரொம்ப தத்ரூபமாக, அதேசமயம் பயங்கரமா இருக்கு. அருமை" என்றாள். உடனே அலுவலர், மெதுவாகக் கூறினார். "ஸாரி மேடம், அது ஓவியமல்ல... நிலைக் கண்ணாடி."

- முகில்

# வலை பாயுதே!

# வட்டமேஜை




# குளிர்ச்சி உவமைகள்!

✉ முப்போக சாகுபடி நிலங்கள், இன்று சாக்கடைத் தண்ணீரை நம்பியிருக்கிற கொடுமையான நிலையை எண்ணி மனம் நொந்து போனேன்!
கும்பகோணம்,
எஸ்கே. மூர்த்தி.

✉ சுதா மூர்த்தியின் 'உள்ளங்கையில் உலகம்' முதல் அத்தியாயமே விடாமுயற்சிக்கு வித்தூன்றியது!
நெய்வேலி, சாந்தி சுந்தர்.

✉ படித்து முடித்து விட்டு, படிப்புக்கேற்ற வேலையைத் தேடி அலையும் இன்றைய இளைய சமுதாயத்தினருக்கு, 'உத்யோகம் பொருத்த லட்சணம்' மிகவும் பயனுள்ள ஒன்று! வேலைக்கு ஏற்ப படிப்பை மாற்றிக் கொள்வதே புத்திசாலித்தனம் என்பதை உணர்ந்தால், வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பேச்சுக்கே இடமில்லை.
திருச்சி, அ. குர்ஷித்.

✉ திருப்பூர் கிருஷ்ணனின் 'அரவிந்த அமுதம்' முக்கனியைச் சுவைத்த திருப்தி தருகிறது. வேதா படங்கள் பிளஸ் பாயிண்ட். உலகிலேயே தெவிட்டாதது ஆன்மிகம் மட்டுமே.
சேலம் சின குபேரன், சென்னை-26

✉ தேவையில்லாமல், நடிகர் ரஜினிகாந்தைத் தெய்வமாகச் சித்திரித்துக் காட்ட முயலும் தகவல் தொடர்புச் சாதனங்கள் மத்தியில், தங்களின் முயற்சி சற்று மாறுபட்டுள்ளது.
விழுப்புரம், இரா. வே கோபால்

✉ 'பா.ஜ.கவின் உள்நோக்கு ஆவணம்!' தலையங்கம் படித்தேன். பா.ஜ.கவின் தொலைநோக்கு ஆவணம் குறித்து மிக விரிவாக அலசியிருந்தீர்கள். இந்துத்வாவும், அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதும், பா.ஜ.கவின் முக்கியக் கொள்கைகள். இதையெல்லாம் வைத்துத்தான் சாதாரண மக்களின் உணர்வுகளைத் தூண்டி கட்சி நடத்துகிறார்கள். ஆட்சியைப் பிடித்தார்கள். ஆனால், நீங்கள் எழுதியதைப் போல், பா.ஜ.கவின் கொள்கைகள் நாட்டின் பாதுகாப்புக்கும், எதிர்காலத்துக்கும் ஏற்றதல்ல. இதை மக்கள் உணர வேண்டும்.
மொரட்டுப்பாளையம்,
இரா.வி. சௌந்தர்யா விசாலினி.

✉ கேழ்வரகுக் கூழ், கோலா பெப்ஸி, வெள்ளரி, ஜில் ஜிகிர்தண்டா, லைம் சோடா, ஐஸ்க்ரீம், தர்பூசணிக் கீற்று, இளநீர் என 'குத்து' பட விமர்சனக் குளிர்ச்சி உவமைகள், கோடை மழையாய் மனத்தைக் குளிர்வித்தது.
திருவண்ணாமலை, எல்.எம். அபிதா

✉ 'அரசியல் நாயகர்கள்' சிலர் பற்றிய அடிப்படையான, அளவான செய்திகளைச் சுவாரசியத்தோடு அளித்திட்ட கையேடு, சிறப்பு.
ஈரோடு - 4, பேரா. கி. நாகராசன்

# சோ எழுதிய மஹாபாரதம் பேசுகிறது

– இரண்டு பாகங்கள்

ரூ. 500/–

## 'சோ'வின் பிற நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | உண்மையே உன் விலை என்ன | 37.00 |
| 2. | கூவம் நதிக் கரையினிலே - பாகம் - 2 | 45.00 |
| 3. | கூவம் நதிக் கரையினிலே பாகம் - 3 | 27.00 |
| 4. | துக்ளக் படமெடுக்கிறார் | 30.00 |
| 5. | சம்பவாமி யுகே! யுகே! | 30.00 |
| 6. | சாதல் இல்லையேல் காதல் | 41.00 |
| 7. | வெறுக்கத்தக்கதா பிராமணீயம் | 30.00 |
| 8. | எங்கே பிராமணன்? | 85.00 |
| 9. | துக்ளக் கேள்வி - பதில் - I | 24.00 |
| 10. | துக்ளக் கேள்வி - பதில் - II | 45.00 |
| 11. | சாத்திரம் சொன்னதில்லை | 30.00 |
| 12. | அதிகப்பிரசங்கம் | 32.00 |
| 13. | துக்ளக் தலையங்கங்கள் | 25.00 |
| 14. | யாருக்கும் வெட்கமில்லை | 28.00 |
| 15. | இன்பக் கனா ஒன்று கண்டேன் | 14.00 |
| 16. | இந்தியா எங்கே- போகிறது? | 12.00 |
| 17. | மனம் ஒரு குரங்கு | 30.00 |
| 18. | இந்து தர்மம் | 50.00 |
| 19. | காமராஜை சந்தித்தேன் | 33.00 |

## கவிஞர் வாலி இயற்றிய

# புலனடக்கத்தின் பொன்விழா

ஜயேந்திரரின் ஜன்ம சரிதம் - ஜனனம் முதல் ஜகத்குரு வரை

விசிஷ்டாத்வைதியின் பார்வையில்

## அத்வைத மகான்

(ஜெயகாந்தன் முன்னுரையுடன் மிக மிக உயர்தரமான தயாரிப்பு)

ரூ. 100/- மட்டும்

## உலக இலக்கிய வரிசை

தமிழில்: சிவன்

| | | | |
|---|---|---|---|
| 1. | சித்தார்த்தன் | - ஹெர்மன் ஹெஸ் | 35.00 |
| 2. | ஏழை படும் பாடு | - விக்டர் ஹியூகோ | 40.00 |
| 3. | ராபின் ஹுட் | - மேத்யூ ஹூக் | 45.00 |
| 4. | காரமசோவ் சகோதரர்கள் | - தாஸ்தயெவ்ஸ்கி | 35.00 |
| 5. | ராபின்ஸன் குடும்பம் | - யோஹான் டேவிட் வைஸ் | 32.00 |
| 6. | இலியட் | - ஹோமர் | 45.00 |
| 7. | ஒடிஸி | - ஹோமர் | 30.00 |
| 8. | பிரபு மாண்டி கிறிஸ்டோ | - அலெக்ஸாண்டர் டூமாஸ் | 37.00 |
| 9. | டாம்சாயர் | - மார்க் ட்வைன் | 37.00 |
| 10. | அதிசய உலகில் ஆலிஸ் | - கரோல் லூயிஸ் | 45.00 |
| 11. | ராபின்ஸன் குரூசோ | - டேனியல் டீஃபோ | 48.00 |
| 12. | மோபிடிக் | - ஹெர்மன் மெல்வில் | 45.00 |
| 13. | கலிவரின் பயணங்கள் | - ஜோனாதன் ஸ்விஃப்ட் | 40.00 |
| 14. | அன்னாகரேனினா | - லியோ டால்ஸ்டாய் | 35.00 |
| 15. | போரும் அமைதியும் | - லியோ டால்ஸ்டாய் | 32.00 |
| 16. | புதையல் தீவு | - ஆர்.எல். ஸ்டீவென்ஸன் | 42.00 |
| 17. | இழந்த உலகம் | - ஆர்த்தர் கானன்டாயல் | 32.00 |
| 18. | பிராங்கென்ஸ்டைன் | - மேரி ஷெல்லி | 40.00 |
| 19. | ஹெய்டி | - ஜோஹன்னா ஸ்பைரி | 30.00 |

## பி. ஸ்ரீ. ஆச்சார்யா எழுதிய

1. ஆழ்வார்கள் வரலாறு (8 தொகுதிகள்) ரூ. 306.00
2. அறுபடை வீடுகள் (6 தொகுதிகள்) ரூ. 210.00
3. திவ்யப் பிரபந்த ஸாரம் ரூ. 60.00

மற்றும்

4. அருணகிரிநாதரின் வாழ்க்கை வரலாறு ரூ. 30.00
5. கந்த புராணக் கதைகள் ரூ. 40.00
6. நாரதர் கதை ரூ. 25.00
7. நவராத்திரியின் கதைகள் ரூ. 23.00
8. ராஜரிஷி விசுவாமித்திரர் ரூ. 30.00
9. தசாவதாரக் கதைகள் ரூ. 32.00

---

1. மஹரிஷிகள் வரலாறு – A.V. ககவனேசுவரன் – 65.00
2. வேதம் வணங்கும் தெய்வங்கள் – 62.00
3. இந்துமத நன்னெறிகளும் சம்பிரதாயங்களும் - கிருஷ்ணசாமி – 50.00

அன்றாட வாழ்வில் பகவத் கீதையின் பயன்பாட்டை விளக்குவது

**கண்ணன் சொற்படி வாழ்வதெப்படி? ரூ. 50/–**

பேராசிரியர் 'பிலானி' வி. கிருஷ்ணமூர்த்தி

## அல்லயன்ஸ் கம்பெனி

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மயிலாப்பூர்
சென்னை – 600 004. ✆: 24941314

ஏப்ரல், 25 - 2004

# மினி கல்கி



கௌரவ ஆசிரியர்கள்...

ஓவியர் மருது

டாக்டர் கே. ஸ்ரீதர்

டாக்டர் எஸ். அசோக்

டாக்டர் எல். மகாதேவன்

சவேரா ஹோட்டல்ஸ் நீனா ரெட்டி

வழக்கறிஞர் கே. சுமதி

டாக்டர் இரா. அன்புமணி

பேராசிரியர் கு. ஞானசம்பந்தம்

டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன்

# புண்ணியம் தேடுங்க!

திருத்தல யாத்திரைக் கையேடு

கோடை! கொளுத்தும் வெயில்; மழை மறந்த வானம்! எல்லாவற்றையும் சற்று மறந்துவிட்டு, ஒரு 'மினி' திருத்தல யாத்திரை போகலாமே! அதுவும் 'தண்ணீர்த் தலங்'களாகப் பார்த்தால் நல்லது தானே?

திருக்கோவில்களைப் பற்றிச் சொல்கிறபோதே, 'மூர்த்தி, தலம், தீர்த்தம்' என்று முச்சிறப்பையும் சொல்வார்கள். முப்புறமும் கடல் சூழ்ந்த பாரதத்தில்தான், எத்தனை தீர்த்தச் சிறப்புடைய திரு நகரங்கள்! அதில் முக்கியமான சில திருத்தலங்களை மட்டும் பார்ப்போம்.

## மகாபலேஷ்வர், பஞ்சகங்கா!

கோடைக்கு ஏற்ற அருமையான தலம் மகாபலேஷ்வர்! மகாராஷ்டிர மாநிலத்தில் புனே நகருக்கு அருகில் உள்ள மலை நகரம் இது. நம்மை 'அடிமைப்படுத்தி ஆண்டார்கள்' என்று சொல்கிறோமே, அந்த மகானுபாவர்கள் தங்கள் வசதிக்காக உருவாக்கிய இடம்தான்.


ஆயினும் இங்கே ஓர் அழகான சிவாலயம் இருக்கிறது. வழக்கமான சிவலிங்க வடிவம் இல்லை. தரையோடு தரையாக என்கிற மாதிரி, சற்றே மேடிட்ட வடிவம். தானே உருவானது என்னும் 'ஸ்வயம்பு'. ருத்ராட்ச வடிவம் என்கிறார்கள். இந்த ருத்ராட்சத் திருமேனி முழுவதும் ஆங்காங்கே நதிகள் பிறந்து நெளிகிற மாதிரி, வரிவரியாய்த் தண்ணீர் கசிந்து கொண்டே இருக்கிறது.



பிரும்மா, விஷ்ணு, சிவன் மும்மூர்த்திகளும், ஒருருவில் இங்கே எழுந்தருளியிருக்கிறார்கள் என்று நம்பிக்கை.

மூலவரின் சந்நிதியின் எதிரேயுள்ள சதுரமான மேடையில் வைத்துத் தான் புகழ்பெற்ற மராட்டிய மன்னன் சிவாஜி, தம்முடைய தாயார் ஜீஜாபாய், ஆசிரியர் அமார்த்ய ஸேனோ பந்த் தபீர், இருவரின் எடைக்கு எடை பொன் வழங்கிச் சிறப்பித்திருக்கிறார்.

இத்தலத்திலிருந்துதான் ஐந்து நதிகள் பிறந்து தரையில் நடப்பதாய்ச் சொல்கிறார்கள். ஆலயத்தின் அருகிலேயே உள்ளது 'பஞ்ச கங்கா' ஆலயம். இதைக் கோவில் என்பதைவிட, அழகான திருக்குளக் கட்டுமானம் என்பதே சரியாய் இருக்கும்.



இரண்டு பிரும்மாண்டமான நீர்த் தொட்டிகள். ஒரு பசு சிற்பத்தின் வாய் வழியே, தண்ணீர் பெருகி வந்து தொட்டிகள் நிறைகின்றன. எப்போதும் ஆட்டம் போட்டு நீராடி மகிழும் கூட்டம் உண்டு. திருக்குளத்தைச் சுற்றிய மேடையில், பஞ்ச நதிகளின்



* துவாரகை

தேவதைகளும் சிறிய சிற்ப வடிவங்களில் அருள் பாலிக்கிறார்கள்.

தமிழ் நாட்டு உணவு வகைகள் உட்பட, எல்லா வசதிகளும் நிறைந்த மலைவாசத் தலம் இந்த மகாபலேஷ்வர்.

## புஷ்கரத்துப் புனித ஏரி!

கங்கைக் கரையில் உள்ளது போல் ஐம்பத்தியிரண்டு ஸ்நான கட்டங்களோடு கூடியது ராஜஸ்தானத்துப் புஷ்கர் ஏரி. 1913ஆம் ஆண்டில் இங்கிலாந்து அரசி,

மினி கல்கி

பெண்களுக்காகவே என்று ஒரு ஸ்நான கட்டத்தை உருவாக்கித் தந்திருக்கிறார்.

ஆஜ்மீர் நகருக்கு வடமேற்கில் பதிமூன்று கி.மீ. தொலைவில் வளைந்து வளைந்து போகும் மலைப் பாதையில், மனசுக்கு இதமான பயணம் போனால், 'நாக் பஹாட்' (நாகர் மலை) குன்றின்மீது அமைந்துள்ளது இந்த அழகான புஷ்கர் ஏரி.

கார்த்திகைப் பௌர்ணமியில் புஷ்கரில் நீராடுவது விசேஷம் என்றால், அன்றைக்குச் சந்திரோதயம் ஆனவுடன் பக்தர்கள் சின்னச் சின்ன அகல்களில் தீபமேற்றி, ஆயிரக் கணக்கில் ஏரிப்பரப்பில் மிதக்க விடுவது ஓர் அற்புதக் காட்சி. 'தீப தானம்' என்கிறார்கள். இந்த அற்புதக் காட்சியைக் காண்பதற்காகவே, பதினைந்து முறை புஷ்கருக்கு வந்தாராம் முகலாய மாமன்னர் ஜஹாங்கீர்.

ஆஜ்மீரை விட்டுப் புறப்படுகிறபோதே, கடல் போல் பரந்து கிடக்கும் 'ஆனா ஸாகர்' ஏரியைச் சுற்றிக் கொண்டுதான் மலைப் பாதையில் ஏற வேண்டும். பாலை வனங்களுக்குப் பெயர் பெற்ற ராஜஸ்தானத்தில், இப்படி நீர்வளச் சிறப்பும் உண்டு. கோடை தொடங்கும்போதோ அல்லது முடியும்போதோ போனால், கொஞ்சம் வெயிலைச் சமாளிக்கலாம்.



ஒரு யாகம் செய்வதற்காக பிரும்மதேவன் இடம் பார்த்து அலைந்தபோது, அவன் கரத்திலிருந்த தாமரை மலரின் இதழ் உதிர்ந்த இடம் இது. யாகம் நடைபெற்றது கார்த்திகைப் பௌர்ணமியில். பிரும்ம தேவன் நீராடிய இடம் வராஹ கட்டம்! எனவே இது தனிச்சிறப்புடையது என்கிறார்கள்.

பிரும்மாவுக்கு என்று தனியாக ஒரு கோயில் இருப்பது இந்தப் புஷ்கரில் மட்டும்தான்.

## நந்திமண்டலத்து அற்புதம்!

ஆந்திர மாநிலம் நந்தியால்! சிறிய பேருந்து நிலையத்தில் யாரையும் வழி கேட்கவே வேண்டாம். தெலுங்குப் பெயர்ப் பலகையில் நந்தி உருவம் வரைந்துள்ள இடத்தில் வந்து நிற்கும் பேருந்தில் ஏறி அமர்ந்தால் போதும். பின்னணியில் அடர்த்தியான பசுமை தவழும் நல்ல மலைக்காட்டின் அழகான தோற்றம், மகா நந்தீஸ்வரர் ஆலயம், கம்பீரமான கோபுரங்களோடு!

* புஷ்கர் ஏரி



இங்கே தீர்த்த விசேஷம் அற்புதமானது, மகா நந்தீஸ்வரரின் சிவலிங்க வடிவ மூலவரின் கருவறையிலிருந்தே நீரூற்று

பெருக்கெடுக்கிறது. ஆலயத்தின் உள்ளேயே சதுர வடிவில் அமைந்துள்ள ருத்ரகுண்டம் திருக்குளம், குறிப்பிட்ட அளவுக்கு நிரம்பிவிடுகிறது. திருக்குளத்தின் தரையும் கற்களும் அன்பர்கள்



• மானஸரோவர்

இடுகிற நாணயங்களும் கூடத் தெரிகிற மாதிரி, கண்ணாடித் தகடு போன்ற 'தூய பெருநீர்'!


இதில் நீராட அனுமதியுண்டு. சகல பாபங்களும் அகலும். பூரண அமைதி, நோயற்ற வாழ்வு எல்லாம் கிட்டும். ருத்ர குண்டத்தில் நிரம்புகிற நீர், நிலத்தடி ஓடைகளின் வழியே வெளியேறி, ஆலயத்தின் நுழைவாயிலுக்கு இருபுறமும் உள்ள செவ்வக வடிவிலான இரண்டு தொட்டிகளை நிரப்பி, அதிலிருந்து வெளியேறுகிற மிகைநீர், ஆயிரம் ஏக்கர்களுக்கு மேல் உள்ள வாழைத் தோப்புக்களுக்குப் பாய்ந்து கொண்டிருக்கிறது.

இங்கேயும் பசுமாடு காட்டிய இடத்தில்தான் சிவபெருமானைக் கண்டிருக்கிறார்கள் என்பது சுவையான தல வரலாறு. மூலவருக்கு எதிரில் நான்கு அடி உயரத்துக்கு

மினி கல்கி

ஆகிருதியோடு படுத்திருக்கும் நந்தி தான் மகாநந்தி!

சுற்று வட்டாரத்தில் ஒன்பது கிலோ மீட்டர் தொலைவுக்குள், ஒன்பது நந்திகளை உடையது இந்த நந்தி மண்டலம்.



## பாகீரதி நதிக்கரை!

புகழ்மிக்க புனித நதியான கங்கை, முதன் முதலாகத் தரை தொடுகிற திருத்தலம் தான் ஹரித்வார்! அதற்கு முன்னால் இமயமலைத் தொடரில் பிறந்து, ரிஷிகேசம் வழியாக பாகீரதி நதி என்ற பெயரில்தான் மௌன நடை பயில்கிறது கங்கை.



'அயோத்யா, மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்திகாபுரி, த்வாராவதி, சைவ சப்தேதா மோக்ஷதாயிகா'' என்று பிரபலமான சுலோக வரிகள் உண்டு. பாரதத்தின் புண்ணிய நகரங்கள் என்று கருதப்படும் ஏழில் ஒன்று, இந்த ஹரித்வார் என்கிற மாயாபுரி.

இமயமலைத் தொடரின் தென் பகுதியில் உள்ளது ஷிவாலிக் குன்றுகள். இதில் முக்கோண வடிவில் மூன்று ஆலயங்கள் இடம் பெற்று அருள் சுரக்கின்றன. மாயா தேவி, மானஸா தேவி, சண்டிதேவி என்ற மூன்று ஆலயங்கள் அமைந்துள்ள இடங்களும், சித்தர் பீடங்கள் என வழங்கப்படுகின்றன.

மானஸாதேவி பளிங்குத் திருமேனியில் அருள்பாலிக்கிறவர். சிறிய கருவறையில் அமர்ந்த திருக்கோலம். வெகு அருகில், தொட்டுவிடும் தொலைவில் நின்று அம்பிகையை வழிபடலாம்.



ஹரித்வாரிலிருந்து கம்பிப் பாதைகளில் கூண்டுகள் 'சர்... சர்...' என்று தலைக்கு மேலே போய்க் கொண்டே இருக்கும். நம் ஊர் ஆட்டோக்களின் சக்கரங்களை அகற்றிய மாதிரி அமைப்பில் இருக்கும் இக் கூண்டுகள். சண்டிதேவி ஆலயத்துக்கும், மானஸா தேவி ஆலயத்துக்கும் இப்படித்தான் போக வேண்டும். வலுவுள்ளவர்கள் நடக்கலாம். ஆனால் கூண்டுப் பயணம் சுவாரஸ்யமான அனுபவம்.



• மகா நந்தீஸ்வரர் கோயில்

# கொடி பறக்கும் திருக்கோவில்!

சிறு பிள்ளையாய்த் தவழ்ந்து வளர்ந்து அட்டகாசம் பண்ணிய மதுரா நகரத்தையும், பிருந்தா வனத்தையும் விட்டுவிட்டு, அரசோச்சுவதற்காகக் கண்ணன் வந்து சேர்ந்த இடம்தான் துவாரகை.

மேற்குக் கடலோடு கோமதி நதி சங்கமம் ஆகிற பகுதியில், அட்டகாசமான உயரத்தில் துவாரகாநாதனின் ஆலய வண்ணக் கொடி படபடத்துக் கொண்டிருப்பதைக் காணலாம். நாற்பத்து இரண்டு மீட்டர் துணியில் தயாராகும் கொடியை அடிக்கடி மாற்றிக் கொண்டேயிருப்பார்கள். இங்கே கொடியேற்றி அன்னதானம் செய்வது ஒரு வேண்டுதல். ஒன்றரை மணி நேரம் புதிய கொடியை துவாரகா நாதனுக்கு முன்னால் வைத்து பூஜை செய்த பிறகுதான் கொடியேற்றுவார்கள்.

கோமதி நதியின் தண்ணீர் வெகு பவித்திரமானது. ஆரவாரமில்லாத அழகோடு, வெகு நிதானமாய் நடந்து




✱ ஹரித்துவார்

சமுத்திரராஜனை முத்தமிடுகிறாள் கோமதி நதிமாதா! இவருக்கு மலர் தூவி வணங்கியபிறகு இங்கே நீராடிவிட்டு, ஐம்பத்தி யாறு படிக்கட்டுக்கள் கொண்ட 'ஸ்வர்கத்வாரா' வழியே மேலேறி, கோமதி மாதாவை வணங்கி விட்டு கண்ணனிடம் வர வேண்டும் என்பது மரபு.

கண்ணன் வாழ்ந்த இடம் 'பேட் துவாரகா' என்கிற சின்னஞ்சிறிய தீவு. ஒரு கிலோ மீட்டர் கடலில் பயணம் செய்து திரும்ப வேண்டும். வண்ண வண்ணப் பட்டாடைகளில் அர்ச்சகர்களும், அவர்கள் வீட்டு வாரிசுகளும் வளைய வருகிற காட்சியில் நிகழ்காலமே மறந்து போய்விடும்.







* பூரி ஜகந்நாதர் ஆலயம்

## தங்க முக்கோணம்!

ஒரிசா மாநிலத்தின் மூன்று திருத் தலங்கள்.. கோனார்க் சூரியன் கோவில், புவனேசுவர் ஆலயம், புரி ஜகந்நாதர் ஆலயம்.

வங்கக் கடலை ஒட்டிய அழகான நகரங்கள். கடலில் புயலும் கொந்தளிப்பும் அதிகமானால் முதல் பாதிப்பு இங்கேதான் சுழன்றடிக்கும். ஆனால் புயல் சூறாவளிகளால் எந்தக் கோவில் கோபுரமும் சேதமடைவதில்லை என்பது ஒரு சிற்ப விசித்திரம்!

தென்னகப்பாணிக்

மினி கல்கி

கோபுர அமைப்பு இல்லை. உருளை வடிவமாய் உயர்ந்து நின்று, வானைத் தொடுகிற கோபுரங்கள், எந்தப் பெருங்காற்றையும் எதிர்த்து நிற்கும் வலிமை பெற்றவை.


புவனேஸ்வரத்தில் பிரதானமான திருக்கோவில் லிங்கராஜர் ஆலயம். அருகில் நிறைந்த நீர்வளத்தோடு ஒரு திருக்குளமும் உண்டு. கோடை வெப்பம் தாங்காமல், லிங்கராஜர் ஒரு நாள் இரவில் படகுப் பயணம் மேற்கொண்டு, இந்தத் திருக்குளத்தின் மையத்தில் உள்ள சிறிய கோவிலுக்குப் போய் விடுவார். புவனேஸ்வரத்தில் உள்ள ஆலயங்களின் எண்ணிக்கை 'ஒரு கோடிக்கு ஒன்று குறைவு' என்கிற சொல் வழக்கு உண்டு. லிங்கராஜ் ஆலய வளாகத்துக்கு உள்ளேயே, எண்ணி மாளாத சிறுசிறு ஆலயங்கள் உண்டு.


லிங்கராஜ் சிவபெருமானின் திருமேனிதான் என்றாலும், ஹரி - ஹரன் இணைந்த சமரசத் தோற்றமாகவே எண்ணி வழிபடப்படுகிறார். த்வஜஸ்தம் பத்தில் நந்தியும் உண்டு, சிறியதாய் கருடாழ்வாரும் உண்டு. பார்வதி தேவியின் சந்நிதி அழகில் மயங்காதவர் இருக்க முடியாது. வண்ண வண்ண மலர் அலங்காரங்களோடு தரிசித்தால் வேறு பிறவியே வேண்டாம்.

சூரிய பகவானுக்காகவே பதின்மூன்றாம் நூற்றாண்டில் எடுப்பிக்கப்பட்ட கோனார்க் கலைக் கூடம் பெரும் அளவில் சிதைந்துபோய் விட்டது. பக்கத்துக்குப் பன்னிரண்டு சக்கரங்களோடு நிற்கும் பிரும்மாண்டமான தேர் வடிவத் திருக்கோயில் இது. ஆள் உயரத்துக்கும் அதிகமான உயரச் சக்கரங்களின் ஆரக்கல்கள் உட்படச் சிறிதும் பெரிதுமாய் லட்சக் கணக்கில் சிற்ப வடிவங்களைப் பார்க்கிறபோது, இந்தப் பிறவியில் வேறு எதுமே வேண்டாம் என்று தோன்றும்.



நம் தமிழ்ப் புத்தாண்டு தொடங்குகிற நேரத்தில், புரியில் சந்தன யாத்ரா என்பது சிறப்பாய் நடக்கும். மூலத்திரு மேனிகளை வெளியே எடுத்து வந்து, ஸ்நான மண்டபத்தில் வைத்துப் புனித நீராட்டி, அதன் பிறகு திரு உலாக் கொண்டுவருவார்கள். ஸ்நான யாத்திரை முடிந்து மூலவர்கள் கருவறைக்குள் சென்ற பின்னர், கதவை மூடித் திரை போட்டு விடுவார்கள். திரைச் சீலைகளில் ஒரிசாவின் புகழ் பெற்ற 'பட்ட சித்ரா' ஓவியங்





* மகாபலேஷ்வர்

களில்தான் மூன்று திருமேனிகளையும் தரிசிக்க முடியும். இந்த விழாவுக்குப் பிறகுதான் புகழ் பெற்ற ஜகந்நாதர் ரத யாத்திரை!

கோயில் வளாகத்தை ஒட்டி வெகு அழகான, அமைதியான கடற்கரை. எதிரில் ஏராளமான தங்கும் விடுதிகள், சுற்றுலாப் பிரியர்களுக்கு இதைவிடச் சிறந்த சுவர்க்க பூமி இருக்காது என்று தோன்றும்.

## யாத்திரை அனுபவம்!

புனித யாத்திரைக்கென்றே ஏகப்பட்ட டிராவல்ஸ்கள் இருக்கின்றன. பக்தர்களை இவர்கள் அழைத்துச் செல்லும்போது ஏகப்பட்டப் பிரச்னைகளைச் சமாளிக்கிறார்கள். அந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார் ஸ்ரீ டிரா வல்ஸை நடத்தும் இளந்திரையன்!

“ஹிந்துக்களுக்கென்று எத்தனையோ புண்ணியத் தலங்கள், காசி, கயா,


மினி கல்கி

ஹரித்வார், ரிஷிகேசம், கைலாசம், மானஸரோவர் என்று. பக்தர்களை வசதியாக அழைத்துச் சென்று வருவது ஆனந்தமான அனுபவமாயிருக்கிறது. தொழில் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், இந்தப் பணியில் ஆத்ம திருப்தியும் இருக்கிறது" என்கிறார் இவர்.

சமையல் ஆட்கள், பூஜைகளுக்கு வேண்டிய பொருள்கள், பூஜை செய்கிறவர்கள், வீடியோ கிராஃபர் என்று அனைத்து வசதிகளோடும் போய் வருகிறார்கள். ஹைதராபாதிலிருந்து அரிசி, விஜயவாடாவிலிருந்து ஊறுகாய் வகை, தவிர மற்ற மளிகைப் பொருட்களோடும் போகிறார்கள். காய்கறிகள், பழங்கள் ஆங்காங்கே கிடைக்கின்றன.

அதிகாலை மூன்று மணிக்கே எழுந்து, அன்றைய பயண ஏற்பாடுகளைக் கவனித்தாக வேண்டும். இரவு பதினொரு மணிவரை அடுத்த நாள் சுற்றுலாவுக்காகத் திட்டமிடும் வேலைகள், இப்படி ஓய்வே அரிதான நிர்வாகம்.

இவர் மேற்கொள்ளும் பயணங்களில் மானசரோவர் - கைலாஸ யாத்திரைதான் பிரபலமானது. இந்த ஆண்டில் ஜூன், ஜூலை, செப்டம்பர் மாதங்களில் இன்னும் மூன்று பயணங்களை மேற்கொள்ளவிருக்கிறார்கள். சென்ற பயணத்தில் வந்த எண்பது வயதான பெரியவர் கணேசன், அடுத்த பயணத்துக்கும் வருகிறேன் என்று கேட்டுக் கொண்டிருக்கிறாராம்.



மூவாயிரத்து எண்ணூறு மீட்டர் உயரம் கைலாச யாத்திரை சென்றபோது, ஒரு தம்பதி பெரும் சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டார்களாம். மேலே போகப் போக, மனைவிக்கு மூச்சு முட்டி தவிப்புக்குள்ளாகி விட்டதாம். உடனே அவர்களை மட்டும் தக்க துணையோடு ஜீப்பில் கீழே அனுப்பி, நைலம் மருத்துவமனையில் சேர்த்து வைத்தியம் பார்த்துக் குணப்படுத்த வேண்டிவந்ததாம். இந்த நைலம் சீன நாட்டு எல்லைக்குள் உள்ளது.

அந்தமானுக்கு ஒரு தனியார் நிறுவனத்தின் பணியாளர்கள் நூற்றிப்பதினைந்து பேரை அழைத்துப் போனபோது, அவர்களில் ஒருவர் எதிர்பாராமல் 'ஹார்ட் அட்டாக்' வந்து காலமாகிவிட்டாராம். அந்தமான் நகராட்சியில் எவ்விதத் தொந்தரவும் தராமல், ஒரு காசு லஞ்சம் பெறாமல் உடனே இறப்புச் சான்று தந்து, சடலத்தையும் காவல் துறை வண்டியி லேயே விமான நிலையம் வரை கொண்டு வந்து உதவியதை நெகிழ்ச்சி யோடு சொல்கிறார். சென்னை விமான நிலையத்தில் நிறுவனத் தின் பிரதிநிதிகள் வந்து சடலத்தைப் பெற்றுக் கொண்டார்களாம். பயணியின் சொந்த ஊரான குண்டக்கல்






* அந்தமான்

வரை, இவர்கள் பொறுப்பில் சடலத்தைக் கொண்டு போய் ஒப்படைத்த கனமான அனுபவத்தையும் நினைவு கூர்ந்தார் இளந்திரையன்.

எங்கு செல்வதானாலும் பக்காவான உயர்தர ஹோட்டல்களில்தான் தங்க ஏற்பாடு செய்கிறார்கள். கைலாஷ் - மானஸரோவர் யாத்திரை செல்லும் ஒவ்வொரு பயணிக்கும், யாத்திரையைப் பற்றிய ஸி.டி. படப்பதிவையும் வழங்குகிறார்கள்.

சுற்றுலா நடத்துகிற அனுபவத்தில் இளந்திரையன் மிகவும் மிரள்வது கல்கத்தாவை நினைத்தால்தான். பயணிகளின் லக்கேஜ், சமையல் பாத்திரங்கள் பண்டங்கள்



மினி கல்கி



• இளந்திரையன்

உட்பட வண்டியை விட்டு இறக்கி எடுத்துப் போவதற்குள் பெரும்பாடாகி விடுமாம். காவல்துறை உட்பட, ஆளுக்கு ஆள் பிய்த்துப் பிடுங்கியெடுத்து விடுகிறார்களாம்.

இவர்கள் மேற்கொண்ட முதல் சுற்றுலாப் பயணம் சிங்கப்பூர் - மலேஷியாவுக்குத்தான். 1972இல் இருபத்து நான்கு பேரை அழைத்துச் சென்ற பன்னிரண்டு நாள் சுற்றுலா தொடங்கும்முன், காஞ்சி ஹோட்டலில் ஒரு விருந்து வைத்தார்களாம். அப்போது வாழ்த்தியவர் நாவலர் நெடுஞ்செழியன்.

இஸ்லாமியர்களுக்கு என்று ஒரு தனியான சுற்றுலாவை எடுத்து நடத்த இவர் ஆசைப்பட்டு, மிகவும் முயன்றதுண்டு. ஆனால் அவர்கள் யாரும் முன் வராமல் போய், நஷ்டப்பட்டதுதான் மிச்சம் என்கிறார். ஆயினும் மதம் சாராத மற்ற பயணங்களில் எல்லோருமே வந்து கலந்து கொள்கிறார்களாம்.

கோடை விடுமுறைப் பயணங்களுக்காக, ஏழு மாதங்களுக்கு முன் பிருந்தே திட்டமிடுகிறார்கள். இருபதாண்டுகளுக்குப் பின் முதன் முறையாக, இப்போது காஷ்மீரப் பள்ளத்தாக்கு, வைஷ்ணவி - அமிர்தசரஸ் பயணத்துக்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.



அமைதியான பாரதம், அழகான பாரதம் 'ஒளிரும்'போது, சுற்றுலாப் பயணங்களும், சிறக்கும்! "அரசாங்கங்கள் எங்களுக்கு உதவ வேண்டும் என்பது கூட இல்லை. தொந்தரவு தராமலிருந்தால் போதும்." என்கிறார் இளந்திரையன்.

தொகுப்பு : சுப்ர. பாலன்
படம் : யோகா

---

# அருவியா? நீர்வீழ்ச்சியா?

**அமரர் கல்கி**

குற்றால நாதர் கோயிலுக்குள் இருக்கிறாரா? அல்லது மூட்டை முடிச்சுக்களோடு கிளம்பிப் போய் விட்டாரா? - இந்தச் சந்தேகம் என்னுடைய மனதைப் பிடித்துத் தின்று கொண்டிருந்தது. (அந்த தரித்திரம் பிடித்த, பஞ்சத்திலடிபட்ட சந்தேகத்துக்குப் பசி ரொம்ப!) ஏனென்று கேட்டால், சமீபத்தில் அந்தக் கோவிலுக்குள் ஹரி ஜனங்களை விட்டு விட்டார்கள் அல்லவா? ஹரி ஜனங்கள் புகுந்த பின், கோவிலில் சுவாமி இருப்பது சாத்தியமான காரியமா?

இந்தப் பயங்கரமான சந்தேகத்துடன்தான் குற்றாலத்துக் கோவிலுக்குச் சென்றேன். கோவில் வாசலில் "ஹரிஜனங்கள் உட்பட ஸகல ஹிந்துக் களும் இந்த ஆலயத்துக்குள் வந்து கடவுளைத் தரிசிக்கலாம்" என்று விளம்பரம் போட்டிருந்தது. இதிலிருந்து கடவுள் கோவிலுக்குள்தான்

இருக்கிறார் என்று தைரியம் ஏற்பட்டது. இல்லாமல் போனால் விளம்பரம் போட மாட்டார்கள் அல்லவா?...

குற்றாலத்தில் குற்றால நாதரின் கோவிலைத் தவிர, இன்னும் பல விசேஷங்களும் உண்டு. முக்கிய விசேஷம், அருவிதான். மலையில் மழை பெய்து, அந்த ஜலம் ஓடி வந்து மேலிருந்து கீழே கொட கொடவென்று கொட்டினால், அதற்கு 'அருவி' என்று பெயர். பூகோள சாஸ்திரத்தில் இதை 'நீர் விழ்ச்சி' என்று சொல்வார்கள். தஞ்சாவூர், சென்னை முதலிய இடங்களில் உள்ளவர்களும் அப்படித்தான் கூறுவார்கள். ஆனால் 'நீர் வீழ்ச்சி' என்றால், திருநெல்வேலிக்காரர்கள் சிரிப்பார்கள்.

"அருவியையா நீர் வீழ்ச்சி என்கிறீர்கள்?" என்பார்கள். டெக்ஸ்ட்புக் கமிட்டியாரால் அங்கீகரிக்கப்பட்ட பூகோளப் பாடப் புத்தகத்தைப் படித்திருந்தால்தானே அவர்களுக்குத் தெரியப் போகிறது?... அருவியில் குளிப்பது ஒரு பெரிய சுகம்தான். சந்தேகமில்லை. அருவியின் கிட்டப் போகும் வரையில் குளிரும். "போயும் போயும் இதிலே என்னத்துக்காகக் குளிக்க வேண்டும்? இந்த ஜலத்தில் ஒரு குடம் பிடித்துக் கொண்டு போய் வீட்டில் வெந்நீர் போட்டுக் குளிக்கலாம்" என்று தோன்றும். ஆனால் அருவியில் தலையை நீட்டி விட வேண்டியதுதான். குளிர் பறந்து போகும். அரை நிமிஷத்துக்கெல்லாம் உடம்பு கதகதவென்று ஆகிவிடும். அருவியில் ஜலம் சுமாராயிருக்கும் போது குளித்தால், உடம்பில் அம்மி பொளிவது போல் இருக்கும். அருவி நிறைய விழுகிற போது 'தொப தொப'வென்று கொட்டும். இந்த மாதிரி குளித்துப் பழகியவர்கள், மல்யுத்தத்தில் நன்றாய்ப் பெயர் வாங்குவார்கள். முதுகிலும் தோளிலும் எத்தனை குத்து விழுந்தாலும் தாங்கக் கூடிய சக்தி பெறுவார்கள்...

**தொகுப்பாக விரைவில் வர இருக்கும், அமரர் கல்கியின் 'யாத்திரைக் கதம்ப'த்திலிருந்து...**



கல்கி

# சிறுநீரகக் கோளாறுக்கு

## மூலிகைச்சாறு கிசிக்சை

**பக்க விளைவே இல்லாத பரம்பரை வைத்தியம் !**

**பயனடைந்தோர் பலர் !**

**கா**ரைக்குடி, பிப்ரவரி 1-

சிறுநீரகக்கல் மற்றும் சதை அடைப்புக்கு பரம்பரை பரம்பரையாக மூலிகை வைத்தியம் செய்து வரும் டாக்டர் அந்தோணி காணிக்கை ராஜ் குடும்பத்தினர் இயற்கை வைத்தியத்தை சேவையாக செய்து வருகின்றனர்.

### சிறுநீரகக்கல்

சிறுநீரகக்கல் அடைப்பு ஏற்பட்டு வலியால் துடியாய் துடிக்கும் நபர்களுக்கு மூலிகைச் சாறு கொடுத்து 35வது நிமிடத்தில் வலியை அறவே நின்று விடச் செய்கின்றனர். 3 நாட்கள் தொடர்ந்து காலையில் மூலிகைச் சாறு கொடுத்து வந்தால் உடனடியாக சிறுநீர் வழியாக கல் வெளியே வந்து விழும் சக்தி அந்த மூலிகைச் சாறுக்கு உள்ளது.

### சிறுநீரக பாதுகாப்பு

நமது சித்த மூலிகை மருத்துவம் எந்தவித பக்க விளைவையும் ஏற்படுத்தாது. அதே நேரத்தில் சிறுநீரக கோளாறுகளை பாதுகாப்பதுடன் அவைகளில் ஏற்படும் கோளாறுகளை முற்றிலும் குணமாக்கும் சக்தியைக் கொண்டது. இது போன்ற மூலிகைகளை உலகமே ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறது.

### பித்தப்பை கல்

அறுவைச் சிகிச்சை இல்லாமல் பித்தப்பைக் கல்லை கரைத்து வெளியேற்றும் சக்தி கொண்ட அற்புத மூலிகைச் சாறு சிகிச்சை நடைபெறுகிறது.

**மையம்**

குளோபல் ஹெல்த் கேர் டிரஸ்டின் மூலம் தொடங்கப்பட்டுள்ள இந்த குளோபல் கிட்னி ஸ்டோன் சென்டர் மற்றும் ஆராய்ச்சி மையம் காரைக்குடி கம்பன் மணி மண்டபம் அருகே எண்.16/14, தமிழ்த்தாய் கோவில் சாலையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

Ph: (04565) 232519, 224364
Cell: 98424 - 14959

**குளோபல் கிட்னி ஸ்டோன் சென்டர்,**

Dr. K. ஜெயலெட்சுமி B.S.M.S, M.D
19 - நவநீதம்மாள் தெரு,
ஷோபா கல்யாண மண்டபம் அருகில், சாலிக்கிராமம்,
சென்னை - 600 093
**Ph: (044) - 23763461**
**Cell: 98424 - 14959**

ஞாயிற்றுக்கிழமைகளில் இலவச ஆலோசனை உண்டு.



# S.V.முதியோர் இல்லம்



**Charitable Trust (Reg)**

இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப்படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் டாக்டர்களும், நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எல்லா எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

முதிய பருவத்தில் மறதி நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

***முதியோர் சேவை பெரியது!***

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

## S.V. HOME FOR AGED

**Charitable Trust (Reg)**

# 50 / 88, Panchali Amman Kovil Street, Arumbakkam, Chennai - 600 106.
(Near Panchali Amman Temple) Tel. Off: 044 - 2475 5700, 2475 6700, 2475 5799, 2475 1356
e-mail:svhome@vsnl.net



# தெளிவு

சுயநலமற்ற ஆசைகள் போல்
சூழலெங்கும் பூத்தன மலர்கள்

சொல்ல முடியாக் கருணையை
பனியெனத் தூவுகிறது தென்றல்

உருத்தெரியா ஒளியின் கீற்று
உள்ளத் தடை மீறிப்
பாய்கிறது உடல் முன்வரை

சோர்வை விதைக்கும் வேதனைகள்
மனதை எரிக்கும் சிறுமைகள்
விலகி விடுகின்றன
ஒரு கணத்தின் விழிப்பில்

உயிர் விரிந்தது போல்
ஆகாசம் தெரிகிறது
அர்த்தம் கடந்த மோனத்தில்.

வைதீஸ்வரன்

# அய்யா!

## ஒரு புத்தனின் யுத்தம்!

**'பாபா'வை அரசியல் பாடாய்ப் படுத்திக் கொண்டு இருக்க, ரஜினியின் அடுத்த படம் பற்றிய ட்ரெய்லரை வாசகர்களுக்கு (கற்பனையாகத்தான்) அளிக்க வேண்டாமா?**

வீரய்யாவாக ரஜினி - காவேரியாக த்ரிஷா - வில்லன் "டிராக்டர் மொக்கராசு"வாக கலாபவன் மணி, ஹாரிஸ் ஜெயராஜ் - வைரமுத்து - கே.எஸ். ரவிக்குமார்.

**கதை :** வீரய்யாவின் ஊரான லிங்கம்பட்டிக்கு வரவேண்டிய நீரை, பக்கத்து ஊர் பண்ணையார் டிராக்டர் மொக்கராசு அபகரித்துக் கொள்ள, அவரிடம் சுந்து வட்டிக்குக் கடன் வாங்கியதால் மக்கள் எதிர்க்க முடியாமல் வறட்சியில் வாட, கலையார்வமுள்ள வீரய்யா ஊர்த் திருவிழாவிற்காக 'விழிப்புணர்வு' நாடகம் ஒன்றை பண்ணையாருக்கு எதிராகத் தயாரிக்கிறார். கோபமடைந்த பண்ணையார், வீரய்யா தன் தாயின் தாலியை விற்று போட்ட நாடக மேடையை எரித்துவிட, வீறுகொண்ட வீரய்யா, அவருக்கு எதிராக சபதம் செய்து - செல்லுலாய்டில் சூப்பர் ஸ்டாராகிறார். பின்பு பெரிய அரசியல்வாதியாகும் பண்ணையாரின் கட்சியை, தேர்தலில், நம்பிக்கையான இளைஞர்களை வைத்துத் தோற்கடித்து - ஓர் இளைஞனை - வீரய்யா முதல்வராக்குவதே கதை!

இனி சில காட்சிகள்...
சில பஞ்ச் வசனங்கள்...
சில பக்கா பாடல்கள்...

**வீரய்யாவின் அறிமுகப்பாட்டு :**

(குழுவினர்) :
அன்பினால் ஆள்பவன்
ஐயான்னு பேரு!
கொண்டு வரப்போறாரு
ஊருக்கு நீரு!

(எஸ்.பி.பி):
என் பேரு வீரய்யா...
என் பின்னால் இருப்பது
ஆறுகோடி பேரய்யா!
உடலெல்லாம் ஓடுவது
தமிழ் மண்ணின் நீரய்யா!

**(பண்ணையாரிடம் வீரய்யாவின் சபதம்)**

"இந்த மேடையை நீ எரிச்சிருக்கலாம், - ஆனா எனக்காகக் காத்திருக்கிற மேடையோ வேற! இந்த மக்கள் மட்டுமில்ல - ஒரு நாள் எல்லா மக்களும் என் பின்னால வருவாங்க... அத... அத- அதத்தான் ஆண்டவன் நினைச்சிருக்கான்!"

என சபதமிட்டுச் செல்ல... பின்னணியில் பாடல்....

விதிவிட்ட வழி செல்பவன் மனிதன்
விதிக்கே வழி சொல்பவன் இறைவன்

நீ எங்களுள் வாழும் மனிதன்
உன்னுள் வாழ்பவனோ இறைவன்!

நதி தேங்கினால் தாங்காது பூமி!
விதி வெல்ல கிளம்புது சாமி!

**(பண்ணையாருக்கு எதிராக வீரய்யாவின் பஞ்ச்) :**


"உன் கண்ணுக்குத் தெரியறது என்னோட அரிதாரம். உண்மையில நான் உன்னை அழிக்க வந்த அவதாரம்!"

"மக்களை நல்லா ஏமாத்தறது உன் வேலை! மக்களை நல்லா மாத்தறது என் வேலை!"

"கண்ணா, உன் கையில இருக்கறது அக்தர் பந்து; என் கையில இருக்கறது சச்சின் பேட்... பாரு.. 'பறக்கப் போகுது ஆறு'

**(அரசியல் மேடையில வீரய்யா பண்ணையாரைப் பார்த்து)**

"அன்பா பார்த்தா, நான் திரியில எரியிற தீபம்;



அணைக்கப்பார்த்தா,
தாங்கமாட்ட என்
கோபம்!
என் வழியில வேலி போடாதே -
வலி தாங்க மாட்ட - அழிஞ்சிடுவே!"

**(தேர்தல் வெற்றிக்குப் பின்... ஒரு இளைஞனை வீரய்யா முதல்வராக்க... பின்னணியில்)**

சூழ்ச்சிகள் செய்தோ,
வேலிகள் போட்டோ
உன்னை நிறுத்த முடியாது!
நீயின்றி இனி
மக்கள் கோட்டையில்
யாரும் நிற்க முடியாது!

**- முகில்**

## ராஜேஷ்குமார்

அர்ச்சனா வியப்புடன் வைகையை ஏறிட்டாள்.

"ப்ராணேஷோட அம்மா, இப்ப எதுக்காக உன்னைப் பார்க்க வந்திருக்காங்க வைகை...! கல்யாண ஏற்பாடுகளைப் பத்தி பேசவா?"

வைகை புன்னகை செய்தாள். "நான் அப்படி நினைக்கலை. ஏன்னா, கல்யாண ஏற்பாடுகளைப் பத்தி பேசறதாயிருந்தா, அவங்க என்னோட அப்பாவையும் அம்மாவையும் பார்க்க வீட்டுக்குப் போயிருப்பாங்க. என்கிட்டே ஏதோ பர்சனலாப் பேசறதுக்காக வந்திருக்காங்கன்னு நினைக்கிறேன். அர்ச்சனா! நீ ஒரு பத்து நிமிஷம் இங்கே இரு... நான் போய் பேசிட்டு வந்துடறேன்."

அர்ச்சனா தலையை ஆட்ட, வைகை அந்த அறையை விட்டு வெளியேறி, வேக நடை போட்டாள். ஒரு நிமிட நடை. வரவேற்பறை வந்தது.

வரவேற்பறையில் இருந்த ஒரு பெஞ்சில் உட்கார்ந்து, ஜன்னல் வழியே வெளியே பார்வையைப் பதிந்திருந்த ப்ராணேஷின் அம்மா மணிமேகலை, வைகையின் நடைச் சத்தம் கேட்டுத் திரும்பினாள். முகம் ஒரு கல்லைப் போல் இறுகியிருந்தது.

"வாங்கம்மா..."

"உனக்கு இப்போ, ஏதாவது அவசர வேலை இருக்கா வைகை?"

"இல்லேம்மா... என் ஃப்ரண்ட் ஒருத்தி சென்னையிலிருந்து வந்திருந்தா... அவகிட்டதான் பேசிட்டிருந்தேன். ஏன் என்ன விஷயம்...?"

"உன்கிட்டே கொஞ்சம் பேசணும்..."

வைகை புன்னகை செய்தாள். "தாராளமா பேசலாம். சொல்லுங்க... என்ன விஷயம்?..."

மணிமேகலை சில விநாடிகள் தயங்கிவிட்டு, பேச்சை ஆரம்பித்தாள். "நான் ஒரு விஷயம் கேள்விப்பட்டேன். அது உண்மையா பொய்யான்னு கேட்டுத் தெரிஞ்சுக்கலாம்னு வந்தேன்..."

"என்ன கேள்விப்பட்டீங்க...?"

"அது...வந்து..."

"எதுவாயிருந்தாலும் பரவாயில்லை சொல்லுங்க..."

"உன் உடம்புல இப்போ ஒரு கிட்னிதான் இருக்காமே... உண்மையா...?"

வைகை முகம் நிறையப் புன்னகை செய்தாள். புன்னகை மாறாமல் கேட்டாள். "உங்களுக்கு இதை யார் சொன்னது...?"

"சொன்னவங்க யாருங்கிறது இப்போ முக்கியமில்லை. நான் கேள்விப்பட்டது உண்மையா... பொய்யா...?"

"உண்மைதான்...! மூணு வருஷத்துக்கு முன்னாடி, லஞ்ச ஊழல் கண்காணிப்புத் துறை கட்டடத்தில் வாட்ச்மேன் வேலை பார்க்கும் வீராசாமியின் ஒரே மகளான மல்லிகாவுக்கு, ரெண்டு கிட்னியும் செயலிழந்து போய், கிட்னி ட்ரான்ஸ்பிளான்டேஷன் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டபோது, அந்தப் பொண்ணுக்கு நான்தான் கிட்னி கொடுத்தேன்."

"அந்த விஷயம் உன்னோட அப்பா, அம்மாவுக்கு தெரியுமா...?"

"தெரியும்..."

"என்னோட மகன் ப்ராணேஷுக்கு உன்னைக் கல்யாணம் பேச வந்தபோது, இந்தக் கிட்னி தான விஷயத்தை ஏன் சொல்லலை...?"

"எதுக்காகச் சொல்லணும்? அது என்ன கிரிமினல் குற்றமா...? நான் இதுவரைக்கும் பத்து தடவை ரத்ததானம் பண்ணியிருக்கேன். பொண்ணு பார்க்க வர்றவங்ககிட்டே அதையெல்லாம் சொல்லிட்டிருக்க முடியுமா என்ன...?"

"சாமர்த்தியமா பேசிட்டிருக்கிறதா நினைப்பா...?"

"ஓ...! இப்படி பேசறதுக்குப் பெயர்தான் சாமார்த்தியமா...?"

"வைகை....! உன்னைப் பத்தி நான் ரொம்பவும் உயர்வா நினைச்சுட்டிருந்தேன்.

# கோடி கோ

# மின்னல்கள்

14

அந்த நினைப்பில் இப்போ மண்!"

"இதோ பாருங்கம்மா... உங்க நினைப்பில் நான் மண்ணையும் போடலை, பொன்னையும் போடலை. என்னோட கிட்னி தான விஷயம் எனக்கு ஒரு பெரிய விஷயமாவே படலை. அதனால, அதை நான் சொல்லலை..."

மணிமேகலை சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு, வைகையை ஏறிட்டாள்.

"இந்த கல்யாணத்துல எனக்கும் ப்ரானேஷோட அப்பாவுக்கும் இஷ்டமில்லை..."

"ப்ரானேஷுக்கு...?"

"அவனுக்கு இன்னமும் உன்னோட கிட்னி தான விஷயம் தெரியாது. தெரிஞ்சா, அவனோட ரியாக்ஷன் எப்படியிருக்கும்னு என்னாலே கெஸ் பண்ண முடியலை. ஒரு வேளை இதை பெரிய விஷயமா எடுத்துக்காமே, அவன் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க முன் வரலாம். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டு, கல்யாணம் நடக்கிறதுல எனக்கும் ப்ரானேஷோட அப்பாவுக்கும் உடன்பாடில்லை..."


"மொத்தத்துல இந்தக் கல்யாணம் நடக்கக் கூடாதுன்னு சொல்ல வர்றீங்க... இல்லையா...?"

"ஆமாம்..."

"சரி...! நான் இப்ப என்ன பண்ணனும்...?"

"நீ ப்ரானேஷுக்குப் போன் பண்ணி, நாளைக்கு உன் வீட்டுக்கு வரச் சொல்லணும்..."

"சொல்லி....?"



"எனக்கு இந்தக் கல்யாணத்துல விருப்பம் இல்லை... என்னோட அப்பா அம்மா சொன்னாங்களேன்னு ஒத்துக்கிட்டேன். இப்ப யோசனை பண்ணிப் பார்க்கும் போது, கல்யாணம் என்னோட லட்சியங்களுக்கு ஒரு தடைக்கல்லாய் இருக்குமோன்னு தோணுது. ஸோ... நீங்க வேற ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்குங்கனு சொல்லணும்."

"அவர் கேட்பாரா...?"

"ப்ரானேஷ் மறுத்துப் பேச முடியாத அளவுக்கு நீ ஸ்ட்ராங்கா சொல்லணும்..."

"சரி..."

"இப்ப சரின்னு சொல்லிட்டு, நாளைக்குச் சொதப்பிடக் கூடாது..."

வைகை புன்னகை செய்தாள். "நாளைக்கு ப்ரானேஷோடு நீங்களும் வாங்க. உங்க மகன்கிட்டே எவ்வளவு ஸ்ட்ராங்கா பேசறேன்னு நீங்களே பாருங்க..."

மணிமேகலை மெல்ல நடந்து வந்து வைகையின் கையைப் பற்றினாள்.

"வைகை! என் பேர்ல உனக்கு எந்த கோபமும் இல்லையே...? இன்னிக்குக் காலையில் பத்து மணி வரைக்கும் உன்னை எனக்கு ரொம்பவும் பிடிச்சிருந்தது. உன்னை என்னோட மருமகளாத்தான் நினைச்சுட்டிருந்தேன்... ஆனா... நீ ஒரு கிட்னி டோனர்னு தெரிஞ்சப்புறம்..."

வைகை புன்னகைத்தாள். "இதோ பாருங்கம்மா... உங்க பேர்ல எனக்கு கொஞ்சம்கூட கோபம் கிடையாது. வீட்டுக்கு வரப் போகிற மருமகள் ஒரு கிட்னி டோனரா இருக்கிறதை நீங்க மட்டும் இல்லை... வேற எந்த மாமியாரும் விரும்ப மாட்டாங்க... உங்க உணர்வுகளை நான் புரிஞ்சுக்கிட்டேன். நீங்க தைரியமா வீட்டுக்குப் போங்க. நான் இன்னிக்குச் சாயந்தரமே ப்ரானேஷுக்குப் போன் பண்றேன். அம்மாவைக் கூட்டிக்கிட்டு, நாளைக்குக் காலையில் ஒரு பத்து மணி சுமாருக்கு என்னோட வீட்டுக்கு வாங்க.. உங்ககிட்டே ஒரு முக்கியமான விஷயத்தைப் பத்தி பேசணும்னு சொல்றேன்."

"போன்ல எதையும் பேசிடாதே வைகை...?"

"எனக்குத் தெரியாதா என்ன...?"




அர்ச்சனா ஆவேசப்பட்டாள்.

"என்னடி... இது அநியாயம்? நீ ஒரு கிட்னி டோனர்ங்கிறதுக்காகக் கல்யாணம் வேண்டாம்னு சொல்றதா...? எங்கே அந்த அம்மா.... இன்னும் இருக்காங்களா.... இல்ல போயிட்டாங்களா?"

"போய்ட்டாங்க...."

"நீ என்னைக் கூப்பிட்டிருக்கணும்....! அந்த அம்மாவை நாலு வார்த்தை 'நறுக்'னு கேட்டிருப்பேன்... வாழ்க்கையில் விரக்தியடைஞ்சு மனசு வெறுத்துப் போய், தற்கொலை பண்ணிக்க இருந்த ப்ரானேஷுக்குப் புனர் ஜென்மம் கொடுத்தவள் நீ.. அந்த நன்றியுணர்ச்சி கொஞ்சமாவது வேண்டாம்....? தனக்கு வரப் போகிற மருமகள் ஒரு கிட்னி டோனர்ன்னு தெரிஞ்சதுமே பெருமைப் பட வேண்டாமோ...? எனக்குத் தெரிஞ்ச சொந்தக்காரப் பெரியவர் ஒருத்தர் ஒரு கிட்னியோடு எண்பது வயசு வரைக்கும் வாழ்ந்தார். ஒரு கிட்னி கொடுத்துட்டா, ஆயுள் நாட்கள்ல பாதி போயிடுமா என்ன?"

"அர்ச்சனா... கொஞ்சம் பேசாமே இருக்கியா?"

"எனக்குக் கோபம் கோபமா வருது..."

"ஆறுவது சினம்..."

"வைகை...! உன்னோட வாழ்க்கையை நினைக்கும்போது, எனக்குள்ளே இருக்கிற கடவுள் நம்பிக்கை காணாமப் போய்டறது. நீ யாருக்கும் எந்தக் கெடுதலையும் பண்ணலை. ஆயிரம் பேர்களை த[illegible] கொலையிலிருந்து காப்பாத்தியிருக்கே. ஒ[illegible] ஏழைப் பெண்ணுக்குக் கிட்னி டொனே[illegible] பண்ணியிருக்கே....ஆறு மாசத்துக்கொ[illegible] தடவை வாலண்டரியா போய், ப்ள[illegible] டொனேட் பண்ணியிருக்கே.. எத்தனையே[illegible] மெடிக்கல் கேம்ப்களை நடத்தி, ஏ[illegible] மக்களுக்கு இலவச இருதய பைபா[illegible] சர்ஜரிகளை ஏற்பாடு பண்ணிக் கொ[illegible]

இருக்கே... உனக்குக் கீழே இருந்த ரெண்டு தங்கைகளோட ஊனங்களையும் சரிப்படுத்தி, விருதுப் பணம் பத்து லட்சத்தையும் செலவு பண்ணி, அவங்களுக்கு நல்ல வரன்களைப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வெச்சிருக்கே.... பார்த்துக்கிட்டிருந்த நல்ல வேலையையும் ரிசைன் பண்ணிட்டு இந்த கிராமத்துக்கு வந்து, உடல் ஊனமுற்றோர் பள்ளியில் டீச்சரா வேலை பார்த்துகிட்டிருக்கே... எல்லாருக்கும் நீ நல்லது பண்ணியிருக்கிறேங்கிற ஒரே ஒரு காரணத்துக் காகவாவது அந்தக் கடவுள் உனக்கு நல்லது பண்ணியிருக்க வேண்டாமா?"

வைகை தோள்களைக் குலுக்கினாள். "நடப்பதெல்லாம் நன்மைக்கே...!"

"இந்த விட்டேத்தியான பதில் எல்லாம் உதவாது. ப்ராணேஷும் அவரோட அம்மாவும் நாளைக்குக் காலையில் உன்னோட வீட்டுக்கு வரும்போது நீ ஒண்ணும் பேசாதே... நான் அவங்ககிட்டே பேசிக்கறேன்... நான் கேட்கிற கேள்விக்கு அவங்க பதில் சொல்லட்டும்."

"அர்ச்சனா...! ப்ளீஸ்... இந்த விஷயத்துல நீ தலையிடாதே! நான் ஹேண்டில் பண்ணிக்கிறேன்..."

"வைகை... நான் என்ன சொல்ல வர்றேன்னா..."

"ஸாரி... அர்ச்சனா... இந்த விஷயத்துல நீ மட்டும் இல்லை.... வேறு யாரும் தலையிடறதையும் நான் விரும்பலை..."

"இதுதான் உன்னோட முடிவா...?"

"தீர்க்கமான முடிவுன்னே வெச்சுக்கலாம்..." வைகை சொல்ல, அர்ச்சனா கோபமாய் எழுந்தாள்.

அர்ச்சனா கோபமாய் கிளம்பிப் போன பிறகு, வைகை பள்ளியில் மேலும் ஒரு மணி நேரம் இருந்து, பணிகளைக் கவனித்துவிட்டு, மதிய உணவுக்காக வீட்டை நோக்கி நடந்தாள்.

சரியாய் மூன்று நிமிட நடை.

வைகை வீட்டை நெருங்கி வேலிப் படலைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனாள். வாசற்படியேறி கதவைத் தட்டப் போன விநாடி, வீட்டுக்குள் கேட்ட பேச்சுக்குரலால் அப்படியே நின்றாள்.

வீட்டுக்குள் அம்மா உமையாளும், அப்பா சீனிவாசனும் பேசிக் கொண்டிருந்தார்கள். பேச்சில் அவளுடைய பெயர் அடிபடவே, உன்னிப்பானாள். உமையாளின்



''தலைவா! உங்க தொகுதியில சாராயம் ஆறு மாதிரி ஓடுது!''

''அதைக் கொண்டு கூட்டுக்குடிநீர் திட்டம் அமைப்பேன்!''

- நெல்லையப்பபுரம் செல்வன்

குரல் கேட்டது. அழுகை கலந்த குரல்.

"வைகை விஷயத்துல நீங்க நடக்கறது கொஞ்சம்கூட சரியில்லீங்க..."

"என்ன சரியில்லை...?"

"என்ன சரியில்லைன்னு என்னையே கேக்கறீங்களா...? அவ டீ.வி சீரியல்ல நடிக்கணும்ங்கிறதுக்காக அவளுக்கு நடக்கவிருக்கிற கல்யாணத்தை நிறுத்தறது எந்த வகையில் நியாயம்...?"

"என்ன உமை... நீ புரியாமே பேசிட்டிருக்கே? அந்த ரேணுகாதேவி பெரிய கோடீஸ்வரி. அவ வீடு தேடி வந்து நடிக்கக் கூப்பிடறா...! ஒரு நாளைக்குச் சம்பளம் ஐம்பதாயிரம் ரூபாய் வரைக்கும் தர்றேன்னு சொல்றா...! பேசாமே ஒத்துக்க வேண்டியது தானே...? கல்யாணத்தைக் காரணம் காட்டி, அந்தத் தங்கமான வாய்ப்பை வேண்டாம்ன்னு சொன்னது, என்னோட மனசுக்கு சரியா படலை... அதான் ப்ராணேஷோட அம்மா மணிமேகலைக்குப் பப்ளிக் டெலிஃபோனிலிருந்து ஃபோன் பண்ணி, வேற யாரோ பேசற மாதிரி பேசி, வைகைக்கு ஒரு கிட்னி இல்லைங்கிற விஷயத்தைச் சொன்னேன். கல்யாணம் நின்னா நின்னு போகட்டுமே... இப்ப என்ன?"

உமையாள் அழுகைக்குரலில் வெடித்தாள். "என்னங்க... நான் உங்களை ஒரு கேள்வி கேட்கலாமா...?"

"கேளு..."

"வைகை, நாம பெத்த பொண்ணாயிருந்தா, இப்படியொரு காரியத்தைப் பண்ணியிருப்பீங்களா...?"

(தொடரும்)

# இவரும் நடிகர்தான்!

இலங்கையின் புதிய பிரதமராக மஹிந்தா ராஜபாக்சே அறிவிக்கப் பட்டதும், இந்தியாவில் டேராடூனில் உள்ள 'ரூரல் லிடிகேஷன் அண்டு என்டைட்டில்மென்ட் கேந்திரா' என்ற மனித உரிமை அமைப்பினர் இனிப்பு வழங்கி கொண்டாடினார்கள். காரணம், கடந்த ஐந்து வருடங்களாக இந்த அமைப்புடன் நெருக்கமாக இருக்கிறவர் ராஜபாக்சே என்பதுதான். அவர் டேராடூனுக்குப் பலமுறை வந்திருக்கிறார்.

மஹிந்தா ராஜபாக்சே, மனித உரிமைகளுக்குப் போராடுவதை லட்சியமாகக் கொண்டவர். டேராடூனில் அந்த அமைப்பினர் நடத்திவரும் மனித உரிமை குறித்த பயிற்சி அமைப்புக்கு, இவர் விசிடிங் புரொபசர்.



இவரும் நடிகர்தானாம்! சிங்களப் படங்களில் நடித்திருக்கிறார். கடந்த முப்பத்து நான்கு வருடங்களாகச் சிறந்த பாராளுமன்றவாதியாக இருந்து வருகிற இவர், சட்டப் படிப்பு படித்து, வக்கிலாகப் பணியாற்றியவர். செல்வாக்கும், செல்வச் செழிப்பும் கொண்ட குடும்பப் பின்னணி கொண்டவர். ஆனாலும், எளிய மக்களின் உரிமைகள் பாதிக்கப்படுகிற தருணங்களில், தயங்காமல் குரல் எழுப்பியவர். இவரது தந்தை டி.ஏ. ராஜபாக்சே, இலங்கை சுதந்திரக் கட்சியில், தொடக்க காலம் தொட்டே முக்கியப் பங்காற்றியவர்.

முதல் தடவையாக, இவர் பாராளுமன்றத்துக்குப் போனபோது வயது இருபத்திநான்கு. தீவிரமாக பௌத்த மதத்தைக் கடைப் பிடிப்பவர். இலங்கையின் தொழிலாளர் துறை அமைச்சராக ராஜாபாக்சே இருந்தபோது, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, பல புதிய பயிற்சித் திட்டங்களைக் கொண்டு வந்து, அனைவரது பாராட்டுகளையும் பெற்றார்.

''ரனில் விக்ரமசிங்கே துவக்கி வைத்த தமிழ் ஈழப் பிரச்னைக்கான பேச்சு, இனியும் தொடருமா? ஈழத்தமிழருக்கு விடிவு காலம் பிறக்குமா?'' என்றால், 'இவர் சந்திரிகாவுக்கு நெருக்கமானவராச்சே' என்று சொல்கிறார்கள்!

- கௌதம்ராம்



# தூக்கும் உன் கண்களை...!

ஆரோக்கியத்தினுடைய அடிப்படை நம்முடைய தூக்கத்திலிருந்து ஆரம்பிக்கிறது என்று ஒரு ஐரிஷ் பழமொழி சொல்கிறது. தூக்கம் அப்படி ஒரு மருந்தாக மனித உடலுக்கு இருக்கிறது. நிறையத் தூங்குவதும் ஆரோக்கியத்தைக் குறைக்கிறது. குறைவாகத் தூங்குவதும் ஆரோக்கியத்தைக் குறைக்கிறது.

மனித வாழ்வின் ஆதாரமான இந்த தூக்கத்தின் பின்னால், கனவு போன்றதொரு வரலாறும் இருக்கிறது. 1729ல் டி மெரின் என்பவர் தூக்கத்துக்கும் ஒளிக்கும் சம்பந்தம் இருப்பதாக முதல் தியரியை வெளியிட்டார். என்னதான் முயன்றாலும் பலருக்குப் பகலில் தூக்கம் வராமல் இருக்க, இந்தத் தியரிதான் காரணம். ஹைபோதலாமஸ் என்கிற மூளையின் மிக முக்கியப் பகுதியில் இருக்கிற சூப்ராகையாஸ் மேட்டிங் நியூக்ளியஸ் என்கிற நுண்புள்ளிதான், நம் தூக்கத்தை ஒழுங்குபடுத்துகிற கடிகாரம். Sleeping clock! ஒளி இந்தக் கடிகாரத்தை முன்னும் பின்னுமாக நகர்த்தி, தூக்கத்தை ஒழுங்கு செய்வதாக உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இந்த ஆய்வுகள் ஒரு புறம் என்றாலும், தூக்கம் என்பது என்ன என்று வரையறுப்பதிலேயே பல சுவாரசியங்கள் இருக்கின்றன. இந்த வரையறைகளில் எனக்குப் பிடித்தது ஆக்ஸ்போர்டு டிக்ஷனரியின் விளக்கம்தான். 'தூக்கம் என்பது உடலும் மனமும் ஒவ்வொரு இரவிலும் சில மணி நேரங்களுக்கு அடைகிற அமைதி நிலை. அப்போது நரம்பு மண்டலம் செயலற்று இருக்கும். கண்கள் மூடி இருக்கும். இயல்பான விழிப்புணர்வு நீக்கப்பட்டிருக்கும்!' கண்களைத் திறந்து கொண்டு தூங்குகிறவர்களைப் பற்றி, அந்த டிக்ஷனரி தயாரித்தவர்கள் இன்னும் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அரிஸ்டாடில் தூக்கம் என்பதை நம் வயிறு, ஜீரணத்திற்கு மனிதனுக்கு கொடுக்கும் ஓய்வு நிலை என்று வருணிக்கிறார். இதைத் தாண்டி வந்தால், தூக்கத்தை அளவிட ஈஈஜி என்கிற கருவி பயன்படுத்தப்படுகிறது.

சரி. தூங்குவதின் பயன்தான் என்ன என்று கவனித்தால், ஆச்சர்யமாக அது நமக்காக நிறைய வேலைகளைச் செய்கிறது. முதலில் சக்தியைச் சேமிக்கிறது. தூக்கத்தில் நம்மிடம் இருக்கும் சக்தியை நாம் செலவிடுவது குறைகிறது. வளர்ச்சி

வஸந்த் செந்தில்



# அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 2004

படைப்பாளிகளுக்கும்...
வாசக எழுத்தாளர்களுக்கும்
மாபெரும் வாய்ப்பு!

| | |
|---|---|
| முதல் பரிசு | – ரூ. 10,000 |
| இரண்டாம் பரிசு | – ரூ. 7,500 |
| மூன்றாம் பரிசு | – ரூ. 5,000 |

கடைசித் தேதி : ஜூன் 16

பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ.500 சன்மானம் பெறும். விதிமுறைகள், மற்ற விவரங்களுக்கு 18.4.2004 இதழ் கல்கியைப் பாருங்கள். அல்லது அடுத்த இதழுக்குக் காத்திருங்கள்.

- ஆர்.


தூக்கத்தில்தான் நடக்கிறது. உடலும் மனமும் புத்துணர்வு அடைவது. சோர்விலிருந்து விடுதலை. இவை, பொதுவாக தூக்கத்தின் மூலம் கிடைக்கிற நல்ல விஷயங்கள்.

இந்தத் தூக்கத்தில் தோன்றுகிற குறைபாடுகள் என்ன? தூக்கம் வராமல் இருப்பது. ஒரு நாள், இரண்டு நாள் என்றால் பரவாயில்லை. மாதக் கணக்கில் என்றால் அதற்குப் பெயர் இன்ஸோம்னியா! இவர்கள் இரவில் லைட்டைப் போட்டு உட்கார்ந்து கொண்டு, தூக்கம் வராமல் இருப்பதைப் பற்றி, கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சில நாட்கள் தூக்க மாத்திரைகள் பயன்படுத்திப் பார்ப்பார்கள். அதுவும் உதவாது. விடிய விடிய தண்ணீர் குடித்துக் கொண்டு, தேன் கிண்ணம்தான். ஒரு வருஷத்தில் நம்முடைய நாட்டில் இந்தப் பிரச்னைக்காக ஐந்து மில்லியன் தூக்க மாத்திரைகள் டாக்டர்களால் எழுதிக் கொடுக்கப்படுகின்றன. இந்தியாவில் பதினேழு சதவிகித மக்கள் இந்தத் தூக்கமின்மையால் அவதிப்படுகின்றனர். அதில் நாற்பது சதவிகிதம் பெண்கள். திடீரெனக் கொஞ்ச நாட்களாகத்தான் இந்தப் பிரச்னை என்றால், காரணம் வேலை பளுவாக இருக்கலாம். வேலை மாற்றமாக இருக்கலாம். வீடு மாற்றல்கூட இருக்கலாம். விவாகரத்து காரணமாக இருக்கலாம். தேவையற்ற பயமாக இருக்கலாம். வீட்டில் இரவில் சத்தம் கேட்கலாம். இரவுப்பணி செய்வது காரணமாக இருக்கலாம். என்ன என்று ஒரு மருத்துவரின் உதவியுடன் கவனித்துக் கொள்வது சிறந்தது.

வருடக்கணக்காக இருக்கிறது என்றால், டிப்ரஷன் என்ற மன அழுத்தம் மிக முக்கியக் காரணம். இந்த நிலையில் கட்டாயம் ஒரு மனநல மருத்துவரின் உதவி தேவை. தினந்தோறும் கடுமையான அழுத்தத்தில் வேலை செய்வதும் மற்றொரு காரணம். கேன்ஸர், ஆர்த்ரைடிஸ் போன்றவை கூட, நீண்ட நாள் தூக்கமின்மைக்குக் காரணமாகின்றன. இந்த நிலையில் கண்டிப்பாக உங்கள் குடும்ப நண்பர்களும் டாக்டர்களும் உதவினால், மீள முடியும்.

இதில் மற்ற வெளி விஷயங்களும் பெரிய உதவியைச் செய்ய முடியும். குறிப்பாக, யோகா மற்றும் தியானம். இப்போது நகரில் நெற்றியில் விபூதிப் பட்டை போட்டுக் கொண்டு, பல்வேறு நபர்கள் யோகா மையங்களைத் திறந்து வைத்திருக்கிறார்கள். ஆஸ்பிடல், ஹோட்டல் மாதிரி இவர்களும் பேக்கேஜ் வைத்திருக்கிறார்கள். இவர்களில் யாராவது ஒரு உருப்படியான நபரைத் தேர்ந்தெடுப்பது சிரமமான விஷயம். கவனித்துத் தேர்ந்தெடுத்து தூக்கமின்மையில் இருந்து விடுதலை பெறலாம்.

Preserve me from unseasonable and immoderate sleep என்று சாமுவேல் ஜான்சன் வேண்டிக் கொண்டார். எவ்வளவு அர்த்தம் பொதிந்தது!

(தொடரும்)

### பூப் பூவாய்ச் சில நினைவுகள் - சுப்ர.பாலன்

**த**ம்முடைய வாழ்க்கையின் நினைவுகளில் லயித்துப் போய், பூப்பூவாய்ச் சில நினைவுகளைச் சொரிந்திருக்கிறார் சுப்ர. பாலன். (ஆங்கில மொழியில் அவருக்கு மிகவும் பிடித்த சொல்லே 'நாஸ்டால்ஜியா' தானாம்)

ஆரம்பக் கட்டுரையே எச்சில் ஊற வைக்கிறது. 'புளியம் பழ உலுப்பல்' காட்சி அத்தனை தத்ரூபம்! சினிமா நோட்டீஸ் வாங்க விளம்பர வண்டியின் பின்னால் அந்த ட்ரவுஸர் பையன் (நூலாசிரியர்தான்!) - ''ஸார்...ஸார்'' என்று ஓடுவதும், அம்மா அவனை இரண்டு மொத்து மொத்துவதும் ரசனைக்குரிய காட்சி!

அப்பாவின் நிர்பந்தத்தினால் ஆயிரம் ரூபாய் வரதட்சிணை வாங்கிய விவரத்தை மிகுந்த வெட்கத்துடன் ஒப்புக்கொண்ட அதே பேனா, தமது பிள்ளைகளுக்கு வரதட்சிணை கேட்காமலும், கொடுக்காமலும் கல்யாணம் நடத்தியதைச் சொல்லும் போது, கௌரவமாகத் தலை நிமிர்கிறது.

மொத்தம் 27 கட்டுரைகள். அவற்றில் வாழ்க்கையை நெருங்கிப் புரிந்து கொண்ட திருப்தி தெரிகிறது. சொற்களை நேராகவும் செட்டாகவும் பயன்படுத்தியிருக்கிறார். ...ழுதப்பட்ட கதைகளின் ...தை இதுவாக இருந்தால், ...ழுதப்படாத மிச்ச விவரங்...ளின் கதை என்ன ஆயிற்று ...னக் கேட்கத் தூண்டுவதே ...வெற்றிதானே!

'இப்போது நினைத்தாலும் ...ந்தோஷமாக இருக்கிறது. ...ந்த அனுபவங்கள் இப்...பாதும் எப்போதும் நிறைகள் ...ரம்!' போன்ற வார்த்தைகள் திரும்பத் திரும்ப வருவதைத் தவிர்த்திருந்தால் காயகல்பப் பூச்சு இன்னும் கெட்டிப்பட்டிருக்கும்!

**கங்கை புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, சென்னை - 17, விலை : ரூ. 60/-**

- அனு

### நினைவின் வீதிகளில் - கவிஞர் கானப்ரியன்

**க**தையோ, கற்பனையோ, எதிர்பார்ப்போ எதுவுமற்று, யதார்த்த உலகை, எதுகை மோனையற்ற வார்த்தைகளால், சந்தங்களை தூரத்துச் சொந்தமாக்கி விட்ட வரிகளால், போகிற போக்கில் வர்ணிக்கும் பாவனையில் வடித்த உரைநடைக் கவிதைகள். மேம்போக்கான பாவனையாய்த் தெரிந்தாலும், உள்ளே ஒடிந்த முன் பதிந்த மனத்தின் உள் காயத்தில் உறைந்த வலியை, ஒவ்வொன்றாய் எடுத்துப் போடும் கவிதைகள்.

**சாந்தா பதிப்பகம், முத்துவிழா இல்லம், 13/5 ஸ்ரீபுரம் 2வது தெரு, ராயப்பேட்டை, சென்னை - 14, விலை ரூ. 25/-**

### என் நாட்குறிப்பின் நடுவிலிருந்து சில பக்கங்கள் - தாமரை

**வ**ருவது சித்தத்திலிருந்தா, உள்ளே கொதிக்கும் ரத்தத்திலிருந்தா என்று மொத்தத்தில் பிரமிக்க



# புக்பேங்க்!

வைக்கும் அனல் உமிழும் பெண்ணியக் கதைகள். இயல்புக்கும், இயற்கைக்கும் மாறாக இடையிடையே தோன்றினாலும், இவை படைப்பாளியின் கருத்து. அதுவும் அனுபவம் பெற்றுத் தந்தவை என்பதால் பாதிப்புகளோடுதான் ஏற்க முடிகிறது. வாழ்வியலின் வழித்தடங்களில், சற்று வறண்ட பாதைகளில் பயணித்த வாழ்க்கைக் குறிப்புகள்.

**குமரன் பதிப்பகம், 3. முத்துகிருஷ்ணன் தெரு, தி.நகர், சென்னை - 17, விலை ரூ. 50/-**

- விஷ்வக்

# சுதா மூர்த்தி

# ஜன்னல் வழியே...



எம்.சி.ஏ மாணவர்களுக்குச் சில வருடங்களாக நான் கம்ப்யூட்டர் சயன்ஸ் சொல்லிக் கொடுத்து வந்திருக்கிறேன். பல மாணவருடன் பழகியிருந்தாலும், எல்லோரையும் எனக்கு நினைவில்லை. ஆனால் சில மாணவர்கள் என் மனத்தில் பதிந்து போய்விட்டார்கள். அவர்கள், ஏதோ ஒரு விதத்தில் பிறரிடமிருந்து வேறுபட்டிருந்தார்கள்.

என்னுடைய முதல் 'பாட்ச்'சில் ஹாசன் என்றொரு மாணவன் இருந்தான். உயரமாக, பார்க்க அழகாக இருப்பான். நல்ல ஞாபக சக்தி அவனுக்கு. பணக்காரக் குடும்பத்தின் ஒரே பிள்ளை.

ஆரம்பத்தில் அவன் என் வகுப்பில் இருந்ததே எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், வகுப்பில் அவனை அதிகம் பார்த்ததில்லை. தேர்வுகள் ஏதேனும் இருந்தால் மட்டுமே திடீர் என்று ஆஜராவான். அட்டென்டென்ஸ் குறைவானவர்களின் சந்திப்பின்போது அவனை நான் பார்ப்பதுண்டு. அட்டென்டென்ஸுக்காகக் கெஞ்சுகிற விதத்தைப் பார்த்தால், மறுக்கவே முடியாது.

"ஸாரி மேடம். இப்போது மன்னித்து விடுங்கள். அடுத்த வகுப்பிலிருந்து தவறாமல் வந்து விடுகிறேன். தவறு செய்வது மனித சுபாவமில்லையா? மன்னிப்பது தெய்வீக குணமல்லவா? நீங்கள்தானே சொல்லிக் கொடுத்திருக்கிறீர்கள்?"

வெகு நேரம் என்னால் கோபமாகவே இருக்க முடியாது. அட்டென்டென்ஸ் குறைந்தால் ஆசிரியர்கள் மாணவர்கள் மீது கோபப்படுவதுண்டு. ஆனால் கடைசித் தேர்வின்போது அவர்கள் படிப்பையே அது பாதித்து விடும் என்பதை அறிந்து, மெல்ல மனம் உருகிப் போய் விடுவதுமுண்டு.

ஒவ்வொரு செமஸ்டரின் போதும் ஹாசனுடன் இந்த 'மன்னிப்பு' நாடகம் தொடரும். ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு காரணம் சொல்லுவான். அவை நம்பும்படியாக இருக்கும்!



சிறந்த மாணவனாக இருந்ததால், எப்போதும் முதல் வகுப்பில் தேறி விடுவான். ஒரு தடவை பொறுமை இழந்து, அவன் பெற்றோரை அழைத்தேன்.

"உங்கள் பையன் சிறந்த மாணவன். கீழ்ப்படியாதவன் அல்ல, ஆனால் ஒழுங்குமுறை கடைப்பிடிக்காதவன். அவன் மட்டும் வகுப்புக்குத் தவறாமல் வந்து விட்டால், முதல் இடத்தைப் பிடித்து விடுவான். நான் எவ்வளவு சொல்லியும் அவன் கேட்பதாய்




இல்லை. நீங்கள் இந்த விஷயத்தில் தீவிரமாக ஏதாவது செய்தால் மகிழ்ச்சியடைவேன்!"

ஹாசனின் தந்தை என் பேச்சைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. "அவன் படிப்பில் ஓரளவு நன்றாகச் செய்தால் போதும் எனக்கு. ஒரு குறிப்பிட்ட வயதுக்கு அப்புறம், குழந்தைகள் நாம் சொல்லுவதைக் கேட்பதில்லை. வாழ்க்கையில் சில பாடங்களைத் தாங்களாகவே கற்கிறார்கள்" என்றார்.

ஆனால் அவன் அம்மாவுக்கு அழுகை வந்துவிட்டது.

"மேடம், ஒரு தாய் என்ற நிலையில் தோற்றுப் போய்விட்டேன். நான் சொல்லுவதை அவன் கேட்பதே இல்லை. இரவு பூரா பாட்டைக் கேட்பதிலும், நண்பர்களுடன் அரட்டை அடிப்பதிலுமே அவன் நேரம் போகிறது!" என்றாள்.

கடைசியில் அந்தச் சந்திப்பு, பெற்றோருக்கிடையே வாக்குவாதமாக மாறியது. "நீதான் அவன் அம்மா. அவனைச் சரிப்படுத்த வேண்டியது உன் கடமை. நீதான் அவனுடன் அதிக நேரம் செலவழிக்கிறாய். நான் பிஸி... நீ அவன் விஷயத்தில் தோற்றுப் போய்விட்டாய்!" என்றார் அவன் தந்தை.

"நீங்கள் அவன் அப்பா. பையன்களைக் கட்டுப்படுத்துவது சிரமம். அப்பாவும் பிள்ளையுமாக, நீங்கள்தான் பேசிக் கொள்ள வேண்டும். பணம் சம்பாதிப்பது மட்டுமே வாழ்க்கையில் முக்கியம் அல்ல!" என்றாள் அவன் அம்மா.

வாக்குவாதம் கொஞ்ச நேரம் தொடர்ந்தது. பிறகு முடிந்தது. கடைசி வரை ஹாசன் அப்படியே இருந்து, தேர்வில் முதல் வகுப்பில் தேறினான். நல்ல பிள்ளை. என்னிடம் வந்து நன்றி தெரிவித்தான்.

அதற்குப் பிறகு, ஹாசனை நான் பல வருடங்களுக்குப் பார்க்கவில்லை. நானும் அவனை மறந்துவிட்டேன். நான் பல மாணவர்களுக்கு வகுப்புகள் நடத்தியிருக்கிறேன். சிலர் நல்ல மனிதர்களானார்கள்; சிலர் புகழ் பெற்றார்கள்; சிலர் பணக்காரரானார்கள்; சிலர் சாதாரணமானவர்களாகவே இருந்தார்

கள். என்னைப் பொறுத்தவரை, அவர்கள் எல்லோருமே என் குழந்தைகள். இன்னும்கூட என்னை நினைவில் வைத்திருந்து, திருமண அழைப்பிதழோ, பெயரிடும் வைபவ அழைப்பிதழோ, புதுமனை புகுவிழா அழைப்பிதழோ அனுப்பி வருகிறார்கள். ஊரில் இருந்தால், நிச்சயம் கலந்து கொள்ளுவேன். ஏனென்றால், பழைய நினைவுகள், பழைய நட்பு, பழைய மாணவர்கள் என்றால் எனக்குப் பிரியம் அதிகம். அவர்களுடைய அன்புதான் எனக்குப் பலம்.

ஒரு திங்கள் கிழமை காலை என் செயலர் என்னிடம் வந்து, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குக் கற்பிக்க உதவும் மென்பொருள் ஒன்றை விற்பதற்காக, ஓர் இளைஞன் என்னைச் சந்திக்க விரும்புவதாகத் தெரிவித்தாள்.

''சரி, பிற்பகல் இரண்டு மணிக்கு வரட்டும்'' என்றேன்.

மூப்பத்தைந்து வயது மதிக்கக் கூடிய புஷ்டியான இளைஞன், சற்றே வழுக்கையான தலையுடன் அலுவலகத்தில் காத்திருந்தான். மென்பொருளையும் கொண்டு வந்திருந்தான். அவன் முகம் பரிச்சமாய் இருந்தாலும், யாராக இருக்கும் என்று ஊகிக்க முடியவில்லை. புன்னகையுடன் என்னைப் பார்த்து, "மேடம், என்னைத் தெரிகிறதா? உங்களுக்கு எத்தனையோ மாணவர்கள். எனவே உங்களுக்கு நினைவிருக்க வாய்ப்பில்லை. ஒரு ஜன்னல் வழியே நீங்கள் வெளி உலகத்தைப் பார்த்துவிட முடியும். ஆனால் வெளியே இருந்து கொண்டு, உள்ளே இருப்பதைப் பார்த்துவிட முடியாதுதான்!'' என்றான்.

அவனுடைய உவமானம் எனக்குப் பிடித்திருந்தது. ஏனென்றால், இதையே நான் அடிக்கடி என் வகுப்பில் சொல்லுவதுண்டு. என் மாணவன்தான். ஆனால் அப்போதும் அவன் யார் என்று ஊகிக்க முடியவில்லை.

"மேடம், நான்தான் உங்கள் வகுப்பில் லேட் ஹாசன்!"

மனசுக்குள் ஒரு மணி அடித்தது. "ஓ, ஹாசனா! எப்படி இருக்கிறாய்? உன்னைப் பார்த்து வெகு காலமாகிவிட்டது!'' என்றேன். அவனைச் சந்தித்ததில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி.

"நான் நலமாக இருக்கிறேன், மேடம். உங்கள் பாடங்கள் பல எனக்கு நினைவு இருக்கின்றன."

''எது நினைவு இருக்கிறது - டேட்டா பேஸா, வி-யா, பாஸ்கலா?''

"அந்த மென்பொருள் எதுவும் அல்ல, மேடம். உங்கள் நல்லொழுக்கப் பாடங்கள்''

'நல்லொழுக்கப் பாடங்களா! கம்ப்யூடர் மென்பொருள் வகுப்புகளில் அவ்வப்போது சில குட்டிக்கதைகள் சொன்னதைத் தவிர, வேறு என்ன நல்லொழுக்க போதனை செய்தேன்...?'

"என்ன செய்கிறாய் ஹாசன் இப்போது?''

அவன் முகம் சற்றே வெளிறியது.

"மேடம், கணிதம், பௌதிகம், ரசாயனம் கற்பிப்பதற்கு ஏற்ற மென்பொருளை விற்பனை செய்து வருகிறேன். இது ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் மிகுந்த பயன்தரக் கூடியது. உங்கள் அறக்கட்டளை, உயர்நிலைப் பள்ளிக் கல்வி அளவில் மிகுந்த உதவி செய்து வருகிறது என்று கேள்விப்பட்டேன்."


"ஹாசன், இத்தனை வருடங்களாக என்ன செய்து கொண்டிருந்தாய்?''

அவனுடன் படித்தவர்கள் எல்லோரும் மென்பொருள் துறையில் மிகப் பெரிய, பொறுப்பான பதவிகளில் இருப்

''அந்தப் பேய் தலைகால் புரியாம ஆடுதே.. ஏன்?"

''அது இங்கே வந்து பத்து வருஷமாச்சு... ஆனா புது வாக்காளர் பட்டியல்லே அதோட பேரையும் சேர்த்துருக்காங்களாம்!"

- தஞ்சை தாமு





"நமது வேட்பாளர் மாருதிதாசன் எல்லாக் கட்சிகளுக்கும் சென்று, இப்போது தாய்க்கட்சிக்கு வந்துள்ளார். அவரை ஜெயிக்க வைத்தால் சுற்றுலாத் துறை அமைச்சர் ஆகி சேவை செய்வார் என உறுதியளிக்கிறேன்..."

– தஞ்சை தாமு

பது எனக்குத் தெரியும். புத்திசாலி மாணவனான ஹாசன், நிச்சயம் நல்ல நிலைமையில் இருப்பான் என்று எண்ணினேன். அதற்கு மாறாக, உயர்நிலைப் பள்ளிக்கான மென்பொருளை அல்லவா வீடு வீடாக விற்றுக் கொண்டிருக்கிறான்!

"மேடம், நான் கல்லூரியில் ஒழுங்காகவே வகுப்புகளுக்கு வரவில்லை என்று உங்களுக்கே தெரியும். பட்டம் வாங்கிய பிறகும், என் பழக்கம் தொடர்ந்தது. நேரம் கழித்து எழுந்திருப்பேன். சோம்பேறியாக இருந்தேன். என் அம்மாவுக்குக் கோபம் கோபமாக வரும். மன அமைதியே போய்விடும். நான் கவலைப்படவில்லை. அலட்சியமாக இருந்தேன். பெற்றோரின் நிர்பந்தம் காரணமாக ஒரு வேலையில் சேர்ந்தேன். அலுவலகத்துக்குத் தாமதமாகப் போனேன். குறிப்பிட்ட நேரத்துக்கு வாடிக்கையாளர்களைச் சந்திக்கவில்லை. பொறுப்பே இல்லாமல் இருந்தேன். எதையும் முழுதாக அறிந்திருக்கவில்லை. கல்லூரியில் நான் தீவிரமாகப் படிக்கவில்லை. முதல் வகுப்பில் தேறுவது ஒன்றும் அறிவாளி என்பதற்கு அடையாளம் அல்லவே! தேர்வுக்கு முன்னால் எப்படியோ படிப்பேன். வரக்கூடிய கேள்விகள் என்ன என்று ஒருவாறு ஊகித்து, மீதியை விட்டுவிடுவேன். அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று எப்போதும் நினைத்துக் கொண்டிருந்தேன். ஒன்றும் தெரியாமல், வேலை செய்வது கடினம். கடுமையாக உழைப்பவர்களைப் பார்த்துச் சிரித்துக் கொள்வேன். அவர்களைக் கிண்டலடிப்பேன். அவர்களைப் பரபரப்புப் பேர்வழிகள் என்று கேலி செய்வேன். இன்று அவர்கள் கோடீசுவரர்கள். என்னுடைய சுபாவம் காரணமாக, எந்த முதலாளிக்கும் என்னைப் பிடிக்கவில்லை. ஒரு வேலையிலிருந்து இன்னொரு வேலைக்கு மாறிக்கொண்டே இருந்தேன். என் தோல்வி காரணமாக, எல்லோரிடமும் - அலுவலகத்திலும் வீட்டிலும் - எரிந்து விழுந்தேன். கடைசியில் என் தகப்பனாருக்கே வெறுத்துப் போய், நீ தனியாகப் போய் விடு" என்றார். எனக்கு எப்போதுமே நிறையச் சுதந்திரம் இருந்தது. ஆனால் நான் எந்த நல்ல பழக்கத்தையும் மேற்கொள்ளவில்லை. என்னுடைய இந்த நிலைமைக்கு, என் பழக்க தோஷமே காரணம்."

எனக்கு ஹாசனைப் பார்க்க வருத்தமாக இருந்தது. புத்திசாலியாக இருந்து வாழ்க்கையில் முன்னேறவில்லையே!

"ஹாசன், உன் குறைகள் உனக்குத் தெரிந்திருந்தன. அவற்றைத் தவிர்த்து நீ நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்கலாம். இப்போதும் ஒன்றும் குறைந்துவிடவில்லை. நல்லதைத் துவங்கலாம், எந்தச் சமயத்திலும். ஏமாற்றம் கொள்ளாதே. நீ போரில் தோற்றிருக்கலாம். முயன்றால் வெற்றி பெற முடியும்."

"மேடம், பழைய பழக்கங்கள் அவ்வளவு சீக்கிரம் விட்டுப் போகாது."

"இல்லை ஹாசன். நீ நினைத்தால் உன் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ள முடியும். உலகமே உன்னுடைய உள்ளங்கையில்தான் இருக்கிறது. முடியாதது எதுவுமில்லை. மன உறுதிதான் வேண்டும். உன்னுடைய திறனை நீ அறியவில்லை. பெரியவர்கள் ஏதேனும் சொன்னால், அது உன் நலனுக்காகத்தான் என்பதைப் புரிந்து கொள். நல்லதைப் பழக்கத்தில் கொண்டு வந்தால் போதும்."

ஹாசனின் கண்கள் மலர்ந்தன!

(தொடரும்)

# அழகிய தீயே...

பல வருடங்கள் கழித்து ஆதியை, நேற்று பார்க்க நேரிட்டது. ஒரு வகையில் எதிர்பாராத சந்திப்பு! பார்த்த கணத்தில் அருணாவுக்கு காலடியில் பூமி நழுவியது. முகத்தில் இலேசாய் கலவரம். தியாகராயா ரோட்டில் எச்.எஸ்.பி.ஸி., ஏடிஎம்-ல் பணம் எடுக்க நின்றிருந்தபோது "ஹாய்" என்று, திடீரென்று எதிரே வந்து நிற்கிறான். இத்தனைக் காலம் எங்கிருந்தான் இவன்?

ஆரம்பத் தயக்கங்கள் தாண்டி, இருவரும் இயல்புக்கு வருவதற்கே சில கணங்கள் ஆயின. இருவருக்கும் சட் சட்டென்று பழைய நினைவுகள் முகத்தில் வெளிச்சமிட்டதை உணர்ந்தார்கள். அப்புறம் பரஸ்பர விசாரிப்புகள் நடந்தன. அவன் சென்னையில்தான் ஒரு தனியார் ஸாஃப்ட்வேர் கம்பெனியில், ஸீனியர் மானேஜராக இருக்கிறானாம். அவனை காலேஜில் பார்த்ததற்கும், இப்போது பார்ப்பதற்கும் நிறைய வித்தியாசங்கள் தெரிந்தன.

மேலும் சம்பிரதாயமாய் ஒரு சில வார்த்தைகளுடன் அந்தச் சிறு சந்திப்பு முடிந்தது. வீட்டுக்குத் திரும்பி வரும் போது, அருணாவுக்கு ஒரே யோசனையாயிருந்தது. ஆதி இப்படி திடீரென்று எதிர்ப்படுவான் என்று எதிர்பார்க்கவில்லை. பழைய விஷயங்களை மறுபடி கிளறுவானோ என்று, ஒரு சின்ன பயமும் தோன்றியிருந்தது இப்போது.



ஆதி என்கிற ஆதிராஜன். காலேஜில் அவனும் அருணாவும் ஒரே வகுப்பு. தானே வலியவந்து யாரிடமும் அறிமுகப்படுத்திக் கொள்ளும் சுபாவம் அவனுக்கு. ஒரு நாள் அருணாவை ஊடுருவிப் பார்த்து "சமீப நாட்களாய் நீ என்னை பாதிக்கிறாய்" என்றான். விளையாட்டு மாதிரிதான் சொன்னான். அதன் அர்த்தம் தெரிந்து கொள்ள, அவள் அப்போது பெரிதாய் ஆர்வம் காட்டவில்லை.

சில நாட்களிலேயே அவன் சொன்னதன் தீவிரம் புரிந்தபோது, அவள் அவனிடமிருந்து விலகினாள். ஆனால் ஒரே வகுப்பு என்பதால், பார்ப்பதும் பேசுவதும் தவிர்க்க முடியாததாய் இருந்தன.

சித்ரன்

கடைசி நாள். எல்லோரும் பிரியப் போகிற தருணம். ஆதிக்கு அது கடைசிச் சந்தர்ப்பம். நேராக அவளிடம் வந்தான். நூற்றி இருபதாவது தடவையாக அருணாவிடம் "யோசிச்சு சொல்லு. அழகிய தீ நீ. உன் பதிலுக்காக மூணு ஜென்மமா காத்திருக்கேன். உன்னை ரொம்பத் தொந்தரவு செய்யறேன்னு நினைக்காத. சாதகமான பதில் சொன்னா, சந்தோஷம். இல்லைன்னா, என்கூட கடைசி கடைசியா, அபிநயா கஃபே-ல வந்து, ஒரு கப் காபி சாப்பிடு போதும். ப்ரண்ட்லியா பிரிவோம்" என்றான். சிறிதும் நம்பிக்கை இழக்காத கடைசி முயற்சி. அன்று மாலை இருவரும் அபிநயா கஃபேயில் காபி சாப்பிட்டார்கள். அதற்குப் பிறகு அவள் கண்ணில் அவன் தென்படவேயில்லை.



ஸ்பென்ஸரில் இன்று மறுபடி அந்தச் ...ன்ன கஃபேயில், ஹிந்துஸ்தானி இசைக்கு ...டுவே இருவரும் உட்கார்ந்திருந்தார்கள்.

ஆதி சிறிது நேரம் ஸீரியஸாய் இருந்து ...விட்டு "நீ ஏன் இன்னும் கல்யாணம் செய் ...துக்கலை?" என்று கேட்டான். அருணா அவனைக் கேள்வியாய்ப் பார்த்தாள்.

"அப்பா நிறைய ஜாதகம் பார்த்தார். ப்ச்! ...துவும் அமையல" என்றாள். 'நீ ஏன் பண்ணிக்கலை?"

"அருணா, உனக்கு ஆச்சரியமான விஷயம் சொல்லட்டா? நான் இன்னும் உன்னைத்தான் நெனச்சிட்டிருக்கேன்" என்றான் மெதுவாய்.

சிலீரென்றது. முதன் முதலாய் மனசில்... 'ச்சே! என்னது இது!' அவள் அமைதியாயிருக்க முயற்சி செய்தாள். அவன் என்ன சொல்ல நினைக்கிறான் என்று தெரிந்து கொள்வதில், அவளுக்கு விருப்பமாயிருந்தது. முகத்தில் எந்த உணர்வையும் காட்டாமல் இருக்க முயற்சி செய்தாள்.

தொண்டையைச் செருமிவிட்டுச் சொன்னான். "காலேஜ்ல பிரியும்போது சாப்பிட்ட காஃபியோட என் காதல் விஷயம் சூடு ஆறிப் போயிடுச்சுன்னு நீ நினைச்சிருக்கலாம். ஆனா, என்னால உன்னை மறக்க முடியல. ரொம்ப அவஸ்தையாயிருச்சு. நீ சென்னைலதான் இருக்கேன்னு தெரியும். ஆனா உன்னை மறுபடி தொந்தரவு பண்ண வேணான்னு விட்டுட்டேன். ஆனாலும் மனசோரத்துல நீ ஒட்டிக்கிட்டுதான் இருந்தே. இப்ப கூட அப்படித்தான். இப்ப ஒரு நல்ல வேலையும் சொந்தமாய் வீடும் இருக்கு. நான் வீட்ல ஒரே பையன். ஆசைப்பட்டதை நிறைவேத்தற அம்மா, அப்பா. உன்னைப்பத்தி நிறையச் சொல்லியிருக்கேன். நீ கிடைச்சா அதைவிட சந்தோஷம் எனக்கு கிடையாது." சொல்லிவிட்டு ஆதி அவளை நேராகப் பார்த்தான்.

"ஓ மை காட்!" என்றாள் அருணா. அவளுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. தொடர்ந்து மேலும் சில சிலீர்களும் ஓடிக் கொண்டிருந்தன மனதுக்குள். அவன் ஊடுருவும் பார்வை என்னவோ செய்தது.

அவள் எதுவும் பேசாமல் உட்கார்ந்திருந்தாள். குழப்ப யோசனைகள் ஓடின. 'ரொம்ப லேட்டாக அவன் மேல் ஈர்ப்பை உணர்கிறேனோ? கடவுளே... எனக்கு என்ன ஆயிற்று? அன்றைக்கு மாதிரியே உன்மேல் எனக்கு எதுவும் இல்லை என்று பட்டென்று சொல்லிவிட முதன் முதலாய் ஏன் ஒரு தயக்கம் எழுகிறது?'

அவன் மேலும் சொன்னான், 'நிதானமா யோசிச்சுச் சொன்னாப் போதும். பாஸிட்டிவ்வான பதில்னா செல்போன்ல கூப்பிடு. வீட்டுக்கு வந்து பெண் கேட்கிறேன்.

நெகட்டிவ்வான பதில்னா, இதே இடம், என்னோட ஒரு கப் காஃபி ஓ.கே.?"

எதுவும் சொல்லாமல் ஒரு சிரிப்புடன் விடைபெற்றாள். வீட்டுக்குத் திரும்புகிற போது ஒரே யோசனைக்குவியல். 'திடீரென்று வந்து எல்லாவற்றையும் கலைத்துப் போட்டுவிட்டுப் போய்விட்டான். அவனுக்கு அங்கேயே ஏன் பதில் சொல்ல முடியவில்லை? இந்தத் தடவை வித்தியாசமாய் ஏதேனும் பதில் சொல்ல விரும்புகிறேனா? என்ன இது குழப்பம்! புன்னகையுடன் கூடிய அவன் மலர்ந்த முகம், மீண்டும் மீண்டும் நினைவில் வந்தது. அவன் ஒரு நல்ல டைப்தான். பின்னாலேயே நாய் மாதிரி சுற்றினான் என்பதை வைத்து, அவனை மோசம் என்று சொல்லிவிட முடியாது. என்ன ஒரு நம்பிக்கை அவனுக்கு! குரலில் ஒரு சின்ன கம்பீரம். அவனை கடைசியில் ஜெயிக்கவிடலாமா? இரு! முதலில் என்னை நானே கேட்டுக் கொள்ள நிறைய கேள்விகள் இருக்கின்றன. முதல் கேள்வி, இத்தனை வருடம் கழித்து எனக்கு அவன்மேல் ஈர்ப்பு ஏதேனும் ஏற்பட்டுள்ளதா என்பது. சில தயக்க யோசனைகளுக்குப் பின், ஆமாம் என்று மனது தீர்மானம் நிறைவேற்றியது. அவளையறியாமல் உதட்டோரம் ஒரு புன்னகை அரும்பி மறைந்தது. காதலின் பயாலஜி விதிகள் என்னென்ன? அவனை இலேசாய் பிடிக்க ஆரம்பித்திருக்கிறது. அல்லது பிடித்துவிட்டது!' அன்றிரவு பொட்டுத் தூக்கம்கூட வரவில்லை. நடுநிசியில் அவன் விஸிட்டிங் கார்டை எடுத்துப்பார்த்தாள்.

"நான் இன்னும் உன்னைத்தான் நெனச்சிட்டிருக்கேன்" என்று அவன் சொன்னது, திரும்பத்திரும்ப ரீவைண்ட் ஆகிக் கொண்டிருந்தது. எங்கேயோ முன்னமே போடப்பட்ட பூர்வ ஜென்ம முடிச்சா இது...? நினைக்க நினைக்க ஆச்சரியமாய் மனதில் விரிகிற கனவுச்சாரல்!

ஆனால் அதைக் கொஞ்ச நேரம்கூட நீடிக்க விடாமல், திடீரென்று வேறொரு எண்ணம் வந்து குறுக்கிட்டு நின்றது. 'இன்றைய தேதிக்கு எனக்கு மாப்பிள்ளை தேடி, பாவம் அப்பாவும், அம்மாவும் களைத்து ஓய்ந்து போய்விட்டார்கள். இப்படி எனக்கு இன்னும் வரன் கூடாமல் தள்ளித் தள்ளிப் போனது, எல்லாருக்குமே கூட வருத்தம்தான். இந்த நிலைமையில் திடீரென்று ஆதியின் வருகை. அவன் பைத்தியமாய் அவள் பின்னால் சுற்றியபோதெல்லாம் பாராமுகமாய் இருந்துவிட்டு, இப்போது போய் அவனிடம் உன்னைப் பிடித்திருக்கிறதென்று நான் சொன்னால், அது வேறு வழியில்லாமல் ஒரு கல்யாணத் தேவைக்கு என்று ஆகிவிடாதா? அவன் மேல் நிஜமாகவே ஒரு பிடிப்பு வந்துவிட்டது என்றே இருந்தால்கூட, இத்தனை காலம் கழித்து இப்போது போய் உன்னை ஏற்றுக் கொள்கிறேன் என்று சொல்வது சுயநலமில்லையா?'

சட்டென்று அவளின் முந்தைய எண்ணங்களின் மீது, ரிவர்ஸ் கியர் விழுந்தது போல் இருந்தது. ரொம்பத் திகைப்பாய் இருந்தது. இப்படியொரு கோணத்தில்கூட இதை யோசித்துப் பார்த்தே ஆக வேண்டும். அருணாவுக்குப் பிரமை பிடித்தது மாதிரி இருந்தது.

**ம**றுநாள் குளித்துவிட்டு ஸ்டிக்கர் பொட்டை நிலைக் கண்ணாடியில் சரிபார்க்கும்போது, தலையில் மறுபடி அந்த நரை முடியைப் பார்த்தாள். முப்பதைத் நெருங்கின வயது. இலேசான பெருமூச்சு வந்துபோனது.

நிறைய யோசனைகளுடன் ஆபிஸுக்கு கிளம்பிப்போனாள். வேலையில் கவனம் ஓடவில்லை. ஆதி சொன்னது மண்டையைக் குடைந்தது. மதிய இடைவெளியில் ஹேண்ட் பேகிலிருந்து ஆதியின் விஸிட்டிங்கார்டைத் தேடி எடுத்தாள். ரிஸப்ஷனைக் கூப்பிட்டு அவன் செல்போன் நம்பருக்கு லைன் வாங்கினாள்.

"சாயங்காலம் பார்ப்போமா ஆதி ஜஸ்ட் ஒரு காஃபி. ஓகே?"

"நீ வேலை செய்யற வீடு ரொம்பப் பெரிய பணக்கார வீடாமே?"

"ஆமா! வடகம்கூட பட்டுச் சேலையில்தான் காயப் போடுவாங்க!"

- உ. ராஜாஜி





ஹலோ! 'நாமும் மற்றவரைப் போல கார் மற்றும் டூ-வீலர் ஓட்ட வேண்டும், எங்கு கற்பது? யாரிடம் கேட்பது? காஸ்ட்லியாக இருக்குமோ?' என்ற எண்ணம் நம்மிடையே பலருக்கு இருப்பது உண்மைதானே? ஏன் இந்த கூச்சம், தயக்கம்? உங்களுக்காகவே, ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியாக கார் மற்றும் ஸ்கூட்டி, கைனடிக் ஹோண்டா ஆகியவற்றில் டிரைவிங் கற்றுக் கொள்ள மேலும் தாமதிக் காமல் உடனே எங்களை அணுகவும். கோடை விடுமுறை யில் ஒரு பயனுள்ள பயிற்சி உங்களுக்காகவே!

## ஹலோ! ஒரு நிமிடம்! நீங்களும் டிரைவிங் கற்கலாமே!



டீன்ஏஜ் முதல் 50 வயது வரை. **சாண்ட்ரோ, மாருதி,** ஸ்கூட்டி, கைனடிக் ஹோண்டா இவைகள் பெண்களுக்கு மட்டுமல்ல. ஆண்களுக்கும் மிக எளிதாக விரைவில் பயிற்றுவிக்கப்படு கிறது.

இதோ வள்ளி டிரைவிங் ஸ்கூல் உரிமையாளர் திருமதி வள்ளி அவர்களுடன் ஒரு சிறு உரையாடல்:

**நீங்கள் விரைவாக எளிதாகப் பாதுகாப்பாக வாகனங்களை இயக்க கற்றுக் கொடுப்பது எப்படி?**

''முதல் நாள் அவர்களுக்கு மனப்பயிற்சி கொடுப்போம். அதன் மூலம் தன்னம்பிக்கை, உடல் வலு, புரிந்து கொள்ளும் தன்மை அதிகப்படும். பிறகு அவர்கள் இயக்க விரும்பும் வாகனம் பற்றி விளக்குகிறோம். அடுத்ததுதான் அவர்களுக்கு வாகனம் இயக்கக் கற்றுத் தருகிறோம். அவர்களின் மனதைப் பக்குவப்படுத்தி விடுவதால் எளிதாகப் புரிந்து சில நாட்களிலேயே கற்றுக் கொள்கிறார்கள்" என்கிறார்கள் திருமதி. வள்ளியும் அவரது கணவர் திரு. வள்ளியப்பனும்.

கணவன் – மனைவி இருவரும் ஸ்கூட்டர் ஓட்டக் கற்றுக் கொள்ள வேண்டுமா? கார் ஓட்டக் கற்றுக் கொள்ள வேண்டுமா? நீங்கள் உடனே தயங்காமல் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

# வள்ளி டிரைவிங் ஸ்கூல்

(அரசு அங்கீகாரம் பெற்றது)



புது எண். 13 (ப.எண்.7) தண்டபாணி தெரு,
தி. நகர், சென்னை - 17.
(பனகல் பார்க் அருகில்,வெங்கட்நாராயணா ரோடு எதிரில்; வேளாங்கன்னி பள்ளி அருகில்)

Ph. Off : 24364815, 52126780 Res : 24842466
செல் : 9840043648, 31023273

அலுவலக நேரம் :
காலை 6.00 மணி முதல் மாலை 8.00 மணி

குறிப்பு : பெண்களுக்குக் கற்றுத்தர பெண் பயிற்சியாளர்கள் உண்டு.

**ஜெ**மினி அதிபர் வாசன் ஒரு மாமனிதர். இது அவருக்கு நூற்றாண்டு. அகில இந்திய அளவில் சினிமாத் துறையில் கொடி கட்டிப் பறந்த ஜெமினி எடுத்த படங்களில், நானும் நடித்திருக்கிறேன் என்பதை நினைத்துப் பார்க்கிறபோது, எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. ஔவையார், சந்திரலேகா என்று அத்தனை பிரம்மாண்டமாக படம் எடுக்க 'ஜெமினி' வாசனால் மட்டுமே முடியும்.

ஒரு நாள் என் வீட்டுத் தொலைபேசி அழைத்தது. மறுமுனையில் பேசியவர், "நான் ஜெமினி எஸ். எஸ்.வாசன் பேசறேன். ஆர்ட்டிஸ்ட் நாகேஷ் இருக்காரா?" என்றார். நான் சட்டென்று எழுந்து நின்றுவிட்டேன். 'எவ்வளவு பெரிய மனுஷர்! தாமே பேசகிறாரே!' என்று எனக்குள் ஒருவிதப் படபடப்பு. "நான் உங்களைச் சந்திக்கணுமே?' என்றார்.

"நானே வந்து உங்களைப் பார்க்கிறேன் சார்! எப்போ வரட்டும்?"

நேரம் சொன்னார். குறித்த நேரத்தில் நான் ஜெமினிக்குப் போனேன். அவரது அறைக்குள் நுழைந்தபோது, எழுந்து நின்று வரவேற்றார். நேரே விஷயத்துக்கு வந்தார்.

"நான் 'மோட்டார் சுந்தரம் பிள்ளை'ன்னு ஒரு படம் எடுக்கிறேன். அதில் நடிக்க முடியுமா?"

"ஓ! தாராளமாக."

"உங்களுக்கு எவ்வளவு சம்பளம் தரணும்?"

நான் சில விநாடிகள் யோசித்தேன். 'நாம் வழக்கமாக வாங்கும் சம்பளத்தைச் சொல்லி, இவர் பேரம்பேசி, அதைக் குறைத்து விட்டால்?' என்ற எண்ணம் எழுந்தது.

நான் அப்போது வாங்கிக் கொண்டிருந்த சம்பளத்தைவிட அதிகமான தொகை ஒன்றைக் குறிப்பிட்டேன்.

ஆனால், தான் ஒரு ஜென்டில்மேன் என நிரூபித்தார் வாசன்.




**அ**வர் பேரம் பேசவே இல்லை. நான் கேட்ட சம்பளத்தை, அப்படியே தர சம்மதித்தார்.

'அட! இவ்வளவு நல்ல மனிதரைப் பற்றி, தப்பா நினைத்துவிட்டோமே!' என்ற குற்ற உணர்வு ஏற்பட,

# "காமெடிக்



• வாசன்



• கொத்தமங்கலம் சுப்பு

வழக்கமாக நான் வாங்குகிற சம்பளத்தைச் சொல்லி, "இவ்வளவுதான் வாங்கறேன். அதை மட்டும் கொடுத்தால் போதும்!" என்றேன்.

"பரவாயில்லை! நீங்கள் கேட்டீர்கள். நானும் கொடுக்கச் சம்மதித்துவிட்டேன். அதற்குப் பின் அதைக் குறைப்பது சரியில்லை. அதுவுமில்லாம, நான் யாருக்குத் தரப்போறேன், நம்ம நாகேஷுக்குத்தானே! செகரட்டரி நம்பியாரைப் பாருங்கள். அட்வான்ஸ் கொடுப்பார்" என்றார் அவர்.

நான் ஆச்சரியத்தில் வாயடைத்துப் போனேன்.

'மோட்டார் சுந்தரம் பிள்ளை' படத்தில், துப்பறியும் சாம்பு மாதிரி ஒரு கேரக்டர். ஒரு காட்சியில் நகைகள் காணாமல் போய் விடும். காணாமல் போன நகைகள் பூசணிக் காய்க்குள் இருப்பதை இறுதியில் நான் கண்டு பிடிப்பேன். இந்தக் காட்சியை எடுத்த பிறகு, ஒரு நாள் வாசனிடம், "ஏன் சார், எனக்கு ஒரு சந்தேகம். பூசணிக்குள்ளே இருக்கிற நகைகளை

# நாகேஷ்

* தருமி

கண்டுபிடிப்பது எல்லாம் சரிதான். ஆனால் பூசணிக் காய்க்குள்ளே நகைகள் எப்படிபோனது என்பது மட்டும் புரியவில்லையே!'' என்றேன். சிரித்தபடியே வாசன் சொன்ன பதில்: "காமெடிக்கு லாஜிக் பார்க்கக் கூடாது!"

ஜெமினி நிறுவனம் பற்றிச் சொல்லும் போது, எனக்கு மறக்க முடியாத இன்னொரு நபர் கொத்தமங்கலம் சுப்பு. அற்புதமான எழுத்தாளர் மட்டுமில்லை, அருமையான நடிகரும்கூட. இதற்கெல்லாம் மேலே அவர் நல்ல ரசிகர்.

பொதுவாக, ஒரு படைப்பாளி சிருஷ்டிக்கிற ஒரு பாத்திரத்தை, நடிகர் ஏற்று நடிக்கிறபோது, எழுத்தின் வடிவத்தை



## ...ாஜிக் கிடையாது!''

அப்படியே திரையில் கொண்டு வந்துவிட்டார்கள் என்கிற திருப்தி, அந்தப் படைப்பாளிக்கு ஏற்படாது. ஆனால், அப்படி ஒரு திருப்தி கொத்தமங்கலம் சுப்புக்குக் கிடைத்தது. அந்தத் திருப்தியை ஏற்படுத்தும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அது 'தில்லானா மோகனாம்பாள்' படத்தில் எனக்குக் கிடைத்த 'சவடால் வைத்தி' கதாபாத்திரம்!

ஒரு நாள், நுங்கம்பாக்கம் ஹைரோட்டில் நான் போய்க் கொண்டிருந்தபோது, உரத்த குரலில், "நாகேஷ்!" என்று சத்தம்! திரும்பிப் பார்த்தால், எதிர்ப் பிளாட்பாரத்தில் கொத்தமங்கலம் சுப்பு! நான் அன்போடு கைகுலுக்கினேன்.

''நாகேஷ்! என்னப்பா நீ இப்படிப் பண்ணிட்டே?'' என்று அவர் கேட்க, எனக்கு இலேசான அதிர்ச்சி! "தில்லானா மோகனாம்பாள் கதையில, (சவடால் வைத்தியாக) நீயும், சி.கே. சரஸ்வதியும் பண்ணின ரோல், நான் என்னையும், சுந்தரி பாயையும் மனசுல வெச்சிக்கிட்டு எழுதினது. ஆனால் சினிமாவுல எனக்கு பதிலா நீ நடிக்கப்போறதா கேள்விப் பட்டதுலே இருந்து, "என்ன அற்புதமான கேரக்டர்! திரையில எப்படி வரப் போகுதோ!'ன்னு நினைச்சேன்! நான் கற்பனை செய்தது என்னவோ, நான் எழுத்துல வடிச்சது என்னவோ, திரையில நானே நடிச்சிருந்தா எப்படி வரும்னு நினைச்சிக்கிட்டு இருந்தேனோ, எல்லாத்தையும் திருப்தி செய்யறாப்போல அசத்திட்டியேப்பா நீ! என்னை அப்படியே உன் நடிப்பால கட்டிப் போட்டுட்டியே!'' என்று பாராட்டி என்னை அப்படியே நடு ரோடு என்று கூடப் பார்க்காமல் கட்டிப்பிடித்து, முத்த மழை பொழிந்துவிட்டார்.

இன்றைக்கும்கூட, தில்லானா மோகனாம்பாள் படத்தின் 'சவடால் வைத்தி' கேரக்டரை மக்கள்

36

வயது வித்தியாசமில்லாமல் ரசிக்கிறார்கள் என்றால், அதற்கு அடிப்படையான காரணம், கொத்தமங்கலம் சுப்புவின் அற்புதமான பாத்திரப்படைப்புதான். அந்த சிருஷ்டிகர்த்தாவே என்னைப் பாராட்டினார் என்கிறபோது, அதைவிட ஒரு பெரிய விருது இருக்குமா என்ன?

ஏ.பி. நாகராஜன் ஒரு நாள் திடீரென்று கூப்பிட்டு, "உங்களுக்கு என் படத்துல ஒண்ணரை நாள் வேலை இருக்கு வரீங்களா?" என்று கேட்டார். ஏ.பி. என் என்கிற மனிதர் மீது எனக்கு எப்போதுமே அபார மதிப்பும், மரியாதையும் உண்டு என்பதால், அவர் கேட்கிறபோது மறுப்புச் சொல்ல முடியுமா? சம்மதம் தெரிவித்தேன். அந்தப் படம்தான் திருவிளையாடல்!

காலையில் வாசு ஸ்டுடியோவில் ஷூட்டிங்குக்குப் போய்விட்டேன். என் தருமி ரோலுக்கு ஏற்ப, நான் ரெடியானேன். சிவாஜிக்கு இன்னும் மேக்-அப் போட்டு முடியவில்லை என்றார்கள். அப்போது, நான் மிகவும் பிசியாக இருந்த கால கட்டம். எட்டு மணி நேரம் ஒரே கம்பெனிக்கு நான் கால்ஷீட் தரமாட்டேன். இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம் என்று பிரித்து, ஒன்றுக்கு மேற்பட்ட கம்பெனிகளுக்கு கொடுப்பேன்.

ஏ.பி.என் சொன்னாரே என்று வந்து மேக்அப் போட்டுக் கொண்டு, காத்துக் கொண்டிருந்த நேரத்தில், ஏ.பி.என்., "நான் சீனைப் படிக்கிறேன். கேளுங்க" என்று சொல்லிவிட்டு, தாம் எழுதி வைத்திருந்த காட்சி, வசனத்திலிருந்து, இரண்டு பக்கம் படித்துக் காட்டினார்.

நான் கவனமாய்க் கேட்டுக் கொண்டேன். முத்தாய்ப்பாய், "உன்னைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். நான் எழுதி இருக்கிறதைக் குறைக்க வேணாம். இதுக்கு மேல உன் இஷ்டப்படி, காட்சியை எப்படி வேணுமோ அப்படி இம்புரூவ் பண்ணிக்கோ, அதுக்கு உனக்கு லைசென்ஸ் உண்டு" என்றார்.

"காட்சியை எப்படி இம்புரூவ் பண்ணலாம்?" என்கிற சிந்தனை ஓட ஆரம்பித்தது.

"சிவாஜி வர லேட் ஆகுமா?" என்று கேட்டேன். "ஆமாம்" என்றார்கள்.

டைரக்டர் ஏ.பி. நாகராஜனிடம் "சிவாஜி வர லேட் ஆகும்போல இருக்கே. எனக்கு வேறு இங்கே முடிச்சுட்டு, அடுத்த ஷூட்டிங்குக்குப் போகணும். ஒண்ணு பண்ணறீங்களா? சிவாஜி வருகிற வரை, நேரத்தை வீணாக்காம, என்னை வெச்சு சோலோவா கொஞ்சம் எடுக்கலாமே!" என்றேன். அதற்குள், நான் என்ன செய்யப் போகிறேன் என்பதை மனசில் தீர்மானம் பண்ணிக் கொண்டு விட்டேன்.

நீங்கள் திரையில் பார்த்து ரசித்த தருமி கேரக்டரில், அப்படி நடிப்பதற்கு எனக்கு இன்ஸ்பிரேஷனாக இருந்தவர் மைலாப்பூர் கிருஷ்ணசாமி அய்யர் என்றால், உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும்.

மைலாப்பூர் கபாலீஸ்வரர் கோவில் தெப்பக்குளக் கரையில் நின்று கொண்டு, தெப்பக் குளத்து மைய மண்டபத்தை நோக்கி அவர் பேசியது, எனக்கு மறக்கவே மறக்காது.

"யூ நோ மிஸ்டர் கிருஷ்ணசாமி அய்யர்!" என்று அவர் அழைத்தது வேறு யாரையும் இல்லை, தன்னைத்தானே தான்.

"பத்து வருஷங்களுக்கு முன்னால், இந்தக் குளம் எப்படி இருந்தது? அறுபத்து மூவர் உற்சவம் என்றால், ஊரே ஜே, ஜே, என்று இருக்கும். தெப்பக்குளத்தில் தண்ணீர் நிரம்பி வழியும். தெப்பம் தண்ணீரில் மிதந்து போவதைப் பார்க்க, கண் கொள்ளாக் காட்சியாக இருக்குமே! ம். இன்றைக்கு குளத்தில் ஒரு சொட்டுத் தண்ணீர் கிடையாது! பசங்கள் குளத்திலே கிரிக்கெட் ஆடிக் கொண்டிருக்கிறார்கள்! ம்... அந்தப் பசுமையான பழைய நாட்கள் எல்லாம் இனிமே வருமா?... ஊகூம்... வராது... இனி வரவே வராது..." இங்கிலீஷும், தமிழுமாக, தமக்குத் தாமே பேசிக் கொண்டிருந்த வித்தியாசமான மனிதரை, நான் வியப்புடன் கவனித்தேன்.

(சிரிப்பு தொடரும்)

---

"ரிசர்வேஷன் கவுண்ட்டர்ல இருக்கிறவருக்கு மனசுல பெரிய கூட்டணித் தலைவர்னு நினைப்பு..."

"என்ன சொல்றார்?"

"நாலு சீட் கேட்டா, ரெண்டுதான் கிடைக்கும்னு சொல்றாரே!"

– பம்மல் நாகராஜன்



**பாஸு**



# போஸ்ட் பாக்ஸ்

ஆபீஸிலிருந்து மாலதி வீட்டுக்குப் புறப்பட்டபோதே நேரமாகிவிட்டது. அவள் ஏறிய பஸ் வேறு, வழியில் பிரேக் டவுன் ஆகி, வேறொரு பஸ்ஸைப் பிடித்து தாம்பரத்தை வந்தடைந்தாள். அங்கிருந்து அவளுடைய வீட்டுக்குச் செல்ல, பதினைந்து நிமிட நடை. செல்லும் வழியெல்லாம் இருட்டு.

யாரோ பின் தொடர்வது தெரிந்தது. இன்று சம்பள தினம் வேறு. அடடா, சம்பளத்தை பத்திரமாக வீட்டில் கொண்டு சேர்க்க வேண்டுமே! மாலதி வேகத்தை அதிகரித்தாள்.

பின் தொடரும் காலடியும் வேகத்தை அதிகரித்த ஓசை, மாலதியைக் கலக்கமுறச் செய்தது. அதோ தெரியும் போஸ்ட் பாக்ஸைக் கடந்து இடதுபுறம் திரும்பி, ஏழு நிமிடம் நடந்தால் அவள் வீடு.

திடீரென மாலதிக்கு ஒரு ஐடியா தோன்றவே, மின்னலென அதைச் செயல்படுத்திவிட்டு, போஸ்ட் பாக்ஸைத் தாண்டி இடது புறம் நிதானமாக நடந்தாள். பின் தொடர்ந்தவன் ஓடி வந்து 'வெடுக்'கென அவள் ஹாண்ட் பேகைப் பிடுங்கிக் கொண்டு ஓடினான்.

ஹாண்ட் பேக் இல்லாமல் வெறும் கையை வீசியபடி வந்த மாலதியைக் கண்டு சம்பத் அலறினான், "ஹாண்ட் பேக் எங்கே? சம்பளப் பணம் என்ன ஆச்சு?"

மறு நாள் போஸ்ட் ஆபீசில் மாலதி சொன்னதை உன்னிப்பாகக் கேட்ட போஸ்ட் மாஸ்டர், "பிரில்லியண்ட் ஐடியா! திருடன் பின்னால வருவது தெரிஞ்சதும், சம்பளக் கவரை போஸ்ட் பாக்ஸில் போட்டுட்டீங்க! உங்க சம்பளப் பணம் எத்தனை ரூபாய், அது என்ன டினாமினேஷன், எந்த போஸ்ட் பாக்ஸில் போட்டீங்க? என்ற விவரங்களை சொன்னால், சம்பளக் கவரை உங்ககிட்டே தந்துடறோம். மேடம்!" என்றார்.

# கனவு மெய்ப்பட வேண்டும்



ஆண்களின் கைகளில் இருக்கும் திரை உலகில் சுதந்திரமாய் இயங்கும் பெண் இயக்குனர்களைத் தேடினால், மீரா நாயர், தீபா மேத்தா என்று வடக்கே கிடைப்பார்கள். தெற்கே? நானிருக்கிறேன் என்று குரல் கொடுக்கிறார் ஜானகி விஸ்வநாதன்.

சட்டம் போட்டுத் தடை செய்த பிறகும், தேவதாசி முறையானது, பாலியல் தொழிலாக நீடிக்கும் துயரம் மிகுந்த தன் கிராமத்தின் முகத்தை மாற்றிக் காட்டும் ஒர நிஜப் புரட்சியாளரின் வாழ்க்கைதான் கதை.

தமது முதல் படைப்பான 'குட்டி'யில், வீட்டு வேலை செய்யும் ஒரு பெண் குழந்தை தொழிலாளி மீதான சமூக ஒடுக்குதல்களை, நேரடியாகச் சொல்லியிருந்தார். இந்தப் படைப்பிலோ, தேவதாசிகள் மற்றும் பாலியல் தொழிலாளர்களின் வாரிசுகளை இந்தச் சமுகம் எப்படிப் பார்க்கிறது என்பதை, துளியும் பிரசாரத் தொனி இல்லாமல் பாத்திரங்கள் எதிர் கொள்ளும் வாழ்க்கை நிகழ்வுகள் வழியே ஊடுபாவாகச் சொல்லி நம்மை நெக்குருக வைத்து விடுகிறார். இந்த முறை தேர்ச்சியான திரைக்கதை, ஆரவாரம் இல்லாத இயல்பான காட்சி அமைப்புகள் என்று, தமது திரைமொழியைப் புதுப்பித்துக் கொண்டிருக்கும் இயக்குனரின் கதை சொல்லலில் புதிய பாய்ச்சல்.

இருபது ஆண்டு இடைவெளிக்குப் பிறகு சிறுவயதில் பிரிந்துவிட்ட தனது தாயை, அரசு மருத்துவமனையில் அடையாளம் கண்டு கொள்கிறபோதும் சரி, ஒடுக்குதலும், சுரண்டலும் மிகுந்த பாலியல் தொழிலை மட்டுமே நம்பி வாழ்ந்து வரும் தனது கிராமத்தை மீண்டும் பார்க்கிறபோதும் சரி, கதைநாயகன் மோகனசுந்தரம் காட்டுகிற மிதமான அதிர்ச்சி, அந்தப் பாத்திரத்தின் கனத்திற்கு வலு சேர்க்கிறது.

டாக்டர் மோகனசுந்தரம் பாத்திரத்தில் கரைந்து விட்டிருக்கும் நவீன நாடகக் கலைஞர் அசின் சர்மாவும், இளம் தாய், நடுத்தர வயது அம்மா, முதிர்ந்த பாட்டி என மூன்று விதத் தோற்றங்களில் நடித்திருக்கும் ரம்யா கிருஷ்ணனும் நிறைவு தருகிறார்கள்.

இயல்பான ஒளி அமைப்பும், சீரான நகர்தலும் கொண்ட சி.ஜே. ராஜ்குமாரின் உயிருள்ள ஒளிப்பதிவு நம் நினைவில் தங்கி விடுகிறது. மகேஷின் பாடல்களும்கூட செவிப் பறையை செல்லமாக வருடிவிடுகின்றன. மன்மதராசா ஆட்டத்தை எதிர்பார்த்துச் செல்லும் ரசிகனைக்கூட அமைதிப்படுத்தி உட்கார வைத்து விடும் வருடலான முயற்சி.

- விஷ்ணுவல்தாசன்

○ பெயில் ○ ஜஸ்ட் பாஸ் ○ ஆவரெஜ் ○ ஆபவ் ஆவரெஜ் ● டிஸ்டிங்ஷன்



# தங்கம் போல தண்ணீர்!

## –'இஸ்ரோ' விஞ்ஞானியுடன் சந்திப்பு

**ஜ**னாதிபதி அப்துல் கலாமுடன் இணைந்து 'விஷன் 2020' புத்தகத்தை எழுதிய இஸ்ரோ விஞ்ஞானி ஒய்.எஸ். ராஜன், பன்னாட்டு அரிமா சங்க மாநாட்டுக்காக சமீபத்தில் திருச்சிக்கு வந்திருந்தார். அவருடன் பேசினோம்.

**நவீன விஞ்ஞான தொழில் நுட்பத்தில் இந்தியாவின் தற்போதைய நிலை?**



விண்வெளி, அணு, பாதுகாப்பு சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப விவரங்களை வளர்ந்த நாடுகள், மற்ற நாடுகளுக்குத் தராது. ஒரு விதத்தில் இவை மறுக்கப்பட்ட தொழில் நுட்பங்கள். ஆனால், மற்ற வளர்ந்த நாடுகளுக்குச் சமமாக நமக்கு வேண்டிய கருவிகளையும், தொழில் நுட்பங்களையும் உருவாக்கிக் கொள்ளும் வகையில், முழுத் திறனை இப்போது பெற்றுள்ளோம்.

**விஞ்ஞானக் கல்வி என்பது நம் நாட்டில் இன்றளவும் ஏழை மற்றும் மத்திய தர வர்க்கத்து மாணவர்களுக்கு எட்டாத உயரத்தில்தானே இருந்து வருகிறது...!**

உண்மைதான். வளர்ந்த நாடுகளில் கூட இத்துறைகளில் திறமை உள்ளவர்கள், சுமார் இருபது சதம்தான் இருப்பார்கள். இத் துறைகளில் நம் நாட்டில் இரண்டு சதத்துக்கும் கீழேதான் (துல்லியமாக 1.77%) இருந்து வருகின்றனர். இந்நிலை மாற வேண்டும். பொருளாதாரப் போட்டிகளில் முன்னேற்றம் அடைவதற்குப் படிப்பு மட்டுமல்லாது, அவர்களுக்கு ஏதாவது தொழில் செய்து வாழக்கூடிய சிறு சிறு தொழில் நுட்பங்களும் உருவாக வேண்டும். ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையாவது நவீன விஞ்ஞான, பொருளாதார முன்னேற்றங்களுக்கு ஏற்றவாறு, பாடத்திட்டங்களை கல்வித் துறையில் புதுப்பித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

**பருவ மழை கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்து போய், தற்போது நீண்ட வறட்சியை நோக்கி... நகர்ந்து கொண்டிருக்கிறோம்?**

இது இயற்கையின் நியதி. இதில், வறட்சிக் காலங்களில் எப்படி பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதற்குப் பல தொழில் நுட்ப முறைகள் இருக்கின்றன. முக்கியமாக தண்ணீரை வீணாக விரயமாக்கும் முறைகளை கைவிட்டாக வேண்டும். விவசாயத்திலும், தொழிற்சாலைகளிலும், வீடுகளிலும் தண்ணீரைக் குறைத்து, உபயோகப்படுத்த பலவிதக் கருவிகளையும் உபயோகிக்க வேண்டும். இது தவிர, கழிவு நீரைச் சுத்திகரிப்பு செய்து, பின்னர் பயன்படுத்தும் முறைகளையும் நாம் வழக்கத்தில் கொண்டு வர வேண்டும். கடல் நீரையும் நல்ல




''ஹலோ வானிலை அறிக்கை சொல்ற ஆபிசுங்களா?''

''ஆமாங்க''

''இன்னிக்கு சாயந்திரம் கடற்கரை பகுதியில மழை பெய்யுங்களா?''

''இல்லைங்க.''

''கடலுல புயல் சின்னம் எதாவது...''

''கவலைப்படாதீங்க. இன்னும் ஒரு வாரத்துக்கு எந்த அறிகுறியும் இல்லை.''

''ரொம்ப நன்றிங்க.''

''நீங்க யாரு மீனவரா?''

''இல்லீங்க சாயந்திரம் பேமிலியோடு பீச்சுக்கு போகலாம்னு இருக்கேன். அதுக்குதான்.''

''?...!.....?....!''

- பெங்களூர் குப்புமல்லிராஜ்

தண்ணீராக்கி உபயோகிக்கும் முறைகளைக் கொண்டு வரலாம். பணத்தை தண்ணீர் போலச் செலவு செய்கிறார்கள் என்கிற நிலை மாறி, தண்ணீரைத் தங்கம் போல எச்சரிக்கையாகச் செலவிடுகிறார்கள் என்கிற நிலை வர வேண்டும்.

**விஷன் 2020 என்கிற புத்தகத்தில் முப்பத்தியிரண்டு துறைகளின் வளர்ச்சி குறித்து விரிவாகவே குறிப்பிட்டுள்ளீர்கள். மனித சமூக வளர்ச்சிக்கும் மாறுதலுக்கும், கலை இலக்கியங்களின் பங்கு அவசியமானதுதானே? அது பற்றி குறிப்பிடவில்லையே...?**

2020ல் இந்தியா பொருளாதாரப் பாதுகாப்புத் துறைகளில் எவ்விதம் வளர்ச்சியடைந்த நாடாக இருக்கப் போகிறது என்பது பற்றி, அந்தப் புத்தகத்தில் எழுதி இருக்கிறோம். அது தவிர, நாட்டில் வறுமையை அறவே போக்கி, எல்லோரும் ஆரோக்கியத்துடன் எப்படி வாழ முடியும் என்றும் எழுதியுள்ளோம். இப்படி மக்கள் இருப்பது கலை வளர்ச்சிக்கு ஒரு அஸ்திவாரம் ஆகும். ஒரு வளர்ந்த நாட்டுக்கு கலை உணர்ச்சியும், கலை வளர்ச்சியும் முக்கியம். நாடு வளர வளர, நிறைய இளைஞர்களும் இளைஞிகளும் விஞ்ஞானத் தொழில்நுட்பம், மருத்துவத்துறை மட்டுமல்லாது கலைத் துறைகளையும் சார்ந்து, தாங்களும் அனுபவித்து தங்களுக்குச் செல்வங்களையும் பெருக்கிக் கொள்ள வசதிகள் கிடைக்கும். கலைகளை அனுபவிக்க சாதாரண மக்களுக்கும் செல்வம் இருக்கும். நம் நாடு தொழில் நுட்பம், பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையும்போது, கலைத் துறைகள், விளையாட்டு மற்றும் மனித வாழ்வுணர்ச்சி சம்பந்தப்பட்ட துறைகளிலும் முன்னேறி வந்து விடும். இது குறித்து எவ்விதச் சந்தேகமும் தேவையில்லை.

**இஸ்ரோவின் செயல்பாடுகள் குறித்து...**

செயற்கைக் கோள்கள் மூலமாக நாடு முழுவதுமாக தொலைக்காட்சிச் செய்திகள் மற்றும் வானிலை பற்றிய தகவல்களையும் மிகச் சிறப்பாக சென்றடையுமாறு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நாட்டின் இயற்கை வளங்கள், அதாவது காட்டு வளம், காடுகளின் நிலை, தண்ணீர் நிலை, மண்ணின் நிலை குறித்தெல்லாம் தொலை நுண்ணறிவுக் கருவிகள் மூலமாக, பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை தகவல்கள் தந்து கொண்டேயிருக்கின்றன. இது போல பல சேவைகள் செயற்கைக் கோள் மூலமாக நமக்குக் கிடைக்கின்றன. இவற்றை நாம் வெளிநாட்டு வர்த்தகமாக, மற்ற நாடுகளுக்குச் செய்து, அன்னியச் செலாவணி ஈட்டி வருகிறோம். எதிர்காலத்தில் பூமியின் இயற்கைக் கோள்கள் பற்றி அறியவும், அவற்றில் உள்ள முக்கிய செல்வங்களை உபயோகப்படுத்திக் கொள்ளவும் வளர்ந்த நாடுகள் தொடங்கி விட்டன. இத் துறைகளிலும் இஸ்ரோ நம் தேசத்திற்கான பூர்வாங்கப் பணிகளைத் துவக்கியுள்ளது.

பேட்டி, படங்கள் :

**ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**

# கேள்வி இங்கே; பதில்கள் எங்கே?

"தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் தமது டெபாஸிட்டைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானால், குறைந்த பட்சம் 16.66 சதவிகித வாக்குகளைப் பெற வேண்டும் - அதாவது, பதிவான வாக்குகளில் 16.66 சதவிகிதம்.

"ஆனால் நம் நாட்டில் என்ன ஆகிறது...? சென்ற தேர்தலின்போது தமிழ் நாட்டில் வோட்டே போடாதவர்கள் 42.5 சதவிகிதத்தினர்! அதாவது மொத்த வாக்காளர்களுள், 42.5 சதவிகிதத்தினர் அ.தி.மு.க., தி.மு.க. இரண்டையுமே ஏற்கவில்லை! இவ்விரு கட்சிகளும் பெற்ற வாக்குகள் (மொத்த வாக்காளர் எண்ணிக்கை அடிப்படையில்) முறையே 14.18, 12.17 சதவிகிதம்தான்! ஆகக்கூடி இரு கட்சிகளுமே டெபாஸிட் இழந்ததாகத்தானே ஆகிறது!..." என்கிறார் அ.கி. வேங்கடசுப்ரமண்யம்.

உந்துனர் அறக்கட்டளை என்னும் தன்னார்வ அமைப்பின் நிர்வாகியான இவர், வேட்பாளர் பட்டியலில் 'யாரும் இல்லை' என்று ஒரு பிரிவைச் சேர்க்கக் கோரி, நீதி மன்றத்தில் பொதுநல மனு தொடுத்திருக்கிறார்!

சென்னை வாக்காளர் பட்டியல் திருத்தப்பட்டதில் 6.43 லட்சம் பெயர்கள் நீக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார் அ.கி.வே.


அரசியல் கட்சிகளுக்குத் துளியும் சமுதாய அக்கறை இல்லை; வாக்குப்பதிவு சதவிகிதம் அதிகரிக்கும்போதுதான் இந்த நிலை மாறும் என்பது, அ.கி.வே.யுடைய கருத்து, கவலை.

"வாக்களிப்போர் எல்லோருமே நல்லவர்களுக்கே வாக்களிக்க வேண்டும்" என்று சொல்பவர் 'நல்லவர்' என்பதற்கான தகுதிகளையும் பட்டியலிடுகிறார் :

1. சட்டசபை உறுப்பினரான பிறகு நம்மை அரசியல் தரகராகக் கருதாமல், அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டு ஊழல் செய்யாமல், அதிகாரிகளை மிரட்டாமல் இருப்பவர்.



* ஏ.என். சிவராமன்



* இரா. செழியன்



* அ.கி. வேங்கடசுப்ரமண்யம்.

2. சட்டம் இயற்றுவது, கொள்கை நிர்ணயிப்பது போன்ற பணிகளில், விருப்பு வெறுப்பின்றி நடுநிலையோடு பங்கேற்பவர். அதற்கு அவசியமான அறிவும் பெற்றவர்.

3. ஜாதி, வர்க்க துவேஷம் வளர்க்காதவர்.

4. பொருளாதார, சட்டப் பிரச்னைகள் பற்றி ஏற்கெனவே அறிந்திரா விட்டாலும், விவரமாகத் தெரிந்து கொள்ள முனைப்புக் கொள்பவர்.

"இந்த நான்கும் தினமணி ஆசிரியர் (முன்னாள்) ஏ.என்.சிவராமன் குறிப்பிட்டுள்ள தகுதிகள்" என்கிறார் அ.கி.வே. "இந்த நான்கையும் வற்புறுத்தி, அரசியல் தலைவர்களுக்கு உள்ள இதர பொறுப்புகளையும் குறிப்பிட்டு, இந்தியாவை 2020க்குள் சிறப்பாக மேம்படுத்தவல்ல, அர்த்தமுள்ள தேர்தல் அறிக்கைகளை வெளியிடக் கோரினார் இரா. செழியன். அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் விவரமாகக் கடிதம் எழுதினார். இன்னும் ஒருத்தர்கூட செழியனுக்கு பதில் போடவில்லை!" - ஆதங்கப்படுகிறார் அ.கி.வே.!

- சாருகேசி


# திருப்பூர் கிருஷ்ணன்

தெய்வத் தன்மையுடைய வாழ்க்கையை நாம் வாழப் பழக வேண்டும். சமய போதனைகளையும் ஆன்மிக போதனைகளையும் ஒன்றாகக் குழப்பிக் கொள்ளக் கூடாது. சமய போதனை என்பது கடந்த காலத்தைச் சேர்ந்தது. ஆன்மிக போதனையோ வருங்காலத்தைச் சேர்ந்தது. ஆன்மிகம் உணர்வுக்கு ஒளியூட்டுகிறது. வருங்கால ஸித்திக்கு ஏற்ற வகையில் அது இன்றைய உலகைத் தயாரிக்கிறது. நமக்கு மதம் கிடையாது. அதற்குப் பதிலாக நாம் ஆன்மிக வாழ்வை மேற் கொண்டிருக்கிறோம். நமது ஆன்மிகம் மதத்தை விட அதிக ஆழமானது. உண்மையானது. உயர்ந்ததும் கூட. இறைவனுக்கு மதத்தை விட ஆன்மிகம் இன்னும் அதிக நெருக்கமானது என்பதைப் புரிந்து கொள்வோமாக.

( ஸ்ரீ அரவிந்த அன்னையின் அமுத மொழி)

உலக வரலாற்றை எழுதிய பலர், மன்னர்களைப் பற்றி மட்டுமே எழுதினார்கள் என்பதை ஒரு குறையாகச் சொல்வதுண்டு. மக்களின் வரலாறு எழுதப்படவே இல்லை.

அதுபோலவே, ஆன்மிகப் பெரியோர்களின் வரலாற்றையும் வெறும் உலகியல் ரீதியான வரலாறாக மட்டுமே எழுதுவதில் பொருளில்லை. அந்த ஆன்றோர்களின் வாழ்க்கையில் சம்பவக் குறிப்புகளுக்கு இரண்டாம் இடம் தான் கொடுக்கப்பட வேண்டும். அவர்களின்






அர்ப்பணிப்பு உணர்வோடு எழுதி முடித்த சாரதானந்தா, 'ஒரு யோகியின் சுயசரிதம்' எழுதிய பரமஹம்ச யோகானந்தர், 'சித் சக்தி விலாஸ்' எனத் தம் ஆன்மிக அனுபவங்களை எழுதியருளிய முக்தானந்த பரமஹம்சர், என ஆன்மிக இலக்கிய வாழ்க்கை வரலாற்றுத் துறை, பல உன்னத ஆசிரியர்களால் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. ஸ்ரீ அரவிந்தர் வரலாறும் பலரால் பலப்பல கண்ணோட்டங்களில் எழுதப்பட்டிருக்கிறது. எழுத்தாளர் பிரேமாநந்தகுமாரின் தந்தை, கே.ஆர். ஸ்ரீனிவாச ஐயங்கார் போன்ற உயர்தர இலக்கியவாதிகள் அரவிந்தர் தத்துவங்களில் தோய்ந்து வாழ்ந்திருக்கிறார்கள். சுதந்திரப் போர் சார்ந்த அரசியல், சாவித்திரி காப்பியத்தை உள்ளிட்ட இலக்கியம், மனிதனைத் தெய்வமாக்கும் ஆன்மிகம் என, அரவிந்தர் திருச்சரிதம் முப்பெரும் பரிமாணங்களைக் கொண்டு காவிய அழகுடன் ஜொலிக்கிறது. ஸ்ரீ அரவிந்தர் என்ற தெய்வத்தை, மன ஊஞ்சலில் வைத்து அசைத்து

# ஸ்ரீ அரவிந்தக் குழந்தை...

ஆன்மிக அனுபவங்களுக்குத் தான் முதலிடம் தரப்பட வேண்டும். அந்த நோக்கில் எழுதப்பட்ட வரலாறுகள் குறைவுதான்.

ராமகிருஷ்ணரின் வரலாற்றை தம் நாட்குறிப்பை ஆதாரமாகக் கொண்டு, 'அமுத மொழிகள்' என்ற தலைப்பில் எழுதிய மகேந்திரர், பெரும் ஆராய்ச்சியின் பேரில், பரமஹம்சர் வாழ்வை ஓர் அசைத்து அழகு பார்ப்பதுபோல், அவரது வாழ்வையும் முன்னும் பின்னுமாகப் பகுத்தும் தொகுத்தும் பேச வேண்டியிருக்கிறது. அரவிந்தர் சரிதம் என்ற அந்தத் திகட்டாத தெள்ளமுதை நம் மனம் உள்வாங்கினால், வாழ்வில் அடைய வேண்டிய பேறு வேறேதுமில்லை...

அரவிந்தரின் தந்தை டாக்டர்

கிருஷ்ண தன கோஷுக்கு, ஐரோப்பிய நாகரிகத்தின் தாக்கம் அதிகம். இங்கிலாந்துக்குச் சென்று மேற்படிப்புப் படித்துப் பல பட்டங்களுடன் பாரதம் திரும்பினார் அவர். ஐரோப்பிய மயமாகத் தம் குழந்தைகளை வளர்க்க விரும்பினார்.

அரவிந்தருக்கு ஐந்து வயதானபோது, அவரது மூத்த சகோதரர்களான விநய பூஷன், மன்மோகன் ஆகியோரோடு டார்ஜிலிங்கில் ஐரோப்பியக் குழந்தைகளுக்கென நிர்மாணிக்கப்பட்டிருந்த லோரெட்டோ கான்வென்ட் பள்ளியில் சேர்க்கப்பட்டார். அரவிந்தர் முற்றிலும் வித்தியாசமான மாணவராக இருந்தார். அவரது ஆங்கில ஆசிரியர், அரவிந்தரின் புனித இயல்புகளைப் பார்த்து வியந்திருக்கிறார்.

அரவிந்தரின் விழிகள் உட்பார்வை கொண்டு திகழ்பவை. அவரது உள் ஆவல் அந்த விழிகளில் ஏடாய் மிதக்கும். அங்குமிங்கும் அலைபாயும் விழிகள் அல்ல அவை. நிலைபேறுடைய ஏதோ ஒரு பொருளில், அந்தப் பார்வை உறுதியாய் ஊன்றி நிற்கும். விழிகளில் எப்போதும் ஒரு தேடுதல். மற்றவர்களிலிருந்து அரவிந்த மாணவர் வெளித் தோற்றத்திலேயே வேறுபட்டுத் தெரிவார். இனிமையும் சாந்தமும் கொண்ட, எதற்கும் எப்போதும் ஒரு சிறிதும் பதறாத மனநிலை அவருடையது. தூய உள்ளமுடைய அரவிந்தர், மாணவப் பருவத்தில் பார்ப்பவர் நெஞ்சை அள்ளிக் கொண்டதில் ஆச்சரியமில்லை.

ஐந்து வயதான அரவிந்தர், டார்ஜிலிங் பள்ளியில் மூத்த சகோதரர்களோடு சேர்ந்து கல்வி பயின்றது, வெறும் இரண்டே ஆண்டுகள் தாம். ஐந்து வயதிலிருந்தே அரவிந்தக் குழந்தை, பெற்றோரைப் பிரிந்து வாழப் பழகிவிட்டது. தாயையும் தந்தையையும் பிரிந்து வாழ்ந்ததாலோ என்னவோ, உலகனைத்திற்கும் தாயாகவும் தந்தையாகவும் இருக்கும் கடவுள் சக்தியிடம் மனம் ஈடுபடத் தொடங்கினார் அரவிந்தர். மிகச் சிறு வயதில் அந்தக் குழந்தையின் ஆழ்மனத்தில் நிகழத் தொடங்கியிருந்த ஆன்மிக ரீதியிலான உள் மாற்றங்கள் யாரும் அறியாதவை. பின்னாளில் தெய்வமாய் அக்குழந்தை வளர்ந்து பரிணமிப்பதற்குத் தேவையான வகையில், உலகியல் ஆசைகளைத் துறக்கும் நெஞ்சுரம், அப்போதே அடிமனத்தில் தூவப்பட்டிருக்க வேண்டும்.

# அருள்வாக்கு

ஆதியில் மநு இருந்ததே தமிழ்நாட்டில்தான். இங்கேதான் வேத வித்யை, ஞானம், பக்தி எல்லாமே ரொம்பச் செழிப்பாக இருந்திருக்கிறது. **த்ர விடேஷு பூரிச :** என்பார்கள். தமிழ் நாட்டில் தாயுமானவர், பட்டினத்தார் போன்றவர்கள்தான் என்றில்லை; மதாந்தரங்களை (அன்னிய மதங்களை) சேர்ந்த வேதநாயகம்பிள்ளை, மஸ்தான் சாகிப் போன்றவர்கள்கூட தமிழ் நாட்டு மண்ணின் விசேஷத்தால் பரம வேதாந்திகளாக இருந்திருக்கிறார்கள். வேத தர்மத்துக்கு ஆதி வீடே இதுதான். அந்தத்திலும் கலி முடிவில் வேதரட்சணத்துக்காக அவதரிக்கப் போகிற கல்கி, திராவிட தேசத்தில் திருநெல்வேலிச் சீமையில் தோன்றப் போகிறார்

ஆனால் அவதாரமாய்க் கொண்டாடப்படுபவர்கள், பிறக்கும்போதே அவ்விதம் பிறக்கிறார்களா, அல்லது பின்னாளில் அவ்விதம் வளர்ந்து அத்தகைய நிலையை எட்டுகிறார்களா? தொடக்கத்தில் அவதாரங்களுக்கே தாங்கள் அத்தகையவர்கள் என்று தெரியுமா, இல்லை தெரியாதா?

கண்ணனுக்குத்தாம் தெய்வம் என்பது தெரியும் என்றும், ராமனுக்கு, தாம் அவதாரம் என்பது தெரியாதென்றும் சொல்வதுண்டு. நந்தகோபன் தோளிலிருந்த கண்ணக் குழந்தை, வெண்ணிலவை வாவென்று கூப்பிட்டதும், என்ன ஆச்சரியம்! கடவுள் கட்டளைக்கு அடிபணிந்து, அந்த நிலவே கண்ணனின் கைகளில் இறங்கி வந்துவிட்டது! நந்தகோபர் திகைத்து விக்கித்தார் என்கிறது கண்ணன் கதை. பல ராமாயணங்களில் ஒரு ராமாயணத்தில், ராமன் நிலவு வேண்டும் என்று தன்னைத் தூக்கிக் கொண்டிருந்த சுமந்திரரிடம் அடம் பிடித்ததாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. சுமந்திரர் வெள்ளிக் கிண்ணத்தை ராமன்

என்று தான் சொல்லியிருக்கிறது. அங்கே நான் வேத தர்மத்தில் தவறாத பிராம்மணர் இருக்கப் போகிறார்; அவருக்குப் புத்திரராகக் கல்கி அவதரிக்கப் போகிறார் என்று புராணத்தில் சொல்லியிருக்கிறது. அப்படிப்பட்ட தேசத்தில் வைதிகத்துக்கு விரோதமே இருக்கக் கூடாது.



- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

திருக்கரத்தில் தண்ணீரோடு கொடுத்து, அதில் தெரியும் நிலவின் பிரதிபிம்பத்தைக் காட்டி, நிலவு உன் கைக்கு வந்து விட்டது பார்!' என்று சமாதானப்படுத்தினாராம். தாம் கடவுள், தம் ஆணைக்குக் கட்டுப்பட்டு நிலவே கைக்கு வரும் என்ற தம்மைப் பற்றிய ரகசியம் ராமனுக்கே தெரியாதது தான் இதற்குக் காரணம் போலும்! முற்றிலும் மனித நிலையில் இயங்க வேண்டும் என்று தமக்குத் தாமே விதித்துக் கொண்ட கட்டுப்பாட்டிற்கு உட்பட்டுப் பரம்பொருள் இயங்கியதோ!

ராமகிருஷ்ண பரமஹம்சரும், ரமணருமெல்லாம் அவர்களின் இளம் வயதிலேயே, பின்னால் மகான்களாக மலரப் போகிறவர்கள் என்று பிறரால் இனங் காணப் பட்டார்களா, இல்லையா? அவர்களுக்கே தாங்கள் மாபெரும் செயலைச் செய்ய வந்திருக்கும் மகான்கள் என்பது இளம் வயதில் தெரியுமா, இல்லை தெரியாதா?

இது போன்ற கேள்விகளுக்கு எல்லா மகான்களைப் பற்றியுமான ஒரே பதில், இல்லை. ராமகிருஷ்ணரைப் பொறுத்தவரை, மெல்ல மெல்லத் தான் அவர் குரு நிலைக்கு உயர்ந்தார். அவரின் கடுந்தவமும், ஆன்மிகச் சாதனைகளும் படிப்படியாக அவரை மேலெடுத்துச் சென்றன. என்றாலும்கூட, தாம் தெய்வம் தான் என்று அடியவர்கள் சொன்னபோது, அது அப்படித் தானா என்று அவரே வினவியிருக்கிறார். 'காமினி, காஞ்சனம்' ஆகிய இரண்டு பற்றுகளையும் நீக்கி, பாலியல் துறவு, பொருட்துறவு இரண்டையும் முழுமையாக மேற்கொண்ட அவருக்குத் தம்மைப் பிறர் போற்றுவதைப் பற்றியோ போற்றாததைப் பற்றியோ, எந்த அக்கறையும் இல்லை. மனித குலம் மேன்மையடைய வேண்டும் என்பது மட்டுமே அவர் லட்சியமாக இருந்தது. காளியின் அருட்கடாட்சம் அவரில் இறங்கி, அவர் காளியாகவே மாறியதை அடியவர்கள் உணரத் தலைப்பட்டு உருகினார்கள். அவரின் உயிர்ப் பறவை உடல் கூட்டை விட்டுப் பறந்தபோது, 'அம்மா காளி! நீ எங்கே போய்விட்டாய்!' என்றல்லவா அன்னை சாரதை கதறினார்!

பரமஹம்சர் ஸித்தி அடைந்தபோது, அரவிந்தருக்குச் சரியாகப் பதினான்கு வயது. அரவிந்தர் பிறந்தது ஓர் ஆகஸ்ட் பதினைந்து. பரமஹம்சர், அரவிந்தர் தோன்றிப் பதினான்கு ஆண்டுகளுக்குப் பின் ஓர் ஆகஸ்ட் பதினாறாம் நாள் வானில் கலந்தார். விவேகானந்தர் ஸித்தி அடைந்தபோது, அரவிந்தருக்கு வயது முப்பது.

பரமஹம்சர் அவதார நிலைக்கு உயர்ந்ததில், படிப்படியான வளர்ச்சி தெரிகிறது. பரமஹம்சரின் சிந்தனைகளில் பெரும் ஈடுபாடு கொண்ட அரவிந்தரின் ஆன்மிக நிலையும், படிப்படியாக வளர்ந்து தான் விஸ்வரூபம் கொண்டது. அதிமனச் சக்தியை உடலில் இறக்கும் யோகத்தைப் பயின்று, அதிமானிடர்களாக அனைவரும் உருமாற வேண்டும் என்பதும், பரிணாம வளர்ச்சியின் அடுத்த கட்டத்தை விரைவில் மனித குலம் அடைய வேண்டும் என்பதும் தானே, அரவிந்தரின் கனவுகளாக இருந்தன!

லோரெட்டோ கான்வென்ட் பள்ளியிலான அரவிந்தரின் இரண்டாண்டு வாழ்வு குறித்து, அதிகச் செய்திகள் கிட்டவில்லை. என்றாலும் பின்னாளில் அந்தக் காலம் குறித்து அரவிந்தர் நினைவு கூர்ந்த ஓரிரு நிகழ்ச்சிகள்... ஆகா! அவை தான் எவ்வளவு சுவாரஸ்யமானவை!

(அமுதம் பெருகும்)

# ம.தி.மு.கவுக்கு

திருச்சி தொகுதி தி.மு.கவுக்கா, காங்கிரசுக்கா என உள்ளூரில் சோழி உருட்டிப் போட்டுக் கொண்டிருக்க, எதிர்பாராதவிதமாக மதிமு.க.வுக்கு ஒதுக்கித் தந்து விட்டார் கலைஞர். புளகாங்கிதம் அடைந்து போயிருக்கிறார் ம.தி.மு.க வேட்பாளரான எல். கணேசன்!

அ.தி.மு.க சார்பில் நூறு சதம் ஏமாற்றத்துக்கு உட்பட்டவர் தலித் எழில்மலை என்றால், ஐம்பது சதம் ஏமாற்றத்துக்கு ஆளானவர், பா.ஜ.க.வின் சுகுமாரன் நம்பியார். திருச்சிக்கு தாம்தான் வேட்பாளர் என்கிற தீர்மான முடிவில், கடந்த ஏழெட்டு மாதங்களாக வலம் வந்தவர். தற்போது வட சென்னையில் வேட்பாளராக வாய்ப்புப் பெற்றுள்ளதால், ஐம்பது சதவிகிதம் ஏமாற்றத்திலிருந்து தப்பித்திருக்கிறார்.

''தாங்கள் வாய்ப்பளித்தால், தேர்தலில் போட்டியிடுகிறேன். ஆனால், என்னிடம் தேர்தலுக்குச் செலவு செய்யுமளவுக்குப் பண வசதி இல்லை!'' - நேர்காணலின்போது அம்மாவிடம் இப்படிச் சொன்ன மாவட்ட முன்னாள் செயலாளரான மு. பரஞ்ஜோதி, அ.தி.மு.க வேட்பாளர். தொகுதிக்குள் வசித்து வருபவர். தொகுதி வாக்காளர்களில் பெரும்பான்மையான முத்தரையர் வகுப்பைச் சேர்ந்தவர்.

• எல். கணேசன்



பணபலத்திலும், ஆள் பலத்திலும், வாக்கு வங்கியிலும் வலிமையான இந்த இரு அரசியல் அணிகளுக்கிடையே, சுயேச்சை வேட்பாளராகக் களம் புகுந்துள்ளார் 'செந்தமிழ்க் கொண்டல்' திருவானைக்காவல் பி. இரவி என்பவர். பொது வாழ்வில் லஞ்சம், வன்முறை இரண்டினையுமே ஒழிக்க வேண்டுமென பிரசாரம் செய்து வருபவர். பட்டிமன்ற நடுவர். ஆன்மிகம் மற்றும் இலக்கியச் சொற்பொழிவாளர். கடந்த 2001 இடைத் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்டு, பதினாறாயிரம் வாக்குகளைப் பெற்றவர். இளைஞர் சமுதாய நற்பணி மன்றம் சார்பாக சுயேச்சையாகப் போட்டியிடுகிறார். எளிய மனிதர். ஒரு தேர்தலில் வெற்றி பெற, இன்றுள்ள சூழ்நிலையில் இவை மட்டும் போதுமா என்ன?


தொகுதியின் பன்னிரண்டு லட்சம் வாக்காளர்களில், முப்பது சதத்துக்கும் மேலானோர் முத்தரையர் சாதியினர். குறிப்பாக தி.மு.கவில் அவர்களுக்கென பிரதிநிதித்துவம் தரப்படவில்லை என்கிற ஆதங்கம், கட்சியின் முக்கியப் பிரமுகர்களிலிருந்து கடைசித் தொண்டர்கள் வரைக்கும் இருக்கின்றது. அவர்கள் பலரும் ம.தி.மு.க வேட்பாளருக்காக வேலை பார்த்தாலும், உள்ளுக்குள் குமைந்து கொண்டிருக்கிறார்களாம்! இதை வாக்குகளாக மாற்ற முனைந்துள்ளது அ.தி.மு.க தரப்பு!

பம்பரம் சின்னத்



• சினிமா நடிகர்களின் கலைநிகழ்ச்சியில் மு. பரஞ்ஜோதி

# சின்னம்மா ஆதரவு?



■ இரவி

தினர் பரப்பி வருகின்ற தகவல்கள், வேறுவிதமாய் அமைந்துள்ளன. ம.தி.மு.க வேட்பாளர் எல். கணேசன், சசிகலா குடும்பத்தின் நெருங்கிய உறவினர். அதனால் இரட்டை இலையின் ஒரு பகுதியினரை அடக்கி வாசிக்குமாறு 'சின்னம்மாவே' ஜாடை காட்டியுள்ளதாகவும், அ.தி.மு.க.வில் ஒரு பிரிவினர் பம்பரத்துக்கு ஆதரவாக வேலை பார்த்து வருவதாகவும், அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது எந்த அளவுக்கு உண்மை என்பது, எல்.ஜிக்கும், சின்னம்மாவுக்கும் மட்டுமே தெரியும்.

**நா**டாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆறு தொகுதிகளில் திருச்சி ஒன்று, இரண்டு, திருவெறும்பூர் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில், நடுத்தர வர்க்கத்தினரும், அரசு மற்றும் தனியார் நிறுவன ஊழியர்களும், தொழிலாளர்களும் நிறைந்துள்ளனர். இந்த மூன்றிலும் தி.மு.கவுக்கான வாக்கு வங்கி நிலையாகவே உள்ளது. ஸ்ரீரங்கம், லால்குடி, முசிறி ஆகிய மூன்று சட்டமன்றத் தொகுதிகளில், அ.தி.மு.கவின் கணிசமான வாக்கு வங்கி கடந்த தேர்தல் வரை இருந்து வந்துள்ளது. ஆனால் வறண்ட காவிரியும், கருகிப் போன பயிர்களும், இலவச மின்சார சலுகைக் குளறுபடிகளும், விவசாயிகள் மத்தியில் அ.தி.மு.க ஆட்சி குறித்து கடும் எதிர்ப்பையே அறுவடை செய்து வைத்துள்ளது. கடந்த தேர்தலில் பரவலாகப் பதிவான இரட்டை இலை வாக்குகள், இந்த முறை மீண்டும் அ.தி.மு.கவுக்கே கிடைக்குமா என்பது சந்தேகமே. இருந்தபோதிலும், மேற்கண்ட மூன்று தொகுதிகளிலும் (இவற்றில் வாக்காளர்களும் அதிகம்) பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்ற முத்தரையர் வாக்குகளை நம்பி மிகுந்த தெம்புடன் தேர்தல் பணியாற்றி வருகிறது அ.தி.மு.க!



ம.தி.மு.க வேட்பாளர் எல். கணேசன் ஒரு தேர்ந்த அரசியல்வாதி. தொகுதிக்குப் புதியவர் என்றாலும், தேர்தல் களத்தில் கடைசி நிமிட நுணுக்கங்கள் வரை கரை கண்டவர். இந்த அறுபத்தொன்பது வயதுக்காரருக்கு, அவரது பழுத்த அரசியல் அனுபவம் வெற்றியைப் பெற்றுத் தந்துவிடுமென, ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினர் நம்புகின்றனர்.

"காவிரிப் பிரச்னைக்காக என் உயிரையும் விடத் தயார்!" என முழங்கி வருகிறார் எல். கணேசன். காவிரி டெல்டாவின் மணி மகுடமாய்த் திகழ்கின்ற திருச்சி பாராளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட விவசாயிகளின் நாடித்துடிப்பை உணர்ந்து கொண்டவர் போல, பேசுகிறார். கடந்த மூன்றாண்டுகளில் கடுமையாய் பாதிப்படைந்துள்ள விவசாயிகள் மத்தியில் இது எந்த அளவுக்கு எடுபடும் என்பது தெரியவில்லை. ஆறு சட்டமன்றத் தொகுதிகளிலும், பாராளுமன்றத்துக்கென காங்கிரஸ் வாக்கு வங்கி கணிசமாக இருக்கின்றது. மேலும், இரு கம்யூனிஸ்ட்டுகளின் வாக்குகளும், ம.தி.மு.க வேட்பாளருக்கு வெற்றிப் படியை நோக்கிச் செல்ல பக்கபலமாக இருக்கும் என்கிறார்கள்.

கட்டுரை, படங்கள்:
**திருநாவு**

# நீங்கள் கேட்டவை-தராசு

● சிவராமசுப்பிரமணியன்,
தூத்துக்குடி - 2.

? அட, தெரியாமல்தான் கேட்கிறேன். ராமதாஸ் vs ரஜினி மோதலுக்கு அடிப்படைக் காரணம் என்ன...?

! ப்யூர் அண்ட் சிம்பிள் ஈகோ!

● பொன்விழி, அன்னூர்.

? தராசுவை அதிர்ச்சி அடைய வைத்த விஷயம் எது...?

! பி.ஜே.பி பிரமுகரும், பிரதமரின் ஏஜெண்டுமான லால்ஜி டாண்டனின் பிறந்த நாளுக்கு, தேர்தல் நன்னடத்தை விதிகளை மீறி, இலவச புடைவை வினியோகித்த நிகழ்ச்சி, அதிர்ச்சி. அப்போது நடந்த குரூர மரணங்கள், வேதனை கலந்த அதிர்ச்சி; விபத்து நடந்தபோது டாண்டன் தரப்பில் பொறுப்பானவர் யாரும் அங்கு இருக்கவில்லை என்ற உண்மை, கோபம் கலந்த பேரதிர்ச்சி. பிரதமர் தொகுதியான லக்னௌவில் நடந்த இதற்கும் பா.ஜ.கவுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை என, அக்கட்சியினர் ஒட்டுமொத்தமாகப் புளுகுவது, அருவருப்புடன்கூடிய அதிர்ச்சி!

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? ராபின் மெயின் வழக்கில் தொடர்புள்ளதாக நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் காளிமுத்துவை, சபாநாயகர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஜெயலலிதா ஏற்பாரா...?

! கடப்பாரையா வழக்குப் பதிவு செய்து நடந்தாலே, கக்குக் கஷாயம் சாப்பிட்டு ஜீரணிக்கறவங்ககிட்டே, குண்டூசி பத்திக் கேக்கறீங்களே...!

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் இன்று தவிப்பவர் யாருங்க சார்...?

! உள்ளூரில் டாக்டர் அய்யா. வெளியூரில் மோடி பைய்யா!

● குவளை எழில், சென்னை - 92.

? உண்மை சுடும் என்பர்... சமீபத்திய உதாரணம் ஏதேனும்...?

! மக்களிடம் உள்ள செல்வாக்கின் அடிப்படையில், ரஜினியை எம்.ஜி.ஆருடன் ஒப்பிட்டு நிருபர் கேள்வி கேட்க, கருணாநிதிக்கு வந்த கோபம்!

● மா.வி. கோவிந்தராசன், ஆரணி*

? பொருளாதாரத்துக்கும் தாரத்துக்கும் உள்ள இடைவெளி எவ்வளவு...?

! மாதத் தொடக்கத்தில் இடைவெளி குறுகும்; மாதக் கடைசியில் அதிகரிக்கும். ஆனால் இடைவெளியே இல்லாமல் என்றுமே இராது!

● எஸ். அசாதி,
பெருமாள்தேவன்பட்டி☐

? 'அயோத்தி அயோத்தி' என்று இன்னும் எத்தனை தேர்தல்களுக்கு அந்த துருப் பிடித்துப் போன துருப்புச் சீட்டை பா.ஜ.க வினர் பயன்படுத்தப் போகிறார்கள்?

! தனிப் பெரும்பான்மை கிடைக்கி வரைதான். அதுக்கப்புறம் மதுரா, காசின்னு வேற துருப்புச்சீட்டு காத்திருக்கு...


## சுடுகிற உண்மைக்

● மல்லிகை மன்னன், மதுரை - 17.


? 'மதமாற்றக் கொள்கையைத் தீவிரமாக ஆதரிக்கும் கருணாநிதியும் ராமதாஸும் இந்து மதத்தை விட்டு வேறு மதத்துக்கு போகாமலிருப்பது என்ன நியாயம்?' என்று ராமகோபாலன் கேட்கிறாரே...?

● மோதல்.... ● ... மன்னர்கள்!






☐ ரூ.100 பரிசு பெறுபவர்:
எஸ். அசாதி,
பெருமாள்தேவன்பட்டி,
பிள்ளையார்குளம் அஞ்சல்,
ஸ்ரீவில்லிபுத்தூர் (வழி) - 626137



• கடப்பாரையும்...



• ... கஷாயமும்!

. மதமாற்றக் கொள்கையை யாருமே ஆதரிக்கவில்லை; மதம் மாறுவதற்கு உள்ள தனிநபர் உரிமையை, சுதந்திரத்தைத்தான்

# …ரணம் உண்டா?

ஆதரிக்கிறார்கள். தம்மை ஹிந்து என்று சொல்லிக் கொள்ள ராமகோபாலனுக்கு எவ்வளவு உரிமை உண்டோ, அத்தனை உரிமை ராமதாஸுக்கு உண்டு; கருணாநிதிக்கும் உண்டு (நாத்திகரான போதிலும்).

● கு.மு. சுந்தரம், சிலமலை.

*? 'வறண்டு கிடக்கும் வீராணம் ஏரியை நம்பி' ரூ 720 கோடி செலவிட்டது இமாலயத் தவறு' என்று கருணாநிதி கூறியுள்ளாரே...?*

! இந்த இமாலயத் தவறைக் காட்டிலும் பெரிய தவறு வீராணத்தில் ஆழ்துளைக் கிணறு இறக்கி, சென்னைக்குத் தண்ணீர் இறைக்க எடுக்கப்பட்டுள்ள முயற்சி. சுற்று வட்டாரமெல்லாம் வறண்டு சுக்காகிவிடும்!



• கடுகிற....



• ... உண்மை!

● கு.நா. ராஜேஸ்வரன்,
மொரட்டுப்பாளையம்.

*? வைகோவை பொடாவில் கைது செய்தது தவறு என்று மத்திய பொடா மறு ஆய்வுக்குழு தீர்ப்பளித்துள்ளது பற்றி...?*

! தீர்ப்புக்குத் தலை வணங்கி ஏற்று, வைகோ மீதுள்ள வழக்குகளை வாபஸ் பெறுவது, தமிழக அரசுக்கு கௌரவம். தீர்ப்பை நன்றியுடன் ஏற்று, அதே நேரத்தில் முன்னிலும் எச்சரிக்கையாக இருந்து, ஈழத் தமிழர் துயருக்கு அனுதாபம் தெரிவிப்பதுடன் நிறுத்திக்கொள்வது, வைகோவுக்குக் கௌரவம்.

● உமரி.பொ. கணேசன்,
மும்பை - 37.

*? கேள்வித் தாள்களைப் பாதுகாக்க வேண்டியவர்கள் அவுட்டாக்கி விட்டு, மாணவ மாணவிகளைப் பரீட்சை எழுத விடாமல் ரத்து செய்வது நியாயமா...?*

! அநியாயம் மட்டுமல்ல; கொடுமை! நேரம், பணம் விரயம்; டென்ஷன் நீட்டிப்பு என்று பல வகைகளில் சித்திரவதை.

● ஆர்.கே. லிங்கேசன்,
மேலகிருஷ்ணன்புதூர்.

*? 'சூப்பர் ஸ்டாரை விமர்சிக்க டாக்டர் ராமதாஸுக்கு அருகதை கிடையாது' என்கிறாரே இல. கணேசன்.*

! ரஜினியே அப்படிச் சொல்லலியே... கௌரவமா விமர்சிச்சிருந்தா ஏத்துக்கிட்டிருப்பேன்னுதானே சொல்றார்.... கணேசன் wants to be more loyal than the king.

* ரூ.50 பரிசு பெறுபவர்:
மா.வி. கோவிந்தராசன்,
18/23, அருணகிரி தெரு,
ஆரணி.
632 301.

வாஸந்தி



# ஸிலிக்கன் பள்ளத்தாக்கிலே...

ஸான்பிரான்ஸிஸ்கோவின் ஸிலிகன் பள்ளத்தாக்கு மென் பொருள் தொழிலின் பொன் பள்ளத்தாக்காக ஜொலித்தபோது, நமது மென்பொருள் இஞ்சினியர்கள், ஸான் பிரான்ஸிஸ்கோவுக்குப் பயணித்தார்கள். அகோரப் பசியில் இருந்த மென்பொருள் தொழில் எல்லாருக்கும் இடமளித்தது. சில இந்தியர்கள், எளிய பின்னணியிலிருந்து வந்த தமிழர்கள், அந்தக் கால கட்டத்தில் மில்லியனர்கள் ஆன உதாரணங்கள் இருக்கின்றன. ஆனால், அது ஆரோக்கியமான பசியில்லை என்பது, மென்பொருள் எழுச்சி நிகழ்ந்த அதே வேகத்தில், டாட் காம் உலகத்தில் வீழ்ச்சி ஏற்பட்ட போது, இங்கு மனக்கோட்டை கட்டி கொண்டு வந்தவர்களுக்கு பெரிய அதிர்ச்சியாக இருந்திருக்க வேண்டும். பங்குச் சந்தையில் பில்லியன்களைப் பார்த்தவர்கள் பலர், பில்லியன்களைத் தொலைக்கவும் செய்தார்கள். அதிகக் கல்வித் தகுதியுள்ளவர்களுக்கே உத்தியோக வாழ்வு நிரந்தரமில்லாமல் போனது மட்டுமல்ல, புதிய வாய்ப்புகளும் குறைந்து விட்டன. ஸிஸெரோவுக்கு வந்த தமிழ்க் குடும்பங்கள், குழந்தைகளின் கலகலப்பினால் உற்சாகமாகத் தோற்றமளித்தாலும், ஆண்களின் முகங்கள் சுரத்தில்லாததாக எனக்குப்பட்டது. 'அங்கு நான் சந்தித்த கிருஷ்ணன், பாலாஜி, ராஜேஷ், ராஜ்கோபால், எல்லோர் பேச்சிலும், பொதுவாக ஒரு சொல் வெளிப்பட்டது எனக்கு வியப்பை அளித்தது. 'இங்கு எங்களுக்கு நிம்மதியில்லை' என்றார்கள். "இங்கு நான் அன்னியமாக உணர்கிறேன்" என்றார் கிருஷ்ணன். எனக்கு அது வியப்பளிக்காவிட்டாலும், "எப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டேன். "இங்கு வேலை விஷயத்தில் தரத்தைதான் பார்க்கிறார்களே தவிர, இனத்தை அல்ல என்று கேள்விப்படுகிறேனே" என்றேன். "அது உண்மை தான். இருந்தும் எனக்கு இது அன்னிய தேசம்" என்றார். மிகச் சிலரைத் தவிர, அனைவருமே வந்து ஐந்து வருஷங்களுக்குள் தான் ஆகியிருந்ததை நான் உணர்ந்து கொண்டேன். "சுற்றத்தார் அருகில் இல்லாதது பெரிய குறை" என்று பாலாஜி சொன்னது, எனக்கு வியப்பை அளித்தது. அதை ஏற்றுக் கொண்ட மனநிலையில் தானே வெளிநாட்டிற்கு வந்திருப்பார்கள்?

"சுற்றத்தாரை விட்டு வந்தது குற்ற உணர்வை ஏற்படுத்துகிறதா?" என்று கேட்டேன்.




அதற்கு நேரிடையான பதில் கிடைக்காவிட்டாலும், கோபால் "இங்கு இப்போது வேலைக்கு உத்தரவாதமில்லை, பாதுகாப்பில்லை" என்று சொன்னதில் அவர்களது ஆதங்கத்துக்குக் காரணம் புரிந்தது. இந்தியாவில் கற்பனை செய்ய முடியாத அளவுக்குப் பணம் சம்பாதிக்

கலாம் என்ற எதிர்பார்ப்புடன் அமெரிக்காவுக்கு வந்தவர்கள் இவர்கள். இப்போது அனைவருமே இந்தியாவுக்கு மூட்டைக் கட்டவிருப்பதாகச் சொன்னார்கள். அவர்களது அந்த முடிவுக்கு ஒரு வலுவான நம்பிக்கை இருப்பது சந்தேகத்திற்கு இடமில்லாமல் புரிந்தது. "இந்தியப் பொருளாதாரத்திற்கு இப்போது பொற்காலம். அங்கேயே எங்களுக்கு நல்ல சம்பளத்துடன் நல்ல வேலை கிடைக்கும்" என்றார்கள் மிகுந்த நம்பிக்கையுடன். மனித மனத்தின் விசித்திரத்தை வியந்தபடி நான் கிளம்பினேன்.



## இங்குதான் நிம்மதி

'நான் இங்கு அன்னியனாக உணர்கிறேன்' என்றார் கிருஷ்ணன். ஆனால் தாங்கள் அமெரிக்கர்களாகவே உணர்வதாக, பல ஸான்பிரான்ஸிஸ்கோ வாழ் தமிழர்கள் சொல்கிறார்கள். அமெரிக்கச் சூழலுக்கும் வாழ்வுக்கும், வேலை, கலாசாரத்துக்கும் பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் பழகிவிட்ட முப்பதிலிருந்து நாற்பதுகளில் இருக்கும் உயர் படிப்புப் படித்த மிழ்த் தம்பதிகள், குழந்தைகளை அமெக்கப் பள்ளியில் சேர்த்து அதன் அப்ழுக்கற்ற தரத்தை, மிக நாகரிகமான யிற்சியை ருசித்துவிட்டனர் பெற்றோர்ள். அவர்களின் பார்வை, தர்க்க நியாயம் காண்டது. சென்னை ஐ.ஐ.டி.யில் படித்து, பிறகு ஹார்வார்டில் மேற்படிப்பு படித்த

# அமெரிக்க டயரிக் குறிப்பு 7

(எனது மாமாவின் மகன்) அசோக் இந்தியாவில் தமிழ்ப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு இங்கு வேலை பார்க்க வந்தவன். இடையில் 1986ல் தாய்நாட்டுக்குத் திரும்பி விடுவோம் என்று இந்தியாவுக்குச் சென்றான். 'இரண்டு ஆண்டுகளுக்கு மேல் இருக்க முடியவில்லை' என்கிறான். "அமெரிக்காவில் நான் ஒதுக்கப்பட்டவனாக, அன்னியனாக உணர்ந்ததே இல்லை. இந்தியாவில் நான் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு காரணத்துக்காக ஒதுக்கப்பட்டேன். தமிழ் நாட்டில் நான் பிராமணன் என்பதால், கர்னாடகாவில் நான் தமிழன் என்பதால், பம்பாயில் நான் தென்னிந்தியன் என்பதால், அது தவிர, எந்த வேலைக்கும் கொடுக்க வேண்டிய லஞ்சமும், அங்கு இருக்கும் ஊழலும் வெறுப்பை அளித்துவிட்டது. இங்கு திறமை இருந்தால், நமது முன்னேற்றத்தை யாரும் தடுக்க முடியாது." ஆனால் அவனை மிகவும் பாதித்த ஒரு சம்பவமே இந்தியாவிலிருந்து கிளம்பும் எண்ணத்தைக் கொடுத்தது. அப்போதுதான் ராஜஸ்தானில் ரூப் கன்வரின் 'சதி' அமர்க்களப்பட்டது. அப்போது மடாதிபதிகளும், சங்கராச்சார்யர்களும் அதைக் கண்டனப்படுத்தாததும், 'சதி'யை ஆராதித்ததும், தன்னை அதிர்வடையச் செய்ததாக அசோக் சொன்னான். மனைவி ரேவதியுடன் அமெரிக்காவுக்குத் திரும்பிய அசோக், இன்று சான்பிரான்ஸிஸ்கோவில் சொந்தமாகத் தொழில் செய்கிறான். சௌகர்யமான வருமானம். இந்திய வேர்களை மறக்காத அமெரிக்கப் பிரஜைகளாக வாழ்வதில், எந்த முரண்பாட்டையும் உணர்வதில்லை என்கிறார்கள்.

"இந்தியாவை என் தாயைப் போல் நேசிக்கிறேன். அமெரிக்காவை என் மனைவியைப் போல் நேசிக்கிறேன்" என்கிறான் அசோக். ஸான் பிரான்ஸிஸ்கோ மிக அழகிய இடம். வருடம் முழுவதும் மிதமான சீதோஷ்ணம். இதன் அழகும் இங்கு கிடைக்கும் நிம்மதியும், இந்தியாவில் எங்களுக்குக் கிடைப்பதில்லை என்கிறார்கள். கிறித்துவ தத்துவமும் இந்திய தத்துவமும் பத்தொன்பது வயது மகன் அமர்நாத்துக்கு அத்துப்படி. மேற்கத்திய சங்கீதத்தை வயலினில் பழகும் பதிமூன்று வயது ரிஷிகேசுக்கு,

> "ரொம்பக் கொடுமையான தண்டனைங்க! மாத்தி வேற ஏதாவது தண்டனை கொடுங்க!"
>
> "அதெல்லாம் முடியாது! நம் ஊர் ரேஷன் கடை அரிசி மூட்டைகளில் இருக்கிற கல்லையெல்லாம் நீ பொறுக்கித்தான் ஆகணும்!"
>
> – உ. ராஜாஜி




கர்னாடக சங்கீதமும் பிடிக்கும். அவர்களது அரசியல்தான் உதைத்தது. மொத்தக் குடும்பமும் அமெரிக்கக் குடியரசுக் கட்சியின் ஆதரவாளர்கள். "குடியரசுக் கட்சி பழைமை வாதிகளின் கட்சி என்று தவறான கருத்து இருக்கிறது. அடிமை ஒழிப்பைக் கொண்டு வந்தது குடியரசுத் தலைவர் லிங்கன் என்பது எல்லோருக்கும் மறந்துவிட்டது" என்றார்கள். புஷ்ஷை விமர்சனம் செய்வதை அவர்கள் முன் னிலையில் நான் நிறுத்திக் கொண்டேன்.

## சீனா டவுன்


எங்கள் ஸான்ப்ரான்ஸிஸ்கோ மொத்தமுமே அழகு என்று இங்கிருப்பவர்கள், அசோக் ரேவதி உள்பட, பெருமைப் பட்டுக் கொள்வதில் நியாயம் இருக்கிறது. ஒவ்வொரு பாதையும், ஒவ்வொரு தெருவும், கொள்ளை அழகு. இயற்கை தேவதையின் பரிபூரண ஆட்சி கோலாகலத்துடன் நடக்கிறது. அது சோலையாகட்டும் ரெட்வுட் காடுகளாகட்டும், கடற்கரையாகட்டும், கண்ணுக்கு விருந்தளிக்காத இடமேயில்லை. "இந்தியாவுக்குத் திரும்பிப் போக வேண்டும் என்று ஏங்குகிறவர்கள் இந்த எழிலையெல்லாம் அவர்களது ஓய்வு நேரத்தில் கண்டு களித்திருந்தால், அவர்களது பார்வையே வேறாக இருந்திருக்கும். இந்த மண்ணுடன் அதிகத் தொடர்பு ஏற்பட்டிருக்கும்" என்றாள் ரேவதி. எந்த மண்ணும் எம் மண் என்கிற உணர்வுக்கு கலாபூர்வமான ஆன்மிகப் பார்வை தேவை என்று அவள் நினைப்பதாகத் தோன்றியது எனக்கு.

அதை நான் அறிவார்த்தமாக ஏற்றுக் கொண்டாலும், நிர்பந்தம் காரணமாக இங்கு வந்து சேர்ந்த பல ஆசிய இனங்கள் அமெரிக்க மண்ணைத் தமது மண்ணாக ஏற்றுக் கொண்டுவிட்ட யதார்த்தம், வெகு இயல்பாக நிகழ்ந்துவிட்ட ஒன்று. ஒரு நூற்றாண்டுக்கு முன் ரயில் பாதை போடும் கூலி வேலைக்கு, அமெரிக்காவுக்கு வந்து சேர்ந்த ஏழைச் சீனர்களுக்கு வேலை முடிந்ததும் சீனாவுக்குத் திரும்பிச் செல்ல ஆர்வம் ஏற்படாமல் போனதற்கு சீனாவின் கட்டுப்பாடான அரசியல் சூழல் காரணமாக இருக்கலாம். அல்லது அமெரிக்க வாழ்வு தந்த சௌகரியமும் சுதந்திர உணர்வும், இங்கு தங்கிவிடத் தூண்டியிருக்கலாம். எல்லாவற்றையும் விட, மிக அதிக அளவில் சீனர்கள் வந்து சேர்ந்தது, தாங்கள் ஓர் அன்னிய மேற்கு உலகில் அனாதைகள் இல்லை என்ற பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தியிருக்கும். நியூயார்க்கில் நான் பார்த்திருக்கும் சீனா டவுனைப் போலவே, ஸான் பிரான்ஸிஸ்கோவிலும் சீனர்கள் வாழும் சீனா டவுன் இருக்கிறது.

(தொடரு



• மொபைல் ஃபோட்டோ டிஸ்ப்ளே.



• ராதாகிருஷ்ணன்

• மூத்த தி.மு.க தலைவர்கள், தயாநிதி மாறனிடம் 'கறை வேட்டி கட்டிக் கொண்டு பிரசாரத்துக்கு வாருங்கள்' என்று பலமுறை சொல்லியும் ''பேண்ட்தான் சௌகரியமா இருக்கு'' என்று சொல்லி விட்டாராம்.

• தென்சென்னையில் வசிக்கும் எஸ்.ஐ.இ.டி கல்லூரியில் படித்த ஆயிரக்கணக்கான முன்னாள் மாணவிகளின் பெற்றோருக்குக் கடிதம் எழுதி, வாக்கு சேகரிக்கிறார் பதர் சயீத்.

• அரக்கோணம் தொகுதி பா.ம.க வேட்பாளர் வேலுவின் வீட்டில், போலீஸ் ஒரு மின்னணு சாதனத்தைப் பொருத்தியிருக்கிறது. அது ஒட்டுக் கேட்கும் கருவியாக இருக்குமோ என்று சந்தேகப்படுகிறது வேட்பாளரின் குடும்பம்.

• "இன்றைக்கு நதிநீர்ப் பிரச்னையைக் காட்டி, பா.ஜ.க அணிக்கு ஆதரவு தெரிவிக்கிறார் ரஜினி. இதற்காக 1983ம் ஆண்டு முதலே போராடி வருகிறேன். சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல வழக்குப் போட்டு, சொந்தப் பணத்தை லட்சக்கணக்கில் செலவு செய்து இருக்கிறேன்'' என்று புலம்புகிறார், தி.மு.க செய்தித் தொடர்பாளரான கே.எஸ். ராதாகிருஷ்ணன்.

• சென்னையைச் சேர்ந்த பிஸினஸ் புள்ளி சந்திர மோகனுக்கு தேர்தலையொட்டி ஒரு ஐடியா வந்தது.

# பிட்டா படிங்க!

Mobile photo display என்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தொலைக்காட்சியில் ஸ்க்ரோல் ஓடுவது போல், தேர்தல் பிரசார விளம்பரங்களை அமைத்து இருக்கிறார். மாருதி ஆம்னியில் இதைப் பொருத்தலாமாம்!

- கௌசி

படம்: ராஜன்




# ராயபுரம் ராஜேஸ்வரி

| | | |
|---|---|---|
| கட்சி | : | காங்கிரஸ் |
| தொழில் | : | மீன் வியாபாரம் |
| வருமானம் | : | நாள் ஒன்றுக்கு அதிகபட்சமாக நூறு ரூபாய் |
| குடும்பநிலை | : | கை கொடுப்பது பழைய சாதமும், கருவாடும்தான். |
| கட்சியில் குரு | : | காங்கிரஸ் ஸீனியர் பிரமுகர் ரமணிபாய். |
| சிறைக்குப் போனதுண்டா? | : | பல போராட்டங்கள், மறியல்கள் அனுபவம் உண்டு. |
| கட்சியில் பொறுப்பு | : | வட்டக் கமிட்டித் தலைவர், சேவாதள சர்க்கிள் கமிட்டித் தலைவர், இப்போ சின்ன ஐயா (ஜி.கே. வாசன்) ஏதாவது பொறுப்பு கொடுப்பார் என்று நம்பிக்கை |
| கட்சிக்கு செலவழிப்பதுண்டா? | : | கந்துவட்டிக்குப் பணம் வாங்கி, போஸ்டர் அடித்ததுண்டு. இப்போது சுவர் பிடித்து எழுத செலவு செய்தது ஐநூறு ரூபாய் (வட சென்னைத் தலைவர் மனோ கொடுத்துடுவாரு) |
| பிடித்த தலைவர்கள் | : | காமராஜ், மூப்பனார், ஜி.கே. வாசன். |
| நெகிழ்ந்து போனது | : | ஒரிஸ்ஸாவில் ஒரு மாநாட்டுக்குப் போனபோது ராஜீவ்காந்தி 'தமிழ்நாடா' என்று கையைப் பிடித்துக் கொண்டது. |
| உறுதி மொழி | : | நாட்டுக்கு உயிர் கொடுத்த இந்திரா, ராஜீவ் நினைவோடு, மூவர்ணக் கொடி பிடித்து உயிர் வாழ்வது. |

- கௌசி

படம்: ராஜன்

With Best Compliments From

# தினமலர்

## தேசிய தமிழ் நாளிதழ்

# DINAMALAR

**National Tamil Daily**

***Printed Simultaneously From***

■ Chennai ■ Vellore ■ Pondicherry ■ Erode
■ Coimbatore ■ Tiruchi ■ Madurai
■ Tirunelveli ■ Nagercoil
■ Salem

விற்பனையில் சாதனை படைத்து வரும் தரமான **No.1** நாளிதழ்

Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka

அனுபவியுங்கள் ஜீவா.
ஓர் ஆயுர்வேதிக் சோப்பு
27 மடங்கு
சிறப்பானது,
உங்கள் சருமம் புத்துயிர் பெற.



27

அனுபவியுங்கள் ஜீவா. உங்கள் சருமத்திற்கு உகந்த சோப்பு. ஜீவாவிலுள்ள 27 அத்தியாவசிய ஆயுர்வேத உட்பொருள்கள் சருமத்திற்கு ஊட்டமளித்து, மெருகூட்டி, பாதுகாக்கிறது. இதன் ஒப்பற்ற நுரை சரும துவாரங்களை திறப்பதோடு மட்டுமின்றி, இதில் நிறைந்த ஆயுர்வேத நற்குணங்கள் சருமத்தில் ஊடுருவிப் பாய்கிறது. எனவே உங்கள் சருமத்தில் இளமை, மென்மை மற்றும் பொலிவு பூத்துக் குலுங்குகிறது. மேலும் சருமத்திற்கு தருவதோ புத்துயிர்.




சருமம் புத்துயிர் பெறும்

From the house of Jyothy Laboratories Ltd. Shivshakti Estate, Marol, Andheri (E), Mumbai - 59.

Situations/JLL-JEEVA/BW/2002 TAM